பவ பூதியின்

# உத்தர ராம சரிதம்

(வடமொழி நாடகம்)

மொழிபெயர்ப்பு

க. சந்தானம், எம்.ஏ, பி.எல்.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

பவ பூதியின்

# உத்தர ராம சரிதம்

(வடமொழி நாடகம்)


மொழிபெயர்ப்பு

க. சந்தானம், எம்.ஏ, பி.எல்.,

(முன்னாள் போக்குவரத்து அமைச்சர்)



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி

சென்னை - 600 113

# Bibliographical Data



| | | |
|---|---|---|
| Title | : | **Uttara Rāma Caritam** |
| Author | : | **Bhavaboothi** |
| Translator | : | **K. Santhanam** |
| Publication | : | International Institute of Tamil Studies, Tharamani, Chennai - 600 113. |
| Publication Number | : | 295 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Paper used | : | TNPL Super printing - 16 Kg. |
| Size of the book | : | 1/8 Demmy |
| Printing types used | : | 11 Pt. |
| No. of Copies | : | 1000 |
| No. of Pages | : | xiv + 122 |
| Price | : | Rs. 30/- |
| Printers | : | **PAVAI PRINTERS (P) LTD.,** Chennai - 14. |
| Subject | : | History of Rama |

---

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் சிறந்த மொழிபெயர்ப்பு நூல் வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.

# குறிப்பு

வடமொழிக் கவிகளில் பவபூதியைக் காளிதாஸனுக்குச் சமமாகவே கூறலாம். பவபூதி இயற்றிய மூன்று நாடகங்களில், உத்தர ராம சரிதமே சிறந்தது. இதைப்போல் கருணரசம் நிரம்பிய நூல் எங்கும் இல்லை என்று கூறுவது மிகையன்று. திருச்சிச் சிறையில் இதைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு எனக்கு அவகாசம் கிடைத்தது.

வடமொழி நூலை வைத்துக்கொண்டு படிப்போருக்குப் பிரயோஜனமாக இருக்கவேண்டும்; தனியாகப் படிப்போருக்கும் இனிக்கவேண்டும் என்ற இரண்டு நோக்கங்களுடன் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மூலத்தை வைத்துக்கொண்டு கும்ப கோணம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, திண்டுக்கல் ஸ்ரீ கணேசன் இவர் களால் பரிசோதிக்கப்பட்டது. தமிழ் நடையை மதுரை ஸ்ரீ கிருஷ்ணசாமி பாரதியார் சோதித்து உதவினார். இந்த நண்பர் களுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**க. சந்தானம்.**

# Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title | : | **Uttara Rāma Caritam** |
| Author | : | **Bhavaboothi** |
| Translator | : | **K. Santhanam** |
| Publication | : | International Institute of Tamil Studies, Tharamani, Chennai - 600 113. |
| Publication Number | : | 295 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Paper used | : | TNPL Super printing - 16 Kg. |
| Size of the book | : | 1/8 Demmy |
| Printing types used | : | 11 Pt. |
| No. of Copies | : | 1000 |
| No. of Pages | : | xiv + 122 |
| Price | : | Rs. 30/- |
| Printers | : | **PAVAI PRINTERS (P) LTD.,** Chennai - 14. |
| Subject | : | History of Rama |

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் சிறந்த மொழிபெயர்ப்பு நூல் வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.

# குறிப்பு

வடமொழிக் கவிகளில் பவபூதியைக் காளிதாஸனுக்குச் சமமாகவே கூறலாம். பவபூதி இயற்றிய மூன்று நாடகங்களில், உத்தர ராம சரிதமே சிறந்தது. இதைப்போல் கருணரசம் நிரம்பிய நூல் எங்கும் இல்லை என்று கூறுவது மிகையன்று. திருச்சிச் சிறையில் இதைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு எனக்கு அவகாசம் கிடைத்தது.

வடமொழி நூலை வைத்துக்கொண்டு படிப்போருக்குப் பிரயோஜனமாக இருக்கவேண்டும்; தனியாகப் படிப்போருக்கும் இனிக்கவேண்டும் என்ற இரண்டு நோக்கங்களுடன் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மூலத்தை வைத்துக்கொண்டு கும்ப கோணம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, திண்டுக்கல் ஸ்ரீ கணேசன் இவர்களால் பரிசோதிக்கப்பட்டது. தமிழ் நடையை மதுரை ஸ்ரீ கிருஷ்ணசாமி பாரதியார் சோதித்து உதவினார். இந்த நண்பர்களுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

க. சந்தானம்.

**முனைவர் இராமர் இளங்கோ,**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - *600 113.*

# அணிந்துரை

வடமொழியில் நாடகத்தின் தோற்றம் தெய்வீகச் சார்புடையதாகச் சுட்டப்படுகிறது. நாடகம் ஐந்தாவது வேதமாகவும் கருதப்படுகிறது. வடமொழியில் இருக்கு வேதத்தில் பத்தாம் மண்டலத்தில் இயமன், இயம்பி, புரூவஸ், ஊர்வசி, பார்க்கவன், அகஸ்தியர், லோபாமுத்திரை, அவர்களின் பிள்ளை இந்திரன், அதிதி, வாமதேவன், இந்திராணி, விருஷாசுபி, விசுவாமித்திரர், வசிட்டர் அவர்கள் பிள்ளைகள் இடையே நிகழ்ந்த உரையாடல்கள் நாடகப் பாங்கில் அமைந்துள்ளன.

எனினும், இந்தியாவின் இதிகாசங்களான மகாபாரதம், இராமாயணம் முதலியவற்றை மக்களுக்கு நடித்துக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக வடமொழியில் நாடகம் முகிழ்ந்தது என்பர்.

காலப்போக்கில் நாடகத்தில் இடம்பெற்ற உரையாடல்களுடன் இசையும் இடம் பெற்றது. வடமொழி நாடக இலக்கணத்தார் நாடகங்களில் உவமை, உருவகம், தீபகம், யமகம் முதலிய நாடக அணிகலன்கள் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

மக்கள் மகிழும் வண்ணம் அரங்கில் நடித்துக் காட்டப்படுகின்ற நாடகம் 'ரூபகம்' என்ற பிறிதொரு பெயராலும் அழைக்கப்பட்டது. எனவே தனஞ்சயர் தன் நூலுக்கு 'தசரூபகம்' எனப் பெயரிட்டார். 'தசம்' எனும் வடசொல்லுக்கு, 'பத்து' என்பது பொருளாகும். பரத முனிவர் எழுதிய நாட்டிய சாத்திரத்தில் நாடகம் எனும் ரூபகம் பத்து வகைப்படும் என்று சுட்டப்பட்டுள்ளது.

1) நாடகம், 2) பிரகரணம், 3) பாணம், 4) பிரஹசனம், 5) டிமம், 6) விநியோகம், 7) சமவகாரம், 8) வீதி, 9) அங்கம், 10) ஈகா மிருகம் என்பவை அவையாகும்.

மேலும் வடமொழி நாடக இலக்கண ஆசிரியர்கள் கதைப் போக்கின் வளர்ச்சியில் ஐந்து கார்ய நிலைகள் (அவஸ்தைகள்) ஐவகை அர்த்தப் பிரக்ருதிகளுடன் சந்தித்துப் பின் ஐவகைச் சந்திகளைத் தோற்றுவிக்கின்றன என்பர். ஒரு காரியத்தின் நிலைகள்

1) ஆரம்பம் (தொடக்கம்)
2) யத்னம் (முயற்சி)
3) பிராப்தி ஆசா (காரியத்தின் பயனைப் பெறமுடியும் என்ற பேரவா)
4) நியதாப்தி (பயன் முடிவு)
5) பலாகமம் (பயன் பெறுதல்)

என ஐந்தாக அமையும்.

அவை 1) பீஜம் (காரியத்தின் விதை நிலை), 2) பிந்து (தொடர்ந்த கசிவு நிலை), 3) பதாகா (சிறப்புப் பகுதிக்கு உறுதுணையாகும் சிறு நிகழ்ச்சி) 4) ப்ரகா (துணை நிற்பதால் பயன்நிகழும் என்ற பெருநோக்கு) 5) காரியம் (நன்கு வளர்ந்த முழுக் கதையின் அமைப்பு ) என ஐந்தாக விரியும்.

இவ்வைந்தும் அர்த்த பிரத்கிருதிகளுடன் ஒன்று சேர்ந்து சந்திகள் என்ற கதைத் திருப்பங்கள் ஐந்து தோன்றுகின்றன. அவை 1) முகம், 2) பிரதிமுகம், 3) கர்ப்பம், 4) விமர்சம், 5) நிர்வஹனம் என்பன.

பல கருத்துக்களுடனும் சுவைகளுடனும் தோன்றிய கதைக்குக் காப்பிய அமைப்புற்றுத் தோற்றுவித்த கரு (பீஜம்) தோன்றுதலும் மறைதலும் என்ற நிலையில் விளங்க அதை மேலும் நிலைநிறுத்தி வெளிக்கொணர்தல் 'பிரதிமுகம்' என்ற சந்தியாகும். கருவின் முளை எங்கே இருக்கின்றதோ அல்லது இல்லையோ என்று பல்வகையில் தேடிக் கண்டுபிடித்தல் 'கர்ப்பம்' என்ற சந்தியாகும். உண்மையாகக் கரு முற்றி

முளைத்தோ, பொய்யாக அங்ஙனம் ஒரு தோற்றத்தைத் தோற்றுவித்தோ ஆராய்வதற்குரிய ஒரு நிலையை ஏற்படுத்துவது 'விமர்சம்' என்ற சந்தியாகும். கருப்பொருளை ஒட்டிச்சிறப்புடன் விளங்கி அதன்பின் பயன்தரும் தகுதி வாய்ந்தவை ஒன்றாகிப் பயனை விளைவிப்பது 'நிர்வஹனம்' என்ற சந்தியாகும். *(வடமொழி நாடக இலக்கிய வரலாறு - ப. 12)*

வடமொழி நாடகம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் முழு வடிவம் பெற்றிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

'நிருத்' என்னும் வினையடிப்படையில் 'நாடகம்' என்னும் சொல் தோன்றிற்று என்பர். 'நிருத்' என்னும் சொல்லுக்குக் கூத்தாடுதல் என்பது பொருள். வடமொழியில் நாட்டியம் நிருத்தியம், நிருத்தம் எனும் மூன்று சொற்கள் ஆடற் கலையோடு தொடர்புடையதாகக் குறிக்கப்படுகிறது. இம்மூன்றில் நாட்டியம் என்பது நாடகத்துடன் உறவுடையது. உரையாடலும் நடிப்பும் இணைந்த ஒன்று. உரையாடலின்றி நடிப்பு மட்டும் அமையப் பெற்றது 'நிருத்தியம்' ஆகும். ஆடல் மட்டும் இடம் பெற்றது 'நிருத்தம்' எனப்படும்.

பரத முனிவரின் நாட்டிய சாத்திரம் நாடகம், நான்கு வகையான விருத்திகளைக் கொண்டு அமைய வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. நாடகத்தின் இயல்பு 'விருத்தி' எனக் கூறப்பட்டது. அது சாத்வதி, ஆரபடி, கைசிகி, பாரதி என நான்காகும்.

அறம் பொருளாகத் தெய்வ மானிடர் தலைவராக வருவது 'சரத்வதி' எனப்படும். பொருள் பொருளாக வீரராகிய மானிடர் தலைவராக வருவது ஆரபடி எனப்படும். காமம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வருவது கைசிகி எனப்படும். கூத்தன் தலைவனாக நடன்நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது பாரதி எனப்படும்.

வடமொழி நாடக இலக்கியம் வளர உழைத்த அறிஞர் பெருமக்களுள் பவபூதியும் ஒருவர் ஆவார். வடமொழி நாடக இலக்கிய வரலாற்றில் காளிதாசர், சூத்திரகர், பாசர், பவபூதி, விசாகதத்தர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பவபூதி விதர்ப்ப நாட்டில் காசிப கோத்திரத்தில் பிறந்த அந்தணர். இவருடைய தந்தையார் நீலகண்டர், தாயார் ஜதுகர்ணி. இவருடைய இயற்பெயர் சிறீகண்டன். வேதத்திலும் ஆகமங்களிலும் புலமை மிக்கவர். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கன்னோசி நாட்டை ஆண்ட யசோவர்மன் எனும் மன்னன் இவரை ஆதரித்தான்.

பவபூதி மகாவீர சரிதம், உத்தர ராம சரிதம், மாலதீமாதவம் முதலிய நாடகங்களை எழுதியுள்ளார். முதலிரு நாடகங்கள் இராமாயணக் கதையைப் பின்பற்றி எழுதப்பட்டவை. பின்னர் அமைந்த 'மாலதீமாதவம்' என்பது அக்காலத்தில் வழக்காற்றிலிருந்த கதையை எடுத்துப் பவபூதி தம் கற்பனையால் மெருகேற்றி எழுதியது. இந்நாடகம் வடமொழியில் 'பிரகாணம்' என்ற நாடக பகுப்பைச் சார்ந்தது.

இராமாயணம் உத்தரகாண்டம் நாற்பத்து மூன்றாம் சருக்கம் முதல் தொண்ணூற்றைந்தாம் சருக்கம் வரையுள்ள கதை நிகழ்ச்சிகள் உத்தரராம சரிதத்தில் இடம்பெற்றுள்ளன. அயோத்தி மன்னனான இராமன், அவனுடைய மனைவி சீதையைக் குறித்து ஊரில் பழிதூற்றுவதைக் கேட்டான். உடனே சீதை கருவுற்று இருந்ததையும் எண்ணிப்பார்க்காமல் காட்டிற்குப் போகச் செய்தான். அதன்பின் வால்மீகி முனிவரின் அறிவுரைப்படி சீதையுடன் மீண்டும் சேர்ந்தான்.

உத்தரராம சரிதத்தில் பவபூதி இயற்கை அழகை வருணிக்கும் திறம் சிறப்புடையது. இயற்கையை வருணிப்பதில் காளிதாசரைக் காட்டிலும் பவபூதி சிறந்து விளங்குகிறார் என்பர் அறிஞர்.

நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு பிரிந்திருந்த இராமனும் சீதையும் சந்திக்கும் காட்சியையும் பவபூதி உருக்கமாக அமைந் துள்ளார். ஆயின் காளிதாசர் சகுந்தலையில் நீண்ட ஆண்டு களாகப் பிரிந்திருந்த துசியந்தன் சகுந்தலையைச் சந்திக்கும் காட்சியைப் பவபூதியைப் போல உருக்கமாக அமைக்க வில்லை என்பர் அறிஞர்.

காளிதாசர் குப்த மன்னரால் எல்லாச் சிறப்புகளையும் வாழ்க்கை வசதிகளையும் பெற்றார். ஆயின் பவபூதிக்கு அத்தகைய வாய்ப்புகள் கிடைக்கவில்லை. காளிதாசர் வாழ்க்கை யில் துன்பங்கள் இல்லை. பவபூதி வாழ்க்கையில் துயரங் களைச் சந்தித்தவர். எனவே, காளிதாசரைக் காட்டிலும் வாழ்க்கை யைப் பற்றிய நல்ல பட்டறிவு பவபூதிக்கு ஏற்பட்டது. பவபூதி பாத்திரப்படைப்புகள் காளிதாசர் பாத்திரப்படைப்புகளுக்கு மாறுபாடாக அமைந்தன. ''காளிதாசரைப் போன்று காதல் உணர்வுமிக்க துசியந்தனையோ, தேவலோக ஊர்வசியோடு காதல் லீலை புரியும் புரூரன் போன்ற மன்னனையோ பவபூதி படைக்கவில்லை. மனிதருள் உயர்ந்த மனிதனாக வாழ்ந்த இராமனுக்கும், பெண்கள் திலகமாய் வாழ்ந்த சீதைக்கும் உண்டான அவலக் கவலைக் கையாறுகளைப் பற்றியே பவபூதி நாடக மெழுதினார்''. (வடமொழி இலக்கிய வரலாறு. ப. 295) என்று பவபூதி பாத்திரப் படைப்புப் பற்றி நவாலியூர் நடராசன் மதிப்பீடு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பவபூதியின் 'உத்தர ராம சரிதம்' எனும் இந்த வடமொழி நாடகத்தை முன்னாள் அமைச்சர் திரு. க. சந்தானம் அவர்கள் ஆங்கில ஆட்சியை எதிர்த்துச் சிறையில் இருந்தபோது தமிழில் மொழி பெயர்த்தார். இவரது மொழிபெயர்ப்பு சிறப்புடையதாக அமைந்துள்ளது. விறுவிறுப்பு குன்றாது, இவர் மொழி பெயர்த் திருக்கும் திறம் பாராட்டிற்குரியது. சென்னையில் உள்ள அல்லை யன்ஸ் கம்பெனி இந்நூலை 1944 - இல் முதல் பதிப்பாகவும் 1949-இல் இரண்டாம் பதிப்பாகவும் வெளியிட்டது. மூதறிஞர் இராசாசி இந்நூலுக்கு ஆய்வு நிலையில் ஒரு முன்னுரை வழங்கி யுள்ளார்.

நீண்ட ஆண்டுகளாக மறுபதிப்பு செய்யாமல் இருந்த இந்நூலை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மறுபதிப்புச் செய் வதற்கு, இசைவு அளித்த அல்லையன்ஸ் கம்பெனி நிறுவனத் திற்கு எங்கள் நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. த.இரா. சீனிவாசன், இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறந்த மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் இந்நூல் வெளி வர நிதி உதவி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ச. நாகராசன் அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

*13.7.1998* **இயக்குநர்.**

# முன்னுரை

## சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
### எழுதியது

நாரதர் சொல்லி வால்மீகி இயற்றினார்; அதில் ஒருவிதத் தவறும் இருக்கமுடியாது: ஓர் எழுத்து விடாமல் எல்லாம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும், என்பதாயிருந்தால் எனக்கு ஒன்றும் சொல்ல இடமில்லை. அப்படியில்லை, உனக்குத் தோன்றியதைத் தோன்றியவாறு சொல்லலாம் குற்றமில்லை, என்று பெரியோர் இடம் கொடுத்தால் ராமாயண உத்தர காண்டத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நானும் எவ்வளவோ முயற்சி செய்துதான் பார்த்தேன், ஸ்ரீராமன் - உலகத்துக்கு வழிகாட்ட அவதரித்த கடவுள் - சீதையை அரும்பாடுபட்டு இலங்கையிலிருந்து மீட்டுக் கொண்டு வந்த பின், ஊராரின் வம்புப் பேச்சைக் கேட்டுக் காட்டுக்கு அனுப்பிவிட்டான் என்கிற கொடூரக் கதையை என் மனசுக்குச் சமாதானப் படுத்திக்கொள்ள முடியவேயில்லை. மிக்க அன்புட னும் பக்தியுடனும் முயற்சி செய்திருக்கிறேன். பெரியோர்கள் என்னை, ''நாஸ்திகன், சூனாமானாக்காரன்'' என்று சொல்லக் கூடாது. உண்மையில் இந்தக் கதையைச் சகிக்க என்னால் முடியவில்லை. நாஸ்திகனாகவிருந்தால் ஒருவேளை சகித் திருப்பேன்.

ராமாயணத்தில் முதல் அத்தியாயத்தில் கதை முழுதும் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. அதில் இந்த அனர்த்த விஷயம் சொல்லப் படவில்லை. வால்மீகி முனிவரே அந்த முதல் அத்தியாயத்தை ஆக்கியதாக வைத்துக்கொண்டாலும் சரியே, அவர் சிஷ்யன் ஒருவன் அல்லது வேறு மகான் அந்த ராமாயணத் தோற்றுவாயைப் பாடியதாக வைத்துக்கொண்டாலும் சரியே, தேவியை வீட்டை விட்டுத் துரத்திவிட்ட காண்டம் அவர்களுக்கு

அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பது வியக்தமாகத் தெரிகிறது. அதைப்பற்றி அந்தக் கதைச் சுருக்கத்தில் பேச்சே கிடையாது.

நாடு நகரம் முழுதும் அறிவும் விவேகமும் சீலமும் நிறைந்த ஜனங்கள், எல்லோரும் தர்மாத்மாக்கள், வெகு சாஸ்திரங்களை அறிந்தவர்கள் என்றும், அற்ப குணமுள்ளவன், வித்தை பெறாதவன், நாஸ்திகன், துஷ்டன், மருந்துக்குக்கூட ஒருவன் அகப்படமாட்டான் என்றெல்லாம் ஓயாமல் பாடப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட ஜனங்கள் சீதை ஊருக்குத் திரும்பிவந்ததும் பான்மையிழந்து இவ்வளவு கேவலமாகப் போனது எப்படி? ஸ்ரீராமச்சந்திரன் அரசாண்டுவந்த அயோத்தியா நகரம், நம்கலிகாலச் சென்னபட்டணம், திருச்சிராப்பள்ளியை விடக் கெட்ட நிலைக்கு எவ்வாறு வந்துவிட்டது? இந்தக் கலிகாலத்தில் நம்மைப்போன்ற தாழ்ந்த மதியும் சீர்கெட்ட பண்பும் கொண்டவர்களுங்கூடச் சொல்லத் துணியாத பேச்சை, அயோத்தியா வாசிகள் ராமனுடைய பிரியதேவியைப்பற்றிப் பேசினார்கள் என்றால் எவ்வாறு ஒப்புக்கொள்வது? யாராவது அப்படிப்பேசினாலும் அதை அந்த ராமன் ஏன் காதில் போட்டுக்கொண்டான்? அந்தப் பாமர ஜனங்கள் கூடச் சீதையைக் காட்டுக்கு அனுப்பச் சொல்லவில்லையே; ஏன் ஒரு விசாரணையுமின்றி அக்கிரமமாக அவ்வாறு ராமன் செய்யத் துணிந்தான்? இதை எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ள முடியாது. இதனால்தான் நன்னெறி பயில்வதற்கு இந்தக் கதை உதவாது என்று நம்முடைய பெரியோர்கள் இந்தக் கட்டத்தை, பிரயோகத்தினின்று தள்ளிவிட்டார்கள். ஆழ்வார்களும் இதை எடுத்துப் பாடாமல் நீக்கிவிட்டார்கள்.

இம்மாதிரியான ஒரு பெரும் அநீதியை ஸ்ரீராமசந்திரன் தன் தேவிக்குச் செய்ததாக எப்படியோ ஒரு கதை கர்ண பரம்பரையாகச் சொல்லிவந்து அந்த காலத்திலும்கூட வால்மீகி முனிவரையும் தடுமாறச் செய்திருக்கவேண்டும். புண்ணிய கதையாகிய ராமாயணத்தைப் பாட உட்கார்ந்தபோதே இந்தப் பொல்லாத ஐதிகத்தை என்ன செய்வது என்று அவர் யோசித்திருக்கவேண்டும். அதற்காகவே முனிவர் யுத்த காண்டத்தின் முடிவில் வேண்டாத ஓர் அக்கினிப் பரீட்சையை அமைத்து

அத்துடன் அந்த அபத்தம் ஒழியும் என்று எண்ணினார்போல் தோன்றுகிறது. ஆனாலும் அவர் எண்ணமும் முடிவுபெற வில்லை. உத்தரகாண்டம் யாரோ எழுதி ராமாயணத்துடன் சேர்ந்தே போயிற்று.

ராமனைப் போன்ற ஒரு தீரன் அவ்வாறு செய்திருக்க மாட்டான் என்று நன்றாக உணர்ந்தும், சோக ரஸத்தில் மனிதர் களுக்குள்ள பிரியத்தினால், இந்தக் கட்டத்தைப் படித்தும் கேட்டும் வருகிறார்கள். ஒரு கொலைக் கதையையும், திருடன் சரித்திரத்தையும் கூட அழகும் ரஸமும் கொண்டு விளங்கும்படி செய்யலாம். அவ்வாறே இதுவும். ஊர்வம்புக்குப் பயந்து ராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பியது ராவணன் செய்த செயலை விடப் பெரும்பாவச்செயல். ராவணன் அபாயங்களைப் பொருட் படுத்தாமல் இந்தக் கெட்ட காரியத்தில் இறங்கி ஜடாயுவோடு போர்புரிந்து அவனை வென்று சீதையை இலங்கைக்குத் தூக்கிப் போனான். துஷ்டத்தனமானாலும் தைர்யம் கலந்த செயல். ராவணன் காமவெறி கொண்டவனானாலும், இலங்கையில் தேவியைப் பலாத்காரம் செய்ய எண்ணங் கொள்ளவில்லை. அசோகவனத்தில் வைத்து அவள் அன்பைப் பெற முயன்று பல நாட்கள் தன் வெறியை அடக்கியே வந்தான். அதற்காக உயிரை யும் நீத்தான். ஆனால் இந்த உத்தரராம சரித்திரத்தில் வெறும் ஊர் வம்பைக் கேட்டு ராமன் சீதையை, நீதி உண்மை எதையும் கருதாமல் காட்டுக்கு அனுப்பிவிட்டான் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் இது நடந்திருந்தால் இறந்த ஜடாயு மீண்டும் உயிர்கொண்டு எழுந்து ராமனுக்கு நல்ல புத்தி புகட்டியிருப்பான். ''மகனே, இது தகாது, இது பயங்கொள்ளித் தனம், இது தர்மத்தைக் கொன்றதாகும்'' என்று சொல்லித் தடுத்திருப்பான். எங்கே எச்சமயத்திலாயினும் ராம கதாநாதம் கேட்ட மாத்திரத்தில் உடனே அவ்விடத்திற்குப் பிரஸன்னமாகும் சிரஞ்சீவி அனுமான், சமுத்திரத்தை விளையாட்டாகக் குதித்துத் தாண்டி இலங்கையில் துக்காக்கினியில் துடித்துக் கொண் டிருந்த ஜானகியின் துயரத்தைத் தீர்த்த வீரன், ஏற்படக்கூடாத இடத்தில் மறுபடியும் அவளுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை அறிந்தும் சும்மா தன்னுடைய பாரிஜாத மரத்தடியில் உட்கார்ந்து சகித்திருக்க மாட்டான். கண்களில் ததும்பிய நீரைத் துடைத்து ஒரே தாவாகத்

தாவி அநியாயச் செயலை எப்படியாவது தடுத்திருப்பான். அவனால் ஆகாத காரியம் ஒன்றில்லை. அவனுக்குத் தோன்றாத யுத்தியும் இல்லை. "அப்பன் செய்த காரியம் தவறு; ஊரைக் கொளுத்திவிடுவேன்; கிழவனைச் சிறையில் வைத்து உனக்குப் பட்டம் கட்டிச் சிம்மாதனத்தில் ஏற்றுவேன்" என்று ராம னிடம் சொல்லி ஆத்திரப்பட்ட லஷ்மணன் சீதைக்கு நேர்ந்ததைக் கண்டு சும்மா இருந்திருப்பானா? யார் சகித்துக் கொண் டிருந்த போதிலும் பரதன், மகா பரிசுத்த ஆத்மா, கொடுமையைக் கண்டு மனம் உருகிப் பெருகும் பரதன் இந்த அநியாயத்தைச் சகித்திருப்பானா? ஒருநாளும் முடியாது.

இதென்ன வாதம். அனுமான் முதலியோர்களின் வர லாற்றை அப்படியே உண்மையாக வைத்துக்கொண்டு கதையை வளர்த்திப் பேசுவது ஒரு வாதமாகுமா என்று இந்தக் காலத்தில் கேட்கத் தோன்றும். இது பொருத்தமற்ற சமாதானம் என்பது என் அபிப்பிராயம். அனுமனைத் தள்ளிவிட்டு ராமாயணக் கதையை வைத்துக் கொள்ளமுடியுமா? உத்தர காண்டத்தை விட்டுவிட இஷ்டமில்லாமற் போனால் ராமாயண மாலையில் ரத்தினங்களாக ஜொலிக்கும் வீரபுருஷர்களையும் அவர் பண்புகளையும் வெறுங்கதையென்று தள்ளிவிடவேண்டியதாகும். அனுமானும் லஷ்மணனும் பரதனும் இருக்கச் சீதையை இம்மாதிரியாக ஊரார் பேச்சை ஆதாரமாகக் கொண்டு ராமன் அவமானப்படுத்திக் கொடுமை செய்தான் என்பது பொருத்தமற்றகதை.

ஆயினும், பவபூதி என்ற பேராசிரியன் பொருத்தமற்ற இந்தக் கதையை ரஸம் புகுத்திய அழகிய நாடகமாகச் சம்ஸ் கிருதத்தில் இயற்றினான். அது மிகவும் புகழ்பெற்ற நூல். நண்பர் சந்தானம் சென்ற வருஷத்தில் என்னுடன் சிறையிலிருந்த காலத்தில் அதைத் தமிழில் எழுதிமுடித்தார். மிகவும் சாமார்த் தியமாக வடமொழி நூலின் அழகு குறையாதபடி மொழி பெயர்த்திருக்கிறார். வடமொழி நூலைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது சாதாரண வழக்கில் இல்லாத சம்ஸ்கிருத மொழிகளும் சமஸ்க்கிருத இலக்கணமும் நடையும் கலந்து தமிழின் பண்புக்குப் பொருந்தாத வகையில் எழுதிவிடுவது வழக்கம். சந்தானம் அந்தக் குற்றத்திற்கு இடம் கொடுக்காமல் மிகவும் அழகான தமிழில் நூலை எழுதியிருக்கிறார். சம்ஸ்கிருதம்

அறியாதவர்களும், ஓரளவு சம்ஸ்கிருதம் கற்று முதநூலையும் பக்கத்தில் வைத்துப் படிப்பவர்களும், ஆக இருசாரரும் நல்ல பயன் பெறும் முறையில் எழுதியிருக்கிறார்.

பவபூதி தன் சமார்த்தியத்தை உபயோகித்துப் பழைய கதையை ஓரளவு மாற்றிவிட்டான். ராமன் காட்டுக்குச் சென்று தேவியையும் லவகுசர்களையும் சந்தித்து அயோத்திக்கு அழைத்து வந்துவிடுகிறான். இதனால் மனத்துக்கு ஓரளவு சாந்தி உண்டாகிறது. அசல் ராமாயணத்தில் சேராத இந்தக் கதையை எவ்விதம் மாற்றினாலும் குற்றம் இல்லையல்லவா? ஆகையால் தன் கற்பனா சாமார்த்தியத்தை உபயோகித்து ஊர்வம்புக்குப் பயந்து கதையின் அவலட்சணத்தைக் குறைத்துவிட்டான்.

எதிலுமே நாம் படிப்பு கற்கவேண்டும். இந்த உத்தரராம சரிதத்தில் என்ன படிப்பு? ஊர்வம்புக்குப் பயந்து பெண்டாட்டியைத் துரத்திவிடலாமென்பதல்ல. ராமன் ராவணனைக் கொன்று தொலைத்தான். ஆனால் ஊர்வம்பு என்கிற அரக்கனைக் கொல்லாமல் விட்டுவிட்டான். அவன் இன்னும் மக்களைத் துன்புறுத்தியே வருகிறான். நாம் அவன் கையில் சிக்காமல் இருக்கவேண்டும் அல்லது அவனை எதிர்த்துப் போராட வேண்டும் என்பது உத்தரராம சரிதத்தின் பொருள் என்று வைத்துக் கொள்ளலாம்.

# உத்தர ராம சரிதம்

## முதல் அங்கம்

1.* *(பழங்கவிகளுக்குப் பணிந்து இப்பாமாலை சூட்டுவோம்; ஆதிபகவன் அம்சமான நித்திய கலாவல்லிக்கும் வந்தனை செய்வோம்.)*

*(பிராத்தனை முடிந்ததும்)*

***சூத்திரதாரன்:*** விஷயத்தை வளர்ப்பானேன்? பகவான் அம்பிகாபதியின் திருவிழாவுக்காகக் கூடியிருக்கும் பெரியோர் களிடம் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். தங்களுக்கு அடியிற் கண்டவாறு தெரிவிக்க அனுமதி கோருகிறேன். காசியப கோத்திரத்தில் ஜாதுகர்ணி புத்திரராகப் பிறந்து ஸ்ரீகண்டன் என்று பிறவிப் பெயர்பெற்று, இலக்கண இலக்கிய தர்க்க சாஸ்திரங்களைக் கரைகண்டு பவபூதி என்ற புகழ் நாமம் பூண்ட பெரியோனை அறிந்திருப்பீர்கள்.

2. *(இந்தப் பிராம்மணருக்குப் பிரம்மபத்தினி சரஸ்வதி அடிமைபோல் பணிசெய்கிறாள். இவர் இயற்றிய உத்தர ராம சரித நாடகம் இப்பொழுது ஆடப்படும்)*

*காரியவசத்தினால் ராமர் காலத்திய அயோத்தியாவாசியாக இதோ மாறிவிட்டேன்.*

*(நான்கு பக்கங்களிலும் சுற்றிப் பார்த்து)* இதென்ன விந்தை? அரக்கர் குலத்தை அழித்த சக்கரவர்த்தி ராமருடைய அபிஷேக காலமல்லவா இது! இரவும் பகலும் ஓயாமல் அளவு கடந்து ஆனந்தக் கொண்டாட்டங்கள் மிகுந்திருக்க வேண்டிய

---

★ எண்ணிக்கைகள் மூலத்தின் சுலோகங்களைக் குறிக்கும்.

இந்நாளில், நாற்சந்தி மண்டபங்களெல்லாம் இன்று சோர்ந்து சூன்யமாக இருப்பானேன்?

*(நடன் உள்ளே நுழைந்து)*

**நடன்:** தோழா! எல்லோரும் தங்கள் தங்கள் ஊருக்கு மகாராஜாவால் விடை கொடுத்தனுப்பப்பட்டார்கள். லங்காபுரி யுத்தத்தில் உதவிபுரிந்த வானரராட்சஸ மகான்கள், நான்கு திக்குகளிலிருந்து வந்த பூஜ்யப் பிரம்மரிஷிகள், கீர்த்தி வாய்ந்த மகாமன்னர்கள் - எவர்களை மரியாதை செய்வதற்காக இத்தனை நாட்கள் உற்சவம் நடந்ததோ அவர்கள் அனைவரும் சென்று விட்டார்கள்.

**சூத்:** ஆகா! இதுதான் காரணம்.

**நட:** வேறொன்றும் உளது.

3. *(வசிஷ்டரைப் பின்பற்றி அருந்ததியை முன்னிட்டு ஸ்ரீராமரின் தாய்மார்கள் மாப்பிள்ளையின் யாகத்திற்காகச் சென்றுவிட்டார்கள்.)*

**சூத்:** வெளியூரானதால் வினவுகிறேன். இந்த மாப்பிள்ளை யார்?

**நட:**

4. *(தசரத மகாராஜாவுக்குச் சாந்தை என்று ஒரு மகள் பிறந்தாள். அவளை லோமபாதருக்கு வளர்ப்புப் பெண்ணாகக் கொடுத்துவிட்டார்.)*

அவள் விபாண்டக ரிஷியின் குமாரர் ரிஷ்யசிருங்கரை மணந்தாள். அவர் பன்னிரண்டு வருஷ யாகத்தைத் தொடங்கியிருக்கிறார். அந்த நிர்ப்பந்தத்தால் நிறைகர்ப்பமான நாட்டுப் பெண் சீதையைத் தனியே விட்டுவிட்டு மாமியார் செல்ல வேண்டியிருந்தது.

**சூத்:** இந்த வம்பு நமக்கேன்? வா, நாம் ஜாதித்தொழிலை அனுசரித்து ராஜத்துவாரத்தில் காவல் காப்போம்.

**நட:** அப்படியானால் தாங்கள் அரசரைப் போற்றி ஒரு மாசற்ற பாசுரத்தைத் தயர் செய்யுங்கள்.

**சூத்:** நண்பா, நம் கடமைப்படி போற்றுவோம்.

5. *(தொண்டாற்றித் தீரவேண்டும்; ஆயினும் குறைகூறாமல் இருக்கமாட்டார்கள்; பெண்கள் கற்பையும், சொல்லின் நேர்மையையும் பழிப்பது பாமரர் இயல்பு.)*

**நட:** பெரும்பாதகர் என்றுதான் கூறவேண்டும்.

6. *(வைதேகி மீதும் பழி கூறுகின்றனரன்றோ; அரக்கர் வீட்டு வாசமென்ற அல்பகாரணம் பற்றினர். அக்னிசோதனையில் அவநம்பிக்கை கொண்டனர்.)*

**சூத்:** இந்த அவதூறு அரசர் காதுக்கு எட்டினால் விபரீதம் விளையும்.

**நட:** ரிஷிகளும் தேவர்களும் எவ்விதத்திலும் நன்மை புரிவார்கள். *(சுற்றிப்பார்த்து)* அடே! இப்பொழுது மகாராஜா எங்கிருக்கிறார்? *(காது கொடுத்துக் கேட்கிறான்.)* ஜனங்கள் இவ்வாறு கூறுகிறார்கள்.

7. *('அன்புடன் இங்கே விஜயம்செய்து பல தினங்களாக உற்சவங்களில் கலந்து அனுக்கிரகித்த ஜனகர் இன்று விதேகநாடு சென்றுவிட்டார். அவர் பிரிவால் வருந்தும் தேவியைத் தேற்றத்தம் தர்மாசனத்தை விட்டு நரேந்திரர் அந்தப்புரம் செல்லுகின்றார்.')*

**காட்சி முடிந்தது.**

## 2

அந்தப்புரம்

*(ராமரும் சீதையும் மஞ்சத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்.)*

***ராமர்:*** தேவி, வைதேகி! வருத்தப்படாதே. உன் தந்தைக்கும் நம்மைவிட்டுப் பிரிய மனமில்லை.

*8.* *(ஆயினும், நித்தியானுஷ்டான நியமம் சுயேச்சையைப் பாதிக்கிறது. கடமை தவறாமல் வாழ்வோருக்கு, இல்லறம் மிகவும் சங்கடமானதல்லவா?)*

***சீதை:*** அதை அறிவேன், ஆரியபுத்திரா, நன்கு அறிவேன். ஆனால் அன்பர் பிரியும்போது துக்கம் வந்தே தீரும்.

***ராமர்:*** ஆமாம், அப்படியே. இந்தக் குடும்பஉணர்ச்சிகள் இதயத்தைத் துளைக்கின்றன. அவற்றிற்கு அஞ்சியே பேரறிஞர் சகல காமங்களையும் துறந்து வனத்தில் நிம்மதி அடைகின்றனர்.

*(கஞ்சுகி நுழைந்து)*

***கஞ்சுகி:*** ராமபத்ரா.. *(என்று பாதி சொல்லும் பொழுதே கூச்சத்துடன்)* மகாராஜராவே -

***ராமர்:*** *(புன்சிரிப்புடன்)* பெரியோனே, என் தந்தைக்குச் சேவகம் செய்தோர் என்னை ராமபத்திரா என்று அழைப்பதல்லவோ அழகு? ஆதலால், வழக்கப்படியே என்னைக் கூப்பிட வேண்டும்.

***கஞ்சுகி:*** தேவரே, ரிஷ்யசிருங்க ஆசிரமத்திலிருந்து அஷ்டாவக்கிரர் வந்திருக்கிறார்.

***சீதை:*** ஐயா, அப்படியானால் தாமதமேன்?

**ராமர்:** சீக்கிரம் அழைத்துவாருங்கள்
(கஞ்சுகி வெளியே போகிறான்.)
(அஷ்டாவக்கிரர் நுழைந்து)

**அஷ்:** உங்களிருவருக்கும் மங்களம்.

**ராமர்:** பகவன்! நமஸ்கரிக்கிறேன். இதோ உட்காருங்கள்.

**சீதை:** பகவானே! உங்களுக்கு நமஸ்காரம். மாமிமார், மாப்பிள்ளை, ஆர்யா சாந்தை எல்லோரும் சௌக்கியமா?

**ராமர்:** என் சகோதரி புருஷர் ஸோமயாஜி ரிஷ்ய சிருங்கரும் சாந்தாதேவியும் விக்கினமில்லாமல் சுகமாக இருக்கிறார்களா?

சீதை: எங்களை நினைக்கிறார்களா?

**அஷ்:** (உட்கார்ந்துகொண்டு) அதற்கென்ன சந்தேகம்? தேவி, பகவான் வஸிஷ்டர் தங்களுக்குச் சொல்லுகிறார்.

9. (உலகை வகிக்கும் பூதேவி உன்னைப் பெற்றாள்; பிரமனுக்குச் சமானமான ஜனகரோ உன் தந்தை; சூரியனும் நாமும் குருக்களான குலத்தின் மன்னர் மருமகள் பேறும் பெற்றாய்.)

ஆதலின், வேறென்ன ஆசீர்வாதம் செய்யக்கூடும்? ஒன்றுதான் பாக்கி. வீரத் தாயாகக்கடவாய்.

**ராமர்:** அனுக்கிரகிக்கப்பட்டோம்.

10. (சாதாரண சாதுக்களின் சொற்கள் அர்த்தத்தை அனுசரிக்கின்றன. ஆதி மகரிஷிகளின் சொற்களைப் பின்பற்ற அர்த்தங்கள் உற்பத்தியாகின்றன.)

அஷ்: பகவதி அருந்ததியாலும், தாய்மார்களாலும்

சாந்தாதேவியாலும் தங்களிடம் பன்முறை வற்புறுத்தும்படி கட்டளையிடப்பட்டேன். 'கர்ப்ப காலத்தில் சீதாதேவியின் மனத்தில் என்ன என்ன ஆசைகள் உதிக்கின்றனவோ, அவை களை உடனே பூர்த்தி செய்ய வேண்டும்'.

**ராமர்:** இவள் சொல்லுகிறதை யெல்லாம் செய்வோம்.

**அஷ்:** தேவிக்கு நாத்தியின் புருஷரான ரிஷ்யசிருங்கர் சொல்லியனுப்பி யிருக்கிறார்: 'குழந்தாய், பூர்ண கர்ப்பவதி யென்று உன்னை அழைத்து வரவில்லை. உனது சந்தோஷத் திற்காகவே ராமச்சந்திரனும் அங்கே விடப்பட்டிருக்கிறான். சீக்கிரம் குழந்தை நிறைமடியுடன் உன்னை இங்கே பார்க்க விரும்புகிறோம்.'

**ராமர்:** (ஆனந்தம், நாணம் இரண்டுடன்) அப்படியே ஆகட்டும். பகவான் வஸிஷ்டர் எனக்கு ஏதாவதுஆக்ஞை இட்டிருக்கிறாரா?

**அஷ்:** கேளுங்கள்.

*11.* ('மாப்பிள்ளையின் யாகத்தால் நாம் இங்கே தங்கவேண்டி யிருக்கிறது. நீயோ வாலிபன்; ராஜ்யமும் புதிது. பிரஜை களின் பிரீதியைச் சம்மதிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும். அதனால் உண்டாகும் கீர்த்தியே உன் குலத்தின் பேரைசுவரியமாகும்.)

**ராமர்:** பகவான் மைத்திராவருணியின் கட்டளைப் படியே செய்வேன்.

*12.* சிநேகம்,தயை, சுகம், இவைமட்டுமல்ல, ஜானகியை யும் தியாகம் செய்து உலகத்தைத் திருப்தி செய்ய வேண்டுமாயின், நான் சிறிதும் வருந்தேன்.)

**சீதை:** இதனால்லவோ ஆரியபுத்திரர் ரகுகுலத்தின் ரக்ஷகனென்று புகழ் பெற்றிருக்கிறார்.

***ராமர்:*** யார் அங்கே? அஷ்டாவக்கிரரை அழைத்துச் சென்று இளைப்பாற வையுங்கள்.

***அஷ்:*** (எழுந்து சுற்றி) அடே! குமாரன் லட்சுமணன் இதோ வருகிறான்.

*(அஷ்டாவக்கிரர் வெளியே செல்லுகிறார்.)*

*(லஷ்மணர் நுழைந்து)*

**லஷ்மணர்:** தங்களுக்கு என்றும் ஜயம். அண்ணா, நம் சொற்படி அந்தச் சித்திரகாரன் தங்கள் சரித்திரத்தை ஓவியச் சுவரின் பேரில் வரைந்து முடித்தான். தாங்கள் பார்க்க வேண்டும்.

***ராமர்:*** தம்பி, துக்கப்படும் ஜானகியைத் தேற்ற உனக் கல்லவா தெரியும்! எந்தக்கட்டம் வரையில் எழுதியிருக்கிறான்?

**லஷ்:** தேவியின் அக்கினி சோதனைவரையில்.

***ராமர்:*** ஐயோ பாவம்! *(சீதையைச் சமாதானப்படுத்தி.)*

13. (பிறவியிலேயே தூய்மை வாய்ந்த தேவியைப் புனிதம் செய்யக்கூடியது வேறொன்றும் உளதோ! புண்ணியப் புனலும் தூய அனலும் பிறபொருள்களால் பவித்திரமாக வேண்டுவதில்லையே.)

தேவி, தெய்வயாகத்தில் தோன்றியவளே! என்னை மன்னித்தருள்வாய். உனக்கு இழைத்த இக்குற்றத்தை ஆயுள் முழுதும் மறவேன்.

14. (குலத்தின் நலத்தை நினைத்துப் பிரஜைகளின் பிரியத்தை நாடி அன்று நான் உரைத்த கொடுஞ்சொல் தகாது, தகாது. நறுமண மலரைத் தலையில் வைத்து மகிழ்வது இயல்பு. அதனைக் காலால் மிதித்துக் கசக்குவது சரியோ?)

***சீதை:*** போனது போகட்டும், வாருங்கள். சரித சித்தி ரத்தைப் பார்ப்போம்.

*(எல்லோரும் எழுந்து சுற்றுகிறார்கள்.)*

**லவ்:** இதோ அந்த ஓவியத்தின் ஆரம்பம்.

**சீதை:** (ஒரு படத்தைக் காட்டி) இதோ ஆரிய புத்திரரின் தலைமேல் இடைவிடாத கூட்டமாக நின்றுகொண்டு அவரைப் போற்றுகின்றனரே, இவர்கள் யார்?

**லவ்:** இவர்கள்தான் பரம ரகசியத்தோடு கூடிய ஜிரும்பாகாஸ்திரங்கள். பகவான் கிருசாச்வர் இவற்றை விசுவாமித்திர மகரிஷிக்கு கொடுத்தார். தாடகா வதத்தால் மகிழ்ந்து கௌசிகர் அண்ணாவுக்கு அளித்தார்.

**ராமர்:** தேவி, இத்திவ்யாஸ்திரங்களுக்கு நமஸ்காரம் செய்.

15. (பிரமன் முதலிய பரமகுருக்கள் ஜகத்தின் நன்மையை நாடி, பல்லாண்டு தவம் புரிந்து, தங்கள் தவமே ஜோதி வடிவமான இந்த அஸ்திரங்களைக் கண்டனர்.)

**சீதை:** இவர்களுக்கு நமஸ்காரம்.

**ராமர்:** அவசியம் இவர்கள் உன் புத்திரனை அடைவார்கள்.

**சீதை:** அனுக்கிரகம் செய்யப்பட்டேன்.

**லவ்:** இதோ மிதிலா விருத்தாந்தம்.

சீதை: ஆகா! மலரும் நீலத்தாமரை இதழின் காந்தியோடு, அழகு வழிய, மின்னுகின்ற திருமேனியுடன், என் தந்தை கண் கொட்டாமல் இந்த அதிசய ஸௌந்தரியத்தைப் பிரமித்துப் பார்க்க, அனாயாசமாக ஒடித்த சங்கர தனுசு அருகில் கிடக்க, முன்னந் தலைமயிர் பறக்க, மோகன முகத்துடன் ஆரியபுத்திரர் வரையப் பட்டிருக்கிறார்.

**லவ்:** தேவி, இதோ பார்: உங்கள் தந்தை ஜனகர்.

*16. (கௌதம புத்திரரும் ஜனககுல புரோகிதருமான சதானந்த ரோடு உன் தந்தை வஸிஷ்டரை முன்னிட்ட சம்பந்திகளுக்கு மரியாதை செய்கிறார்.)*

**ராமர்:** இக்காட்சி அவசியம் பார்க்கத் தகுந்தது.

*17. (ஜனக குலம், ரகுவம்சம்; கொடுப்பவரும் ஏற்பவரும் குசிககுல திலகர்; இந்தச்சம்பந்தம் எவருக்குத்தான் இனிக்காது?)*

**சீதை:** சமயத்திற்கேற்பக் கோதானம் முதலிய மங்களங்கள் முடித்து, விவாக தீட்சையுடன் நான்கு சகோதரர்களும் இதோ நிற்கிறீர்கள்! அதே இடத்தில் அதே காலத்தில் இருப்பதாக எண்ணுகிறேன்.

**ராமர்:** --

*18. (அக்கோலம் என் கண்முன் நிற்கிறது. மங்களமே உருவெடுத்து வந்ததுபோல், கங்கணக் கயிறு பூண்ட உன் திருக்கரத்தைக் கௌதமபுத்திரர் கொடுக்க நான் பற்றி மகிழ்ந்தேன்.)*

**லக்ஷ்:** இதோ தேவி: இவள் மாண்டவி தேவி. இதோ நாட்டுப்பெண் சுருதகீர்த்தி.

**சீதை:** தம்பி, இதோ இன்னும் ஒருத்தி இருக்கிறாளே, இவள் யார்?

**லக்ஷ்:** (வெட்கத்தோடு புன்னகை செய்கிறான். தனக்குள்ளேயே) அடே, ஊர்மிளையைப் பற்றிக் கேட்கிறாள். இருக்கட்டும். வேறுஇடம் கவனத்தைத் திருப்புகிறேன். (மற்றவர்கள் கேட்கும்படி) தேவி, இதோ பார்க்கவேண்டிய காட்சி இருக்கின்றது. பகவான் பரசுராமரைப் பாருங்கள்.

**சீதை:** (உணர்ச்சியுடன்) நடுங்குகிறேன்.

**ராமர்:** ரிஷிகளே, நமஸ்கரிக்கின்றேன்.

**லக்ஷ்:** தேவி, பாருங்கள். இவர் அண்ணாவினால்.......... (என்று பாதி சொல்லுகையில்)

**ராமர்:** தம்பி, இன்னும் பல காட்சிகள் இருக்கின்றன. மேலே காட்டுவாய்.

**சீதை:** (அன்புடன் கணவரைப் பார்த்து) ஆரிய புத்திரா! இந்த வினயத்தின் மகிமையாலன்றோ மிகவும் பிரகாசிக்கின்றீர்!

**லக்ஷ்:** இதோ நாமெல்லோரும் அயோத்தி சேர்ந்து விட்டோம்.

**ராமர்:** (கண்ணீருடன்) மறவேன். என்றும் மறவேன்.

19. (தந்தையார் உயிருடனிருக்க, தாய்மார்கள் உபசரிக்க, புது மனையாளோடு இன்பமுடன் கழித்த அந்நாட்கள் இனி எப்பொழுதும் திரும்பமாட்டா.)

20. (இந்த ஜானகியும் அப்பொழுது, முன்னந்தலையில் சுருண்ட மயிர் பறந்து விளையாட, அரும்பு போன்ற பற்கள் பிரகாசிக்க, மயக்க விழியோடும், குழந்தை முகத் தோடும், சூதற்ற செய்கைகளோடும், மதுர மொழிக ளோடும், நிலவின் சாயல் கொண்ட அங்கங்களோடும், என் தாய்மார்களின் ஆனந்தத்தை வளர்த்தனளன்றோ?)

**லக்ஷ்:** இவள்தான் மந்தரை.

**ராமர்:** (அவசரமாக வேறு படத்தைக் காட்டி)

**லக்ஷ்:** (இதோ பார், சிருங்கிபேரபுரத்திலுள்ள இருப்பை மரத்தை. முன் இங்கேதான் என் தோழன், வேடர்கோன் குகன் நம்மை எதிர்கொண்டழைத்தான்.)

**லக்ஷ்:** (சிரித்து, தனக்குள்) ஓகோ, நடுத்தாயார் விவ காரத்தை மறைத்துவிட்டார் அண்ணா.

**சீதை:** ஆகா! இதோ சடைமுடியும் காட்சி.

**லவ்:**

22. (மைந்தருக்கு முடி சூட்டி, வயோதிக தசையில் இதர இட்சவாகு வம்ச மன்னர் ஏற்ற வானப்பிரஸ்த விரதத்தை இளமையிலேயே பூண்டான் என்பெரியோன்.)

**சீதை:** தெள்ளிய தூய புனலுடைய பாகீரதியை இதோ பாருங்கள்.

**ராமர்:** ரகுவம்சத்தின் குலதேவதையே, கங்காதேவி! உனக்கு வந்தனம்.

23. (சகரர் யாகத்தில் குதிரையைத் தேடி, புவியைப் பிளந்து கபிலரின் கொடிய கோபாக்கினியால் சாம்பலான என் மூதாதையரைக் கற்பனைக் கெட்டாத காயக்கிலேசத்துடன் தவம் புரிந்து உன் தூய நீரால் முன்னொரு நாள் உய்வித்தா னன்றோ பகீரதன். அப்படிப்பட்ட நீ உன் மருமகளான இந்தச் சீதைக்கு அருந்ததிபோல் அருள் செய்து நன்மை நினைத்திடுவாயாக.)

**லவ்:** பரத்வாஜ முனிவர் காட்டிய வழி பற்றிச் சித்திர கூடம் செல்லும்பொழுது யமுனா தீரத்தில் கண்ட சியாமா என்னும் ஆலமரம் இதோ தெரிகின்றது.

**ராமர்:** (ஆசையுடன் அதனை நோக்குகிறார்.)

**சீதை:** நாதா, இந்த இடம் ஞாபகம் இருக்கிறதா?

**ராமர்:** எப்படி மறந்துபோகும்?

24. (நெடுந்தூரம் நடந்து சோர்ந்து, வாடிய தாமரைத் தண்டு போன்ற அங்கங்களை, இறுகத் தழுவிப்பிடித்து நான் நோவாற்ற, என் மார்பினில் சாய்ந்து நீ தூங்கிய இட மல்லவா?)

**லஷ்:** இந்தப் படத்தில், விந்தியமலைக் காடுகளில் நுழையும்போது விராதன் வந்து எதிர்க்கிறான்.

**சீதை:** இதைப் பார்த்துப் பயன் என்ன? ஆரியபுத்திரர் பனைமட்டையால் செய்த குடையை என் தலைமேல் தம் கையால் பிடித்து வெயிலைத் தடுக்க, தட்சிணாரண்யத்தில் நாம் நுழைந்த காட்சியைக் காணலாம்.

**ராமர்:**

25. மரத்தடிகளில் முனிகள் தவஞ் செய்யும், விருந்தினரை உபசரிப்பதே விரதமாகக் கொண்டு காட்டரிசி சமைத்து வாழும் சாதுக்கள் குடிசைகள் குமிழும் தபோவனங்களை மலையருவிகளின் கரைகளில் காண்பாய்.

**லஷ்:** அடர்ந்த மரங்களால் நீலநிறமுள்ள வனங்களுக்கு நடுவில் கோதாவரி கர்ஜிக்கும் குகைகளோடும், எப்பொழுதும் ஜலத்தைத் தெளிக்கும் நீல மேகங்களோடும், ஜனஸ்தானத்தின் மத்தியில் பிரச்ரவணகிரி இதோ விளங்குகிறது.

**ராமர்:** மெல்லிடையாளே!

26. (எல்லாச் சௌகரியங்களையும் லஷ்மணன் பரிவுடன் ஏற்பாடு செய்ய, இம்மலையில் இனிதாக நாம் இருந்த நாட்களின் நினைவு வருகின்றதா? நிர்மலநீர்க் கரையில் நாம் அநுபவித்த இன்ப வாழ்கை உன் ஞாபகத்தில் இருக்கின்றதா?) அது மட்டுமா?

27. உடலோடு உடல் ஒன்று சேர்ந்து கன்னத்தோடு கன்னம் வைத்து, கைகளால் இடைவிடாது இறுகத் தழுவி, காலம் கழிவதன் உணர்ச்சி சிறிதுமின்றி, மெதுவான குரலில் எவ்விதக் கிரமமும் இல்லாத ஆனந்த சல்லாபத்தின் மத்தியில் இரவு தீர்ந்துவிடவில்லையா?)

**லஷ்:** இதோ பஞ்சவடியில் சூர்ப்பனகை வந்து விட்டாள்!

**சீதை:** நாதா, தங்கள் தரிசனம் இதுவரையில் தான்.

**ராமர்:** பிரிவிற்குப் பயந்தவளே, சித்திரமல்லவா இது!

**சீதை:** அது எப்படியாவது இருக்கட்டும். தீயவர் எங்கும் துக்கத்தை உண்டாக்குகிறார்கள்.

**ராமர்:** ஐயோ! ஜனஸ்தான விருத்தாந்தம் இப்பொழுதே நடப்பதுபோல் தோன்றுகிறது.

**லக்ஷ்:**

28. *(பொன்மானைப் போல் மாயவேடம் பூண்டு, கொடிய அரக்கர்கள் அன்று நமக்கு இழைத்த தீங்கு தீர்ந்துவிட்டாலும் இன்னும் நம்மை வருத்துகிறது. ஜனஸ்தானத்தின் சூன்யத்தைக் கண்டு பொறுக்கமாட்டாது மனமுடைந்து புலம்பிய ஆரியனது துக்கத்தால் கல்லும் கரைந்து அழுதது: வஜ்ரமும் உள்ளம் பிளந்தது.)*

**சீதை:** *(கண்களில் நீர் ததும்ப தனக்குள்)* நாதா, ரகு குலானந்தா, எனக்காக அல்லவோ உங்களுக்கு இவ்வளவு துயரம் உண்டாயிற்று?

**லக்ஷ்:** *(ராமரைப் பார்த்துத் திடுக்கிட்டு)* அண்ணா! இதென்ன!

29. *(அறுத்த மாலையிலிருந்து முத்துக்கள் வீழ்வதுபோல் தங்கள் கண்ணீர் தாரையாகத் தரணியில் சொட்டுகின்றதே; அடக்கமுயன்றும் உள்ளத்தின் உணர்ச்சி பொங்கி, மூக்கும் உதடும் துடிப்பதால் பிறருக்குப் பிரத்தியட்சமாகின்றது.)*

**ராமர்:** தம்பி!

30. *(காதலியின் பிரிவாற்றாமை கொடியதாயினும், பழி வாங்கும் விருப்பத்தால் அச்சமயம், சகிக்கலானேன். அந்தச் சோகத்தீ மனத்தில் மீண்டும் மூட்டப்பட்டு இதயத்தின் மர்மங்களைத் துளைத்துப் புண்படுத்துகிறது.)*

**சீதை:** ஐயோ, ஐயோ! பழைய துக்கத்தின் ஞாபகம் மிதமிஞ்சி வருத்த, எனக்கும் ஆரியபுத்திரரை விட்டுப் பிரிந்தது போல் இருக்கிறது.

**லவ்:** (தனக்குள்) இருக்கட்டும். வேறு கட்டடத்திற்குக் கொண்டு போகிறேன். (வெளிப்படையாக) இதோ பாருங்கள்: அடுத்த படம், மனுப்பிரஜாபதி போல் புராண கர்த்தாவான பகவான் ஜடாயுபிதாவின் வீரச்செயல் விளக்கம்.

**சீதை:** ஆ! பூஜ்யபிதாவே! தங்கள் பித்ருவாஞ்சை நன்கு காண்பிக்கப்பட்டது.

**ராமர்:** ஓ! காசியப குலத்தில் உதித்த பட்சிராஜாவே! தங்களைப்போன்ற புண்ணியாத்மாக்களான சாதுக்கள் இனி எங்கே அவதரிப்பார்கள்?

**லவ்:** அப்பால் இதோ ஜனஸ்தானத்திற்கு மேற்கே தனு, கபந்தர்கள் வசிக்கும் குஞ்சவானென்று கீர்த்தி பெற்ற தண்டகா வனப் பிரதேசம் அடுத்தாற்போல் ரிஷ்யமூக பர்வதத்தில் மதங்க மகரிஷியின் ஆசிரமம். இதோ இருப்பவள் சிரமணா என்னும் சித்திபெற்ற சபர தாபஸி. அதோ காணப்படுவது பம்பை என்று பெயர்பெற்ற தாமரை தடாகம்.

**சீதை:** இங்கல்லவா ஆரியபுத்திரர் வீரமும் வைரமும் இழந்து வாய்விட்டு அலறினார்?

**ராமர்:** தேவி, இந்த ஏரி மிகவும் ரமணீயமானது.

*31.* *(மல்லிகாட்ச பட்ச மென்ற அன்னப்பட்சிகள் இனிய குரலுடன் நடப்பதால் தாமரைத்தண்டுகள் அசைய, வெள்ளைக் கமலத்தின் பரந்த பிரதேசங்களைக் கண்ணீர் தாரைகளுக்கு நடுவில் இங்கே கண்டேன்.)*

**லவ்:** இதோ பெரியார் அனுமான்.

**சீதை:** மகானுபாவர் மாருதி. நீண்டநாள் துயருற்ற ஜீவலோகத்தை உய்வித்துப் பேருபகாரம் செய்தவர் இவர்.

**ராமர்:**

32. *(அந்த அஞ்சனா மைந்தன் நமக்கு அதிருஷ்டத்தால் வாய்த்தான். அவனது வீர்யத்தால் நாமும் மூவுலகும் நன்மை எய்தினோம்.)*

**சீதை:** தம்பி, பூத்த கதம்ப மரங்களின்கீழ்க் கானமயில் களாடும் இந்த மலை யாது? இங்கே தன் பழைய காந்தி குன்றி, பிரபாவத்தின் சாயல் மட்டும் மிஞ்சிய ஆரியபுத்திரர் ஒரு மரத்தடியில் மூர்ச்சையடைய, அலறிக்கொண்டு நீயும் அவரை அணைத்துப் பிடித்திருப்பதாகச் சித்திரித்திருக்கிறதே?

**லக்ஷ்:**

33. *(மல்லிகை மணம் கமழும் மால்யவான் அது. அதன் சிகரத்தில் புதுப்புனல்கொண்ட அழகிய நீலமேகம்.)*

**ராமர்:** நிறுத்து! தம்பீ, போதும், இனிப்பொறுக்க முடியாது. ஜானகியின் பிரிவு மீண்டும் வந்ததுபோல் இருக்கிறது.

**லக்ஷ்:** இதன்பின் வானர ராட்சஸர்களுடன் அண்ணா வால் செய்யப்பட்ட அத்தியாச்சாரியமான செய்கைகளின் கணக்கற்ற காட்சிகள். தேவியும் களைத்திருக்கிறாள். ஆதலால் இருவரும் இளைப்பாற வேண்டுகிறேன்.

**சீதை:** நாதா, சித்திரக்காட்சியால் என் மனத்தில் ஓர் மசக்கை பிறந்திருக்கிறது. அதைத் தெரிவிக்க அனுமதி கோருகிறேன்.

**ராமர்:** என்னை நீ கட்டளையிடக் கூடுமல்லவா?

***சீதை:*** மனத்தை மலரச் செய்யும் கம்பீரமான காடுகளில் விளையாடி, குளிரக் குளிரக் கங்காதேவியின் தூய நீரில் மறுபடியும் நீராட விரும்புகிறேன்.

***ராமர்:*** தம்பி லஷ்மணா!

***லஷ் :*** என்ன அண்ணா?

***ராமர்:*** தம்பி, இவளுடைய ஆசைகளை உடனே பூர்த்தி செய்யவேண்டுமென்று குருக்கள் கட்டளையிட்டிருக்கின்றனர். ஆதலால், அசையாமல் சுகமாக சொல்லும் ரதத்தைக் கொண்டு வருவாய்.

***சீதை:*** ஆரியபுத்திரா, தாங்களும் வரவேண்டும்.

***ராமர்:*** கொடிய மனத்தாளே, இப்படியும் கூறவேண்டுமா?

***சீதை:*** அப்படியானால் எனக்கு ஆனந்தமே.

***லஷ் :*** தங்கள் உத்தரவுப்படி செய்கிறேன்.
*(லஷ்மணர் வெளியே போகிறார்.)*

***ராமர்:*** அன்பே, இந்த ஜன்னலருகில் சிறிது நேரம் உட்காருவோம்.

***சீதை:*** அப்படியே செய்வோம். களைப்புக் கண்ணை மூடுகிறது.

***ராமர்:*** அப்படியானால் என்னை அணைத்துக்கொண்டு படுத்துக்கொள்.

*34. (மாலை மதியின் கிரணம் முத்தமிட, சீத நீர் கசியும் சந்திரகாந்தமாலைபோல், களைப்பாலும் கிலேசத்தாலும் வாடி வேர்த்திடும் உன் திருக்கரத்தை என் கழுத்தில் சூடிப் புத்துயிர் அளிப்பாய்.)*

*(அப்படியே கையை எடுத்தக் கழுத்தில் சுற்றிக்கொண்டு ஆனந்தத்துடன்)* எனதன்பே, இதென்ன விந்தை!

35. (சுகமா துக்கமா என்று தீர்மானிக்கத் திறமையில்லேன். பெரு மோகமோ, விஷத்தின் வேகமோ, மதிமயக்கந் தானோ? உனது ஒவ்வோர் ஸ்பர்சமும் இந்திரியங் களை மயக்குகின்றது. மூளை சுழலுகின்றது. பிரக்ஞை போகின்றதே!)

**சீதை:** தங்கள் அசையாத அருள் என்பால் இருக்க எனக்கு வேறு என்ன வேண்டும்?

**ராமர்:**

36. (கமலாட்சி, உன்னுடைய இந்த அன்பு மொழிகள் வாடு மலருயிரை மலர்ந்திடச் செய்யும்; ஆனந்த மோகத்தில் இந்திரியங்களை மூழ்விக்கும்; செவிகளில் அமிர்தம் ஊற்றி, மனத்திற்கும் இனிய மருந்தாகும்.)

**சீதை:** (புன்னகையுடன்) இன்சொல் நாதா, வாருங்கள், படுத்துக்கொள்ளலாம், படுக்க இடம் தேடுகிறாள்.)

**ராமர்:** என்ன தேடுகிறாய்?

37. (விவாக காலம் முதற்கொண்டு, பால்யத்திலும் யௌவனத் திலும் வீட்டிலும் காட்டிலும் வேறெவரும் தொடாது, நீ தலை வைத்துறங்கும் தலையணையாக அமைந்திருக்கும் ராமன் கரம் இதோ இருக்கிறதல்லவா?)

**சீதை:** (தூங்குவதுபோல் நடித்து) ஆமாம், இருக்கிறது. நாதா, இது அவசியம் இருக்கிறது. (தூங்குகிறாள்.)

**ராமர்:** இன்மொழியாள் என் மார்பிலேயே தூங்கி விட்டாள். (அவளைப்பார்த்து)

38. (என் வீட்டு லட்சுமி இவள். கண்ணுக்கு அமிர்தம் தீட்டிய மை; இவ் ஸ்பர்சமே என் உடலில் உயர்ந்த வாசனைச் சந்தனம். சுற்றிய !மிருதுவான கையோ கழுத்தில் குளிர்ந்த முத்துமாலை.)

விரகத்தைத் தவிர்த்து, இவளைச் சேர்ந்த எதுதான் எனது பிரியத் திற்குப் பாத்திரமாகாது!

*(வாயிற்காப்போன் நுழைந்து)*

**வாயிற்காப்போன்:** தேவரே, வந்திருக்கிறான்.

***ராமர்:*** அடே: *யார்?*

**வா.கா:** தங்கள் அந்தரங்க சேவகன் துர்முகன்.

***ராமர்:*** *(தனக்குள்)* அந்தப்புரத்தில் வேலை செய்பவன் துர்முகன். நாட்டாரின் மனத்தை அறிந்துவர அனுப்பப்பட்டான். *(வெளிப்படையாக)* வரட்டும்.

*(வாயிற்காப்போன் வெளியே போகிறான்.)*
*(துர்முகன் நுழைந்து)*

***துர்முகன்:*** *(தனக்குள்)* ஆ! சீதாதேவியைப்பற்றி ஜனங் கள் கூறும் இந்த எண்ணத்தகாத அபவாதத்தை எவ்வாறு தேவ ரிடம் சொல்வேன்! ஆனால், துரதிருஷ்டசாலியான என் னுடைய தொழிலாக இது வந்து சேர்ந்திருக்கிறது.

***சீதை:*** *(கனவில் எதையோ கண்டு )* ஆ! ஆரியபுத்திரா, சுந்தரனே, எங்கே இருக்கிறாய்?

***ராமர்:*** ஆகா! இந்தச் சோகரஸமுள்ள சித்திரங்களைக் கண்டு என்னை விட்டுப் பிரிந்த பாவனைதேவியைக் கனவிலும் வருத்துகிறதுபோலும்! *(அன்புடன் அவள் உடலைத் தடவிக் கொடுத்து)*

39. *(சுகத்திலும் சோகத்திலும் பூர்ண ஐக்கியபாவம்; எல்லா அவஸ்தைகளிலும் மாறாத பரஸ்பர சிநேகம்; எதனால் எக்காலமும் மனத்திற்கு நிம்மதியோ; வயோதிகத்தினால் எதன் ரஸம்குறைவதில்லையோ; நெருங்கிய பழக்கத்தால் கூச்சத்திரை கலைந்து எந்த அன்பு ரசம் இன்பசார*

மாகின்றதோ; ஒப்பற்ற அக் காதற்பொருளொன்றைப் பெற்ற அதிருஷ்ட புருஷனின் வாழ்க்கை ஆனந்தமே.)

**துர்:** (உள்ளே வந்து) தேவருக்கு ஜயம்.

**ராமர்:** நீ அறிந்து வந்ததைச் சொல்.

**துர்:** நாட்டு மக்கள் தேவரைப் புகழ்ந்து 'ராமபத்திர னால் தசரதரின் மரணத்தை மறந்துவிட்டோம்' என்கிறார்கள்.

**ராமர்:** இது வீண் உபசாரம் - சொல்லப்படும் குறையைக் கூறு. அதை நிவர்த்தி செய்வோம்.

**துர்:** (கண்ணீருடன்) தேவரே, சொல்லுகிறேன். ராமர் காதில் ஏதோ சொல்லுகிறான்.)

**ராமர்:** கொடிய இடி வீழ்ந்தது. (மூர்ச்சையடைகிறார்.)

**துர்:** தைரியம் கொள்ளுங்கள், தேவரே.

**ராமர்:** (சற்றுத் தேற்றிக்கொண்டு)

*40.* (ஐயோ, இதென்ன விபரீதம்! பிறர் வீட்டில் வசித்ததால் உண்டான வைதேகியின் அபவாதம் அதிசயமான உபாயங் களால் முன் தீர்ந்துவிட்டாலும், எனது துரதிருஷ்டத்தால் நாய் விஷம்போல் மறுபடியும் அது எங்கும் பரவி விட்டதே.)

இந்தச் சந்தர்ப்பத்தில் மந்த பாக்கியனான நான் என்ன செய்வேன்? (துக்கத்துடன் ஆலோசித்து) வேறென்னதான் இருக்கிறது?

*41.* (சகல காரியங்களையும் செய்து பிரஜைகளுக்குப் பிரீதி செய்யவேண்டும். இது சாதுக்களின் விரதம்; இதனைப் பூர்த்தி செய்வதற்காகவல்லவா என் தந்தை என்னையும் இழந்து தம் உயிரையும் துறந்தார்?)

இப்பொழுதுதான் பகவான் வஸிஷ்டரும் அப்படியே கட்டளையிட்டிருக்கிறார்.

42. (சூரியகுலத்துதித்த உத்தம மன்னரின் மாசற்ற சரிதம், என்னைப் பற்றியதோர் புன்சொல்லால் கெடின், இப் புவியில் நீசனாவேன்.)

ஆ! தேவி, யாகத்தில் தோன்றியவளே! ஆ! தன் பிறவியால் புவியைப் புனிதம் செய்தவளே! ஆ! நிமிகுலத்திற்கும் ஜனகருக்கும் ஆனந்தத்தை வளர்ப்பவளே! ஆ! அனலும் அருந்ததியும் வசிஷ்டரும் வாழ்த்தும் சீலமுடையாளே! ஆ! ராமனிடத்தில் இன்னுயிர்த் தோழியே! ஆ! கொடிய வனத்தில் இன்னுயிர்த் தோழியே! ஆ! என் தந்தையின் அன்பிற்குப் பாத்திரமானவளே! ஆ! மிதமொழியாளே! உனக்கு இவ்விதியும் ஏற்படவேண்டுமா?

43. (பூதலம் உன்னால் புண்ணியம் நிறைந்தது.) ஜனங்களோ உன்மீது பழி கூறுகின்றனர். உலகனைத்தும் ரட்சிக்கும் தன்மையளான நீ மட்டும் திக்கற்றுத் தவிக்கிறாய்.)

(துர்முகனைப் பார்த்து) துர்முகா, லஷ்மணனிடம் சொல்லு. உன் புதிய அரசன் ராமன் இவ்வாறு கட்டளையிடு கிறான் என்று. (காதில் ஏதோ சொல்லுகிறார்.)

**துர்:** ஐயோ! தீயில் வீழ்ந்து தூய்மை பெற்றுக் கர்ப் பத்தில் பவித்திரமான ரகுகுலக் கொழுந்தைத் தரித்திருக்கும் தேவியை, துஷ்டரின் வாக்கால் இக்கொடிய கருமம் செய்யத் தேவரீர் எவ்விதம் தீர்மானிக்கக்கூடும்?

**ராமர்:** நிறுத்து, என் நாட்டாரைத் துஷ்டரென்று எப்படிக்கூறினாய்?

44. (இட்சவாகு வம்சத்தில் பிரஜைகளுக்கும் பேரன்புண்டு; இந்த அபவாதத்திற்கு ஆதாரமும் தெய்வத்தால் ஏற்பட்டது. சோதனைச் சமயத்தில் கண்ட அதிசய சம்பவமோ வெகு தூரத்தில் நடந்த விந்தை. யார்தான் நம்புவார்கள்?

ஆதலால் நீ போ.

**துர்:** ஐயோ! தேவி!
(வெளியே போகிறான்.)

***ராமர்:*** ஆ, கஷ்டம்! மிகவும் வெறுக்கத்தக்க காரியத்தைச் செய்யும் கொடியவனாகிவிட்டேன்.

45. (பால்யத்திலிருந்து போஷித்த பிரிய பத்தினியை, அன்பினால் என்னை விட்டு அகன்றிருக்கமாட்டாதவளை, தான் வளர்த்த பட்சியைக் கொன்று விற்பவன்போல் கபடம் செய்து யமனுக்கு நானே கொடுக்கின்றேன்.)

தீண்டத்தகாவதனாகிவிட்ட நான் இனித் தேவியைத் தீண்டலாகாது. (சீதையின் தலையை ஒரு கையால் தூக்கி அதன் கீழிருந்த மற்றொரு கையை எடுக்கிறார்.)

46. (சந்தன தருவென்று சித்தம் கலங்கித் தீய விஷவிருட்சத்தைப் பற்றியதுபோல், எண்ணத்தகாத கர்ம சண்டாளனால் ஏமாந்தாய். பேதையே, என்னை விடு.)

(எழுந்து) ஆகா! இந்த ஜீவலோகம் இப்பொழுது தலை கவிழ்ந்து போயிற்று. ராமனுடைய இம்மைப் பயனும் இன்று முடிவு பெற்றது. இவ்வுலகம் சூன்யமான வனாந்தரமாகிவிட்டது. வாழ்க்கை சாரமற்றுப்போயிற்று. தேகம் துக்கத்தின் கூடாகிவிட்டது. சரண்புக இடமில்லை. என் செய்வேன்? இனி என் கதி என்ன? ஆனால் -

47. (துக்கத்தின் தன்மையைத் தேர்ந்திடவே ராமனுக்குச் சைதன்யம் சேர்ந்தது போலும். இதயத்தின் மர்மங்களைத் துளைத்திடவே வைர ஆணியொத்த பிராணனைப் பெற்றான் போலும்.)

ஆ! அன்னை அருந்ததியே, ஆ! வஸிஷ்ட விசுவாமித்திர முனிவரர்களே! ஆ! தூய அக்கினி பகவானே, ஆ! சகல

ஜீவராசிகளையும் தாங்கும் பூதேவியே , ஆ! தந்தை ஜனகரே, ஆ! என் பிதாவே, ஆ! தாய்மார்களே! ஆ! ஆருயிர்த் தோழ சுக்ரீவா! ஆ! நற்குணமுள்ள அனுமனே! பரோபகார குணமுள்ள லங்காதி பதி விபீஷணனே! ஆ! பிரியசகி, திரிஜடையே, இந்தப் பாவி ராமனால் நீங்கள் அனைவரும் வஞ்சிக்கப்பட்டீர்கள், அவமதிக்கப்பட்டீர்கள், ஆனால் இவர்கள் பெயர்களை உச்சரிக்க எனக்கு உரிமை ஏது?

*48.* *(நன்றியைக் கொன்ற பாவியேன், என் வாயால் அவர் களுடைய நாமத்தைக் கூறினாலும், போற்றற்குரிய பெரியோர் எல்லோரும் தீமை தீண்டியதுபோல் திடுக் கிடுவர்.)*

*என்னே என் தன்மை!*

*49.* *(என்னை நம்பி மார்பினில் சாய்ந்து உறங்கும் இனிய இல்லாளை, வீட்டின் திருவிளக்கை, அசைந்து துடிக்கும் கடின கர்ப்பவதியை, கொடிய மிருகங்கங்களுக்குப் பலி கொடுக்கின்றேன்.)*

*(சீதையின் கால்களைத் தலையில் வைத்து)* தேவகாதலி! ராமன் தலைக்கு உன் திருத் தாமரையடிகளின் அந்திம ஸ்பர்சம் இதுதான். *(அழுகிறார்.)*

*(திரைக்குள்.)*

அக்கிரமம், அக்கிரமம்.

**ராமர்:** யார் அங்கே? இதென்ன விஷயமென்று விசாரித்து வாருங்கள்.

*(மறுபடியும் திரைக்குள்.)*

*50.* *(யமுனா தீரத்தில் வசித்து, தீவிர தவம் புரிந்துவரும் முனிவர்களின் கூட்டம், லவணனென்ற அரக்கனுக்குப் பயந்து, தங்களைச் சரணம் அடைந்திருக்கிறது.)*

**ராமர்:** அடா! இன்னும் ராட்சசர்களின் பயமா? கும்பீனச புத்திரனான இந்த துஷ்டனை வேருடன் களைந்துவருமாறு சத்துருக்கினனை அனுப்புகிறேன். (சில அடிகள் சென்று

திரும்பிவந்து) தேவி, இந்நிலையில் என்ன செய்வாய்? பகவதி, பூதேவி? உன் உயர்ந்த புத்திரி ஜானகியை, நீயே பார்த்துக்கொள்ள வேண்டும். நீ அல்லவோ,

51. *(ஜனகர்கள் ராகவர்கள் இருகுலத்தாருக்கும் தனிமங்கள மான இப்புண்ணிய குணவதி திருமங்கையின் தாயாகி அவளைத் தெய்விக யாகத்தில் தோற்றுவித்தாய்.)*

*(அழுதுகொண்டு, வெளியே போகிறாள்.)*

***சீதை:*** *ஆ! அன்பனே, ஆரியபுத்திரா! எங்கே இருக்கிறாய்? ஆ! அன்பனே, (திடீரென்று விழித்துக்கொண்டு) சீ!சீ! கெட்ட கனவால் மதி இழந்து கணவரைக் கூப்பிடுகிறேன்! (சுற்றிப்பார்த்து) ஐயோ, தூங்கும் என்னைத் தனியாக விட்டுவிட்டு ஆரியபுத்திரர் போய்விட்டாரே! இதற்கென்ன காரணம் இருக்கக்கூடும்? அவரைப் பார்த்ததும் கோபித்துக் கொள்வேன் - அப்பொழுது ஆற்றல் இருந்தால் ... யார் அங்கே, சேவகா?*

(துர்முகன் நுழைந்து)

***துர்முகன்:*** தேவி, குமரர் லஷ்மணர் தங்களிடம் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறார், 'ரதம் தயாராகிவிட்டது; தேவியார் அதில் ஏறிக்கொள்ள வேண்டும்' என்று.

***சீதை:*** இதோ ஏறுகிறேன். (எழுந்து சுற்றி) என்னுடைய கனமான கர்ப்பம் துடிக்கிறது; மெதுவாகப் போவோம்.

***துர்முகன்:*** இவ்வழி வாருங்கள், தேவி.

***சீதை:*** அருந்தவ முனிவருக்கு வந்தனம்; ரகுகுல தேவதைகளுக்கு வந்தனம்; என் பதியின் சரண கமலங்களுக்கு வந்தனம். சகல குருக்களுக்கும் வந்தனம். (எல்லோரும் செல்கிறார்கள்.)

**மகாகவி பவபூதியின், உத்தர ராம சரித நாடகத்தில் சித்திர தரிசனம் என்ற முதல் அங்கம் முற்றிற்று.**

## இரண்டாவது அங்கம்

### 1

*(திரைக்குள்)*

*தவச்செல்வியின் வரவு நல்வரவாகுக!*

*(பிறகு, பிரயாணி வேஷத்துடன் தாபசி வருகிறாள்.)*

***தாபசி:*** ஆகா! இந்த வனதேவதை பழம், பூ, தளிர்களைக் கொண்டு என்னை உபசரிக்கின்றாள்.

**வனதேவதை:** *(உள்ளே நுழைந்து காணிக்கைகளைப் பரப்பி)* தவமாதே, (இதுவும் சுலோகத்தின் பாகம்) விரும்பிய வாறே இவ்வனத்தை நீ அனுபவிக்கலாம்.)

1. *(உன் வரவால் இந்நாள் எனக்கு நன்னாளாயிற்று. சாதுக் களின் சேர்க்கை பெரும் புண்ணியத்தால் கிடைப்பதன்றோ? மரத்தின் நிழலும், புனலும், தவத்துக்குகந்த மூலபல ஆகாரமும் அனைத்தும் நினதென்றறிவாய்.)*

***தாபசி:*** இதற்கு நான் என்ன சொல்வேன்?

2. (அன்பு நிறைந்த ஆதரவு, விநயத்துடன் மதுரமான பேச்சு, நலத்தையே நாடும் இயல்புடையமதி, மாசற்ற தோழமை, முக்காலத்திலும் மாறாமல் என்றும் இன்பத்தேன் ததும்பும் நிர்மலகுணம் ஆகியவைகளே சாதுக்களின் வெற்றி தந்திரம்.)

*(இருவரும் உட்காருகிறார்கள்.)*

**வ.தே.** தாங்கள் யார், அம்மா?

***தாபசி:*** என் பெயர் ஆத்திரேயி.

**வ.தே:** தேவி ஆத்திரேயி, இங்கே வந்த காரணம் யாது? தண்டகாவன சஞ்சாரத்தால் தேடும் பிரயோசனம் என்ன?

**ஆத்திரேயி:**

3. *(சாமவேத கானத்தில் சிறந்தோர் பலர். அகஸ்தியர் முதலானோர் இவ்வனத்தில் வசிக்கின்றனர். அன்னாரிடம் வேதாந்த சித்தாந்தம் ஓதவேண்டி வால்மீகி ஆசிரமத்தை விட்டு வெகுதூரம் வந்திருக்கிறேன்.)*

**வ.தே:** மற்ற முனிவர்கள்கூட வேதம் ஓதுவதற்கு வேண்டி அந்தப் பழைய பிரம்மஞானியாகிய வால்மீகி மஹ ரிஷியைத் தேடிச் செல்லும்பொழுது தாங்கள் மட்டும் அவரை விட்டு நெடுந்தூரம் நடப்பானேன்?

**ஆத்:** அவ்விடம் வித்தியாப்பியாசத்திற்குப் பெரிய விக்கினம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் இந்நெடுநாள் யாத்திரை யில் கிளம்பினேன்.

**வ.தே:** எவ்விதமான தடை?

**ஆத்:** எவளோ ஒரு தேவதை, மிகவும் அதிசய குண முள்ள பால்மணம் மாறாத இரட்டைக் குழந்தைகளைக் கொண்டு வந்து பகவான் வால்மீகியிடம் சமர்ப்பித்தாள். அக்குழந்தைகள் ரிஷிகளை மட்டுமல்ல ஸ்தாவர ஜங்கமங்களோடு எல்லா ஜீவராசிகளின் மனத்தையும் கவர்ந்துவிட்டன.

**வ.தே:** அவர்களுக்குப் பெயர் வைத்தாய்விட்டதா?

**ஆத்:** அந்தத் தேவதையே குழந்தைகளின் பெயர்கள் லவகுசர்கள் என்று சொல்லி அவர்களின் மகிமையையும் தெரிவித்துப்போனாள்.

**வ.தே:** என்ன மகிமை?

**ஆத்:** ரகசியத்தோடு கூடிய ஜிரும்பகாஸ்திரங்கள் இக் குமாரர்களுக்குப் பிறப்பிலேயே கிடைத்திருக்கின்றன.

**வ.தே:** *ஆஹா! இதென்ன ஆச்சரியம்!*

**ஆத்:** பகவான் வால்மீகி தாமே இவர்களுக்குச் செவிலித் தாயாகிப் போஷித்து வளர்த்தார். சௌள கர்மம் செய்து வேதத்தைத் தவிர எல்லாக் கல்விகளையும் கற்பித்தார். பதினோராம் வயதில் சத்திரிய விதிப்படி உபநயனம் செய்வித்து மூன்று வேதங்களையும் ஓதுவித்தார். அதிகூர்மை மதியுள்ள இம்மேதாவி வாலிபர்களோடு என்னைப் போன்றவர் சேர்ந்து வித்தியாப்பியாசம் செய்ய முடியாது. ஏனெனில்,

4. *(மேதாவிக்கும் மூடனுக்கும் பொதுவான குருவரர் அதே வித்தையை ஒரேவிதமாக ஓதுகின்றார். அதனை ஏற்க அவர் ஆற்றல் அளிப்பதில்லை. எளிதில் ஏற்போருக்குத் தடையும் செய்வதில்லை. ஆயினும் கற்போரின் பலனிலோ பெரிய பேதம்: மணியில் தோன்றும் முகபிம்பம் மண்கட்டியில் தோன்றாது.)*

**வ.தே:** *இதுவே வித்தியாசப்பியாசத்தின் இடையூறு போலும்.*

**ஆத்:** *வேறொன்றும் உளது.*

**வ.தே:** *மற்றது யாது?*

**ஆத்:** *இதன்பின், ஒரு நாள் வால்மீகி முனிவர் மத்தியான்ன கருமங்களுக்காகத் தமஸா நதி சென்றார். அங்கே ஜோடியாக ஸஞ்சரித்த கிரௌஞ்ச பட்சிகளில் ஒன்று வேடனால் வீழ்த்தப்படக் கண்டார். திடீரென்று அவர் நாவிலிருந்து தீதிலாத் தீஞ்சொற்கள் அமைந்த பாசுரம் ஒன்று வெளிவந்தது.*

5. *('காமத்தால் மோகித்திருந்த கிரௌஞ்சங்களின் மிதுனத்தில் ஒன்றைக் கொன்ற பாதகனே! நிலைபெற்ற வாழ்வைப் பல்லாண்டு காலம் பெறாமல் தவித்துத் துயருற்றிடுவாய்.)*

**வ.தே:** வேதத்தில்தான் இதுவரை செய்யுள் உண்டு. நூதன கவிதையின் இந்த அவதாரம் விசித்திமானது.

**ஆத்:** அதே சமயத்தில் கவிதையைப் பெற்ற முனிவர் முன், கமலாசனர் பிரமதேவர் தோன்றி இவ்வாறு உரைத்தார்: 'ரிஷியே, உன் கவிதைக்கண் திறந்துவிட்டது. ராம சரித்திரத்தைச் செய்வாய். உன் கண்ணுக்கு அதனைத்தும் தடையின்றிக் காட்சி யளிக்கும். ஆதி புலவரானாய்.' இதைக்கூறிப் பிரமதேவர் மறைந்தார். பகவான் வால்மீகியும் மனிதர்களுக்குள் முதன் முதலாகச் சுலோகங்களில் ராமாயணத்தைச் செய்தார்.

**வ.தே:** விந்தை! இவ்வுலகத்திற்கு அலங்காரமாயிற்று.

**ஆத்:** இதனால்தான் வேதமோதுவதற்கு இடையூறு என்று சொன்னேன்.

**வ.தே:** பொருத்தமாக இருக்கிறது.

**ஆத்:** களைப்பா யிருக்கிறது, நல்லாய்! இப்பொழுது அகஸ்தியாசிரமத்தின் வழி செல்வாய்.

**வ.தே:** இங்கிருந்து பஞ்சவடியில் நுழைந்து கோதாவரி யின் கரையோரமாகச் செல்ல வேண்டும்.

**ஆத்:** *(கண்ணீருடன்)* இது அந்தத் தபோவனமா? இதுவே பஞ்சவடியா? இந்த நதிதான் கோதாவரியா? அந்த மலையும் பிரச்ரவணகிரியா? ஜனஸ்தான வனதேவதை வாசந்தகி நீயே போலும்.

**வ.தே:** அனைத்தும் அவ்விதமே.

**ஆத்:** ஆ, குழந்தாய் ஜானகி!

6. *(அடிக்கடி நீ போற்றும் உறவினர் குழாம் இவைதாமோ? உன் நாமமே மிஞ்சினாலும், இவைகளைக் கண்டதும் எதிர் நிற்கின்றாயே?)*

**வாச:** (பயத்துடன், தனக்குள்) ஏன், நாமம் மட்டும் மிஞ்சவேண்டும்? (வெளிப்படையாக) தேவி, சீதா தேவிக்கு என்ன தீங்கு சம்பவித்தது?

**ஆத்:** தீங்கு மட்டுமல்ல, தீச்சொல்லுங்கூட. (காதில் கூறுகிறாள்.)

**வாச:** விதியின் கொடிய கூற்று (மூர்ச்சையடைகிறாள்.)

**ஆத்:** நல்லாளே, தேற்றிக்கொள், வீண் வருத்தப் படாதே.

**வாச:** ஆ! என் ஆருயிர்த் தோழியே, ஆ! உத்தமியே, உன் தலைவிதி இப்படியா இருக்கவேண்டும்? ஆ! ராமபத்ரா - ஆனால் உன் வார்த்தை போதும் - தேவி ஆத்திரேயி, காட்டில் அவளை லஷ்மணன் விட்டுத் திரும்பியபின், சீதை என்ன வானாள் என்பதைப் பற்றி ஏதாவது தகவல் உண்டா?

**ஆத்:** இல்லவே இல்லை.

**வாச:** மிகவும் கஷ்டம். அருந்ததி, வசிஷ்டர் முதலிய ரகுகுலப் பெரியார் கூட்டம் ஜீவித்திருக்கையில், வயோதிக ராணிளும் உயிருடனிருக்கையில், இதெப்படி நேர்ந்தது?

**ஆத்:** பெரியோர்கள் அனைவரும் அப்பொழுது ரிச்ய சிருங்கரின் ஆசிரமத்திலிருந்தார்கள். இப்பொழுதுதான் பன்னி ரண்டு வருஷ யாகம் முடிந்தது. ரிச்யசிருங்கரால் பூஜிக்கப்பட்டு விடைகொடுத்து அனுப்பப்பட்டார்கள். பிறகு அருந்ததி, 'ஜானகி யில்லாத அயோத்திக்கு நான் போகமாட்டேன்' என்று கூறி விட்டாள். ராமனுடைய தாய்மார்களும் அதை ஆமோதித்தனர். இவர்கள் தீர்மானத்தை ஏற்றுப் பகவான் வஸிஷ்டரும், 'வால்மீகி முனிவரின் தபோவனத்தில் போய் வசிப்போம்' என்று முடிவு செய்தார்.

**வாச:** அந்த அரசர் இப்பொழுது என்ன செய்கிறார்?

**ஆத்:** அரசரால் அசுவமேதயாகம் தொடங்கப்பட்டிருக்கிறது.

**வாச:** ஐயோ! மறுபடியும் மணந்துவிட்டாரா!

**ஆத்:** பாவம், பாவம்! இல்லவே இல்லை.

**வாச:** அப்படியானால் யாகத்தில் பக்கத்தில் இருக்க வேண்டிய தர்மபத்தினிக்கு என்ன செய்வார்?

**ஆத்:** தங்கத்தால் செய்யப்பட்ட சீதையின் பிரதிமை.

**வாச:** விந்தையே, விந்தை!

7. *(கல்லைவிடக் கடினம், மலரிலும் மெல்லிய உத்தமர்களுள்ளம்; அதை யாரே அறியவல்லார்!)*

**ஆத்:** வாமதேவரால் மந்திரிக்கப்பட்டு அசுவமேதக் குதிரை விடப்பட்டது. சாஸ்திரத்தின்படி அதன் ரட்சகர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தலைவனாக, திவ்யாஸ்திரங்களில் தேர்ந்த லஷ்மண புத்திரன் சந்திரகேது, சதுரங்க சேனையோடு அனுப்பப்பட்டிருக்கிறான்.

**வாச:** (சிநேகத்தோடும், குதூகலத்தோடும்) குமார லஷ்மணனுக்கும் குமாரனா? அம்மா! எனக்குப் புத்துயிர் அளித்தாய்.

**ஆத்:** இதன் மத்தியில், செத்த புத்திரன் உடலை மாளிகையின் வாசற்படியில் வைத்து, மாரடித்துக்கொண்டு தந்தை பிராம்மணன் 'அக்கிரமம்' என்று அலறினான். அரசனது அநியாயத்தாலன்றி அகால மரணம் நேராதென்று, தம்பேரில் ராமபத்திரர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கையில், ஆகாயவாணி கூறிற்று.

8. *('சம்பூகன் என்ற கடையான் புவியில் தவம் புரிகின்றான். அவன் சிரத்தை அரிந்து, பிராம்மண குமாரனை எழுப்புவாய்.')*

இதைக் கேட்டுத் தம் வாளை உருவிக்கொண்டு, புஷ்பக விமானத்திலேறி எல்லாத் திக்குத் திசைகளிலும் சம்பூகனைத் தேடிக்கொண்டு, சக்கரவர்த்தி சஞ்சரிக்கிறார்.

**வாச:** சூத்திர குலத்தில் உதித்த சம்பூகன், புகையைப் புசித்து இந்த ஜனஸ்தானத்தில் தவம் செய்கின்றான். ஆதலால், ராமபத்திரர் ஒருகால் மறுபடியும் இவ்வனத்திற்கு விஜயம் செய்வோரோ?

**ஆத்:** அம்மா, இப்பொழுது நான் போகவேண்டும்.

**வாச:** தேவி, ஆத்திரேயி, அப்படியே செய். நாழிகையும் கழிந்து உக்கிரமான வெயிலாக இருக்கிறது.

9. *(இதோ பார்: நிழலில் இரை தேடித் தேடிப் புள்ளினங்கள் பட்டைகளிலிருந்து புழுக்களை வெளியில் இழுக்க; கூவிக் களைத்த புறாக்களும், வான்கோழிகளும், கூடுகள் நிரம்பிய கிளைகளில் தங்கியிருக்க; தினவெடுத்த யானைகள் கழுத்துகளைத் தேய்ப்பதால் அசையும் கரையோர மரங்கள் உஷ்ணத்தால் கட்டுத்தளர்ந்த மலர்களை உதிர்த்துக் கோதாவரியை அர்ச்சனை செய்கின்றன.)*

*(எல்லோரும் போகின்றனர்)*

**காட்சி முடிந்தது**

## 2

*(புஷ்பக விமானத்தில் வருத்தத்துடன் உருவியவாளைக் கையிலேந்தி ராமர் உட்கார்ந்திருக்கிறார்.)*

**ராமர்:**

*(வலது கரமே, நீ வேதியன் மகனை வாழ்விக்கச் சூத்திர முனிவர்மீது உடைவாளை வீசுவாய். முதிர்ந்த கர்ப்பத்தால் தளர்ந்த சீதையை வனமனுப்பிய ராமன் அங்கமல்லவா நீ? உனக்குக் கருணை ஏது?)*

*(கஷ்டத்துடன் வாளை வீசி) ராமனுக்கேற்ற காரியம் இப்பொழுது செய்யப்பட்டது. பிராம்மண புத்திரனாவது பிழைப்பானா?*

*(திவ்விய புருஷன் நுழைந்து)*

***திவ்விய புருஷன் :*** *தேவருக்கு ஜயமுண்டாகுக!*

*11.* *நீதிதண்டம் தாங்கி, யமன் பயத்தையும் தீர்த்துக் குழந்தையை உயிர்ப்பித்தாய்; என்னையும் உய்வித்தாய். சம்பூகனென்னும் அடியேன், உன்பாதம் பணிகின்றேன். மேலோர் கை மரணமும் முக்தி அளிக்குமன்றோ?)*

***ராமர்:*** *நமக்கு இரண்டும் பிரியம். தீவிரதவத்தின் பலனைத் தாங்கள் அடையுங்கள்.*

*12.* *(தேவ போகங்களும், பரமானந்தங்களும், புண்ணிய சம்பத்துக்களும் நிறைந்து மங்கள ஒளிவீசும் தேவலோகங் களைப் பெறக்கடவாய்.)*

***சம்:*** *தங்கள் கருணையாலன்றோ எனக்கு இந்த மகிமை? வெறும் தவத்தால் என்ன பயன்? ஆனால் தவந்தான் எனக்கு இப்பேருபகாரம் செய்தது.)*

*13.* *(பூதலமெல்லாம் தேடிச் சரண்புகும் பூதநாதனான தாங்கள் நீசகுலத்தோனை நாடிவந்து, நூறுயோஜனை வழிகடந்து, எனக்கு இந்தத் தவத்தின் பலனைத் தந்தீர்; இல்லை யேல் அயோத்தி துறந்து தண்டகாவனம் வரக் காரண மில்லையே?)*

***ராமர்:*** *இது தண்டகாவனமா? (நான்கு பக்கமும் பார்த்து) ஆகா இதென்ன?*

*14.* *(அழகிய நீலநிறம் ஒருபுறம், பயங்கரப் பாலைவனம் மறுபுறம்; எந்தத் திக்குத் திரும்பினாலும் மலையருவி களின் நீரோசை, புண்ணிய ஆசிரமங்கள், நதிகள், கிரிகள், தாழ்வரைகள் முன் அனுபவித்த தண்டகாவனப் பிர தேசங்கள் எதிர்நிற்கின்றன.)*

***சம்:*** தண்டகாவனம் இதுவே, இங்கேதான் முன் வசிக்கும்பொழுது தேவரால்,

*15. (கொடிய தீங்கிழைக்கும் பதினாலாயிரம் அரக்கர், கரன், தூஷணன், திரிசிரஸ் போரில் கொல்லப்பட்டனர். அதனால், சித்தக்ஷேத்திரமான இந்த ஜனஸ்தானத்தில் என் போன்ற பிரஜைகள் பயமின்றி சஞ்சரிக்கக் கூடியதாயிற்று.)*

***ராமர்:*** தண்டகாரண்யம் மட்டுமில்லை. ஜனஸ்தானம் கூடவா இது?

***சம்:*** அப்படியே. எல்லா உயிர்களும் நடுங்கும் கொடிய மிருகங்கள் வசிக்கும் குகைகள் அடங்கிய தண்டகா வனத்தின் அடர்ந்த அரண்யங்கள் இந்த ஜனஸ்தானத்தினின் றும் தொடங்கித் தெற்கே பரவுகின்றன. அவ்வாறே.

*16. (சில இடங்களில் சிறிதும் சப்தமில்லை; அப்பால் மிருகங்கள் பேரிரைச்சல் போடுகின்றன. அச்சமற்று உறங்கும் சர்ப்பங்கள் மூச்சினால் அனல் வீசுகின்றன. ஆங்காங்கு பள்ளங்களில் தேங்கிய ஜலம் பிரகாசிக் கின்றது. பாலையில், தாகமுற்ற பச்சோந்தி, மலைப் பாம்பின் வேர்வையைப் பருகுகின்றது.)*

***ராமர்:***

*17. (முன்காலம் கரன் வீடான ஜனஸ்தானத்தைக் காணு கின்றேன்; முன் சம்பவங்களை மீண்டும், நேரில் அனுபவிக்கின்றேன்.)*

*(நான்கு புறமும் பார்த்து)* வைதேகிக்கு எப்பொழுதும் காடுகளில் குதூகலம். அவ்வனங்களே இவை; இவற்றைவிடக் கோரமான காட்சியும் உண்டோ? *(கண்ணீருடன்)*

*18. (தேன் மணம் கமழும் காடுகளில், உன்னுடன் கூடவே நானும் வசிப்பேன் என்று கூறியவாறே வந்து இன்புற்றாள். அவளது அன்புநிலை அவ்வண்ணமாயிற்று.)*

19. (கருமமொன்றும் புரியாமலே, சுகம் தந்து துயரம் போக்கும் அன்பினரைப் பெற்றவனே உண்மைச் செல்வம் பெற்றவன்.)

**சம்:** கிட்டாத விஷயங்களைப் பற்றிப் பரிதபிக்க லாகாது. இந்த வனத்தின் மத்திய பாகத்தின் சாந்தத்தையும் கம்பீரத்தையும் மகானுபாவர் பார்த்து ஆனந்தப்படவேண்டும். மதம் பிடித்த மயில்கள் அழகிய கழுத்துடன் கூவுகின்றன. சுற்றிலும் இருண்ட நிழலோடு அடர்ந்திருக்கும் இளமரங்களின் சோலைகள் சோபிக்கின்றன. பலவித மான் கூட்டங்கள் கூச்சமின்றி சஞ்சரிக்கின்றன. இங்கே,

20. (மதமுள்ள பட்சிகளின் கூட்டத்தால் வளைந்தபிரப்பங் கொடிகளின் மலர் மணங்கொண்டு பழுத்துக் கறுத்திருக்கும் நாவல் மரங்களின் பழங்களில் தடைப்பட்டுச் சலசலவென்று தெள்ளிய அருவிகள் துள்ளுகின்றன.)

அது மட்டுமல்ல

21. (குகைகளில் வாழும் கரடிகளின் குமுறலைப் பாறைகளின் எதிரொலி பன்முறை பெருக்குகிறது. யானைகள் ஒடித்த சல்லகியின் பாலொழுகிக் குளிர் காற்றில் வாசனை வீசுகின்றது.)

**ராமர்:** (தன் கண்ணீரை அடக்கிக் கொண்டு) நல்லோனே, உன் வழிகளெல்லாம் மங்களமாகுக. தேவையான மார்க்கமாகப் புண்ணிய லோகங்களுக்குச் செல்வாய்.

**சம்:** முதலில் பழம் பெரும் அகஸ்திய மாமுனிவரை வந்தனம் செய்து, பிறகு என் நித்திய நிலையை அடைவேன். (போகிறான்.)

**ராமர்:**

22. (துறவறத்தையும் இல்லறத்தையும் ஒருங்கே பூண்டு அரண்யம் புகுந்து, இன்பமுடன் நாங்கள் பல நாள் வசித்த வனங்களை மீண்டும் இன்று நான் காண்கிறேன்.)

23. (தோகை மயில் கூவும் மலைகள் இவையே: உன் மத்த மான்கள் ஓடும் காடுகள் இவையே: மோகன வஞ்சியும், அடர்ந்த நாணலும் வனப்பை வளர்க்கும் நதிதீரங்கள் இவையே.)

24. (அருகில் ஓடும் கோதாவரியுடன் பிரச்ரவணகிரி அதோ மேகத்தின் மாலைபோல் தூரத்தில் தெரிகிறது.)

25. (இதன் உயர்ந்த சிகரத்தில், கழுகரசன் வசித்தான்; அடியில் கட்டிய கோதாவரியின் தெளிவான நீரில், பச்சை மரங் களின் பிம்பம் தோன்ற, உள்ளிருந்து புள்ளினங்கள் கூவ, வனங்களின் அழகு மனத்தைக் கவருகின்றது.)

இங்கேதான் அந்தப் பஞ்சவடி, அதன் ஒவ்வொரு பிர தேசமும் என் காதலியுடன் நான் அனுபவித்த இன்பங்களுக்கும், அன்பு மொழிகளுக்கும் சாட்சியாக இருக்கின்றது. இங்கேதான் ஜானகியின் பிரிய சகி வாஸந்தி என்ற வனதேவதையும் வசிக் கிறாள். ராமனுக்கு இதென்ன நேர்ந்துவிட்டது? இப்பொழுதோ

26. (நெடுங்காலம் கழித்துத் திடீரென்று வளரும் விஷம் போல, வெகு தூரம் உட்புகுந்து ஒடிந்த அம்பின் நுனி அசைவதுபோல், சதை மூடி மறைந்திருந்த மர்மத்தின் புண் வெடித்ததுபோல், என் சோகம் திரண்டு மயக்கி வருத்தி என்னை வாட்டுகிறது.)

அப்படியிருந்தும் பழந்தோழமை பூண்ட இப்பிரதேசங் களைப் பார்ப்பேன். (பார்த்து) ஆகா! பூமியின் பரப்புக்கூட மாறிவிட்டது.

27. (ஆற்று வெள்ளம் ஓடிய இடத்தில், மணல்திட்டு மட்டும் கிடக்கிறது. அடர்ந்த மரங்கள் தளர்ந்தும், தளர்ந்த இடங் கள் அடர்ந்தும் இருக்கின்றன. வெகுநாள் கழித்துப் பார்க்கும் எனக்கு வேறு வனமாகத் தோன்றுகிறது. குன்றுகளின் குறிகளைக் கொண்டே இதுவும் அதுதா னென்று மனத்திற்கு உறுதியாகிறது.

ஆச்சரியம்! விலக்க விரும்பினாலும், பஞ்சவடியின் பழைய சிநேகிதம் என்னைப் பலவந்தமாக இழுக்கிறது.

28. அவளுடன் இங்கே வசித்த அந்நாட்கள் வீட்டில்போலவே இனிது கழிந்தன. அக்காலத்தில் நெடுங்கதைகளைக் கூறிப் பொழுது போக்கி வந்தோம். அவளுடைய ஆசை நாயகன் அதே இந்த ராமன் இப்பொழுது இனியாளை நாசம் செய்து, தனியே பஞ்சவடியைப் பார்க்கத் தகுமோ? அதனை அலட்சியம் செய்துசெல்லவும் சாத்தியமோ?

சம்: தேவருக்கு ஜயம். அரசரே, பகவான் அகத்தியர் தங்கள் வரவை என்னிடமிருந்து அறிந்து கூறுகிறார்: 'புஷ்பக விமானத்திலிருந்து இறங்கும்பொழுது வரவேற்பதற்குச் சாமான்களைத் தயார் செய்துகொண்டு லோபமுத்திரை, மற்றத் தவ மகளிர் அனைவருடன், எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஆதலால் இங்கே வந்து இவர்களைக் கௌரவிக்க வேண்டும்; பிறகு வேகமுள்ள புஷ்பகத்திலேறி ஊர்சென்று அசுவமேத யாகத்திற்குத் தயாராகலாம்.'

**ராமர்:** பகவான் கட்டளைப்படியே.

**சம்:** அப்படியானால், புஷ்பகத்தை இப்பக்கம் திருப்புங்கள்.

**ராமர்:** (புஷ்பகத்தைத் திருப்பிக்கொண்டு) பகவதி, பஞ்சவடியே! பெரியோர் கட்டளையால் உன்பால் உள்ள என் கடமையைச் செய்யச் சிறிது நேரம் தவறுவதற்கு மன்னிப்பாய்.

**சம்:** தேவனே, இதோ பாருங்கள்.

29. (அடர்ந்த விருட்சங்களில் ஆந்தைகள் கூடி அலற, அசையும் மூங்கில்களில் காக்கைக் கூட்டம் அசைவற்றிருக்க, மயில்களின் ஓசையைக் கேட்டு மயங்கிய பாம்புகள் சந்தன மரத்திரலேறி நடுங்கும் கிரௌஞ்ச கிரியல்லவா இது?)

மற்றும் இதோ.

*30.* (கிரியின் குகைகளில் கோதாவரி வெள்ளம் கர்ஜித்துக் கொந்தளிக்க, கரிய மேகங்கள் சிகரங்களில் தங்கும் தென்திசை மலைகள் அதோ ஒன்றோடொன்று உறைந்து கூத்தாடிக் கோலாகலம் செய்யும் ஆழமுள்ள காட்டாறுகள் வேகத்தோடு கூடும் புண்ணிய ஸ்நான கட்டங்கள்.)

(எல்லோரும் போகிறார்கள்.)

**'பஞ்சவடிப் பிரவேசம்' என்ற இரண்டாவது அங்கம் முற்றிற்று.**



*41.* (உருவழிந்து, பெருமை மட்டும் மிஞ்சிய ராமனைத் திடீரெனக் கண்ட தாய்மார்கள், அறிவிழந்து மயங்க, ஜனங்கள் ராமனை அறிமுகப்படுத்த அவர்கள் துன்பம் தாங்காமல் மூர்ச்சையடைந்தார்கள்.)

**ராம:** ஆ தந்தையே! தாய்மார்களே! ஜனக பிதாவே!

*42.* (ஜனக வம்சத்துக்கும் ரகு வம்சத்துக்கும் மங்கள நூலாக விளங்கிய சீதையிடம் இரக்கங்கொள்ளாத ராமனிடம் உங்கள் கருணை வீண்.)

ஆனால் இவர்களுக்கு அடிபணிகிறேன்.

(எழுந்திருக்கிறார்)

**குசலவர்:** இப்படி வாருங்கள்.

(கண்ணீருடன் சுற்றிப் போகிறார்கள்.)

**''குமாரனைக் காணுதல்'' என்ற ஆறாம் அங்கம் முற்றிற்று.**

# மூன்றாவது அங்கம்

## 1

(இரண்டு 'நதி தேவதைகள்')

**ஒருத்தி:** சகி, முரளா, ஏதோ அதிக அவசரமாக இருக் கிறாயே ஏன்?

**முரளா:** சகி, தமஸா, பகவான் அகஸ்தியரின் பத்தினி லோபமுத்திரை நதிகளுக்குள் உத்தமியான கோதாவரிக்கு இந்தச் செய்தியை அனுப்பியிருக்கிறாள். ''உனக்கும் தெரிந்திருக்கும். மனைவியைத் துறந்தது முதற்கொண்டு.''.

1. *(மனஉறுதியால் வெளித்தோன்றாது அடங்கி இருக்கும் ராமன் சோகம் உள்ளே கனிந்து புடம்போட்டது போல் கொடிய வேதனை செய்கின்றது.)*

காதலிக்கு ஏற்பட்ட இத்தகைய கஷ்டத்தின் காரண மாகத் தாங்காத் துயரமுற்று ராமபத்திரன் மிகவும் மெலிந் திருக்கிறான். அவனைப் பார்த்து என் உள்ளம் நடுங்கிற்று. இப்பொழுது இங்கே திரும்பி வரும் ராமபத்திரன் பஞ்சவடி வனத்தில் தன் மனைவியோடு அன்னியோன்யமாக இருந்த பிரதேசங்களை அவசியம் பார்ப்பான். தைரிய சுபாவ முள்ள வனானபோதிலும் தற்போதைய அவஸ்தையில் தீவிர துக்கத் தால் கலக்கமுற்றிருக்கிறான். ஆதலால், ஒவ்வொரு இடத் திலும் அவன் மோகமடையக்கூடும். எனவே பகவதி கோதா வரி, நீ கவனமாக அவனைப் பார்த்துக் கொள்ளவேண்டும்.''

2. *(சீதள நீர்த் துளிகளையும், கமல கந்தத்தையும் கொண்டு மனம் கவரும் நீர் அலைக் காற்றினை மெதுவாக வீசி, ராமன் மயக்கத்தை அவ்வப்போது தீர்த்து மகிழ்ச்சி செய்திடுவாய்.)*

**தமஸா:** அன்பிற்குகந்த செய்திதான். ஆனால் ராம னுக்குப் புத்துயிரளிக்கும் உபாயம் அவன் அருகிலேயே இருக்கிறது.

**முர:** அது எவ்விதம்?

**தம:** கேட்பாய். முன் வால்மீகி தபோவனத்திற் கருகில் விட்டுவிட்டு லஷ்மணன் திரும்பிப் போனபிறகு, சீதா தேவிக்குக் கொடிய பிரஸவ வேதனை உண்டாக, அதனைத் தாங்க மாட்டாமல் கங்கையின் வெள்ளத்தில் வீழ்ந்தாள். அங்கேயே இரண்டு குழந்தைகளைப் பெற்றாள். பூதேவியும், பாகீரதியும் சேர்ந்து அவளைப் பாதாளத்திற்கு எடுத்துச் சென்றனர். முலைப் பாலால் வளரும் காலம் முடிந்ததும், குழந்தைகளைக் கொண்டு போய், கங்காதேவி வால்மீகி முனிவரிடம் சமர்ப்பித்தாள்.

**முர:** (ஆச்சரியத்துடன்) ஆபத்தில் உபகாரம் செய்ய உயர்ந்தோர் வந்தால், பெரியோரின் துக்கமும் பெருநல முடைத்து.

**தம:** இப்பொழுது சம்பூக விருத்தாந்தத்துடன், ராமர் ஜனஸ்தானம் வருவதைச்சரயூவிடம் கங்காதேவி கேட்டுப் பகவதி லோபாமுத்திரையைப் போலவே தானும் சந்தேகப்பட்டு, சீதை யோடுகூட ஏதோ வீட்டு வழக்கத்தை வியாஜமாகக் கொண்டு, கோதாவரியைக் காண இங்கே வந்திருக்கிறாள்.

**முர:** பாகீரதியின் யோசனை மிகவும் பொருத்த முள்ளது. ராஜதானியில் இருக்கும்பொழுது ராமபத்திரனுக்கு உலகத்தின் நன்மைக்கு வேண்டிய காரியங்களில் ஈடுபட்டு அவ்வளவு மனவேதனை உண்டாகாது. இங்கோ சோகந்தான் அவனுக்குத் தனித்தோழி. ஆதலால் பஞ்சவடி பிரவேசத்தால் பெரிய ஆபத்து நேரிடக்கூடும் என்று அவள் எண்ணியிருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது சீதாதேவியால் எவ்விதம் ராமனுக்கு ஆறுதலளிக்க முடியும்?

**தம:** இதை உத்தேசித்துக் கங்காதேவி சீதையிடம் இவ்வாறு கூறினாள்: 'குழந்தாய், யாகத்தில் பிறந்தவளே! இன்று,

சிரஞ்சீவிகளான லவ குசர்களுக்குப் பன்னிரண்டாம் வருஷ பூர்த்திக்கான மங்கள முடிச்சுப் போடவேண்டும். அதன்பொருட்டு உன் மாமனார் குலத்தின் ஆதிகர்த்தாவும், புண்ணியபுருஷருமான சூர்யபகவானை உன் கையால் பறித்த பூக்களைக் கொண்டு அர்ச்சனை செய்வாய். நீ பூமியில் இருக்கும்பொழுது வன தேவதைகள்கூட உன்னைப்பார்க்க முடியாதவாறு நான் செய் திருக்கிறேன். மனிதர்கள் ஒருகாலும் காணமுடியாது!' என்னையும் பகவதி பாகீரதி கட்டளையிட்டாள்: 'தமஸா, ஜானகிக்கு உன் னிடம் அளவுகடந்த பிரேமை. ஆதலால் இவளுக்குப் பக்கத்தில் இரு.' நான் இப்போது அக்கட்டளைப்படி இங்கே வந்திருக் கிறேன்.

**முர:** நானும் இந்த வரலாற்றைத் தேவி லோப முத்திரையிடம் தெரிவிக்கப்போகிறேன். ராமபத்திரன் வந்து விட்டான் என்று எண்ணுகிறேன்.

**தம:** இதோ பார், கோதாவரியின் மடுவிலிருந்து கிளம்பி,

3. (கூந்தல் கலைந்தசைந்து கன்னங்களை மறைக்க வெளுத் திருக்கும் சுந்தர முகத்துடன், சோகத்தின் மூர்த்தியோ அல்லது உடல் தாங்கிய விரக வேதனைதானே என வனம் வருகிறாள் ஜானகி.

**முர:** இவள்தானா அவள்!

4. கிளையிலிருந்து கிள்ளிய மெல்லிய இளம் தளிர்போல் தீராத் துயரத்தால் உள்ளம் வெதும்பிவாடித் துடிக்க இலை யுதிர்காலத்து உஷ்ணத்தால் தாழம்பூவின் உள்மடல் போல் இவள் அங்கம் வெளுத்து மிகவும் மெலிந்திருக் கிறாள்).

(இருவரும் போகிறார்கள்)

**(காட்சி முடிந்தது.)**

**2**

***(திரைக்குள்)***

மோசம் போயிற்று, மோசம் போயிற்று.

*(பூக் கொய்து கொண்டிருக்கும் சீதை கருணையுடனும் கவலையுடனும் கேட்கிறாள்.)*

*சீதை: அம்மா! என் பிரிய சகி வாசந்தியல்லவோ பேசுகிறாள்?*

*(மறுபடியும் திரைக்குள்)*

5. *(சல்லகியின் தளிர்களைச் சீதை தன் கையால் பறித்து ஆடும் துதிக்கையில் போட்டு வளர்த்த ஆண் யானைக்குட்டி.)*

***சீதை:*** *அதற்கென்ன?*

*(மறுபடியும் திரையில்)*

தன் இளம் காதலியோடு நீரில் விளையாடுகையில் வேறொரு மத்த கஜம் வந்து அதனை எதிர்த்துத் தாக்குகிறது.

***சீதை:*** (பரபரப்புடன் சில அடி தூரம் சென்று, ஆர்ய புத்திரா, என் குழந்தையைக காப்பாற்று, (ஞாபகம் பெற்று, வருத்தத்துடன்) ஐயையோ! வெகுநாள் பழகிய இச்சொற்களே, பஞ்சவடி தர்சனத்தால் துரதிருஷ்ட சாலியான என் நாவில் நிற்கின்றன. ஆ! ஆர்ய புத்திரா! (மூர்ச்சை யடைகிறாள்.)

*(நுழைந்து)*

**தம:** குழந்தாய் பொறுத்துக்கொள். வருத்தப்படாதே.

*(திரைக்குள்)*

*(விமான ராஜனே, இங்கே தங்குவாய்.)*

**சீதை:** (சிறிது தேறி, பயமும் ஆனந்தமும் அடைந்து) அம்மாடி! நீருண்ட மேகத்தின் மந்த கர்ஜனைபோல் ஆழ்ந்த கம்பீரமான இச்சொற்கள் என் காதுகளைப் பூரிக்கச் செய்து, பாக்கியமற்ற எனக்கும் புத்துயிர் அளிக்கின்றன.

**தம:** (நேசத்தோடு கண்ணீர் உதிர்த்து) குழந்தாய்!

6. (தெளிவின்றி எங்கிருந்தோ வரும் ஒரு குரல் கேட்டவுடன் மேக முழக்கத்தினால் ஆடும் மயில்போல் நீ ஆசையுடன் ஏன் நடுங்குகிறாய்?)

சீதை: பகவதி, தெளிவில்லை என்று ஏன் கூறுகிறாய்? அந்தக் குரலைக் கொண்ட என் நாதன் தான் பேசுகின்றாரென்று எளிதில் தெரிந்து கொண்டேன்.

**தம:** தவம் செய்யும் சம்பூகனுக்குத் தண்டனை விதிக்க, அயோத்தி அரசர் ஜனஸ்தானம் வந்திருக்கிறார் என்று கூறப் படுகிறது.

**சீதை:** அதிர்ஷ்டவசத்தால், நீதி தவறாமல் அரசர் செங்கோல் செலுத்துகிறார்.

(திரைக்குள்)

7. (மரங்களும் மான்களும் இஷ்ட பந்துக்களாக, நான் என் காதலியோடு கூட நீண்ட நாள் வசிக்கப்பெற்றவையும், குகையும் காட்டாறும் எங்கும் நிறைந்தனவும், கோதா வரிக்கு அருகிலுள்ளவையுமான கிரிப் பிரதேசங்களன்றோ இவை?)

**சீதை:** (பார்த்து) ஆகா! பொழுது விடியும்போதுள்ள சந்திர மண்டலம்போல் வெளுத்து இளைத்திருக்கும் உருவத் துடன், தமது சாந்த கம்பீர குணத்தால் மட்டும் அறியக் கூடிய வரான ஆரிய புத்திரரே அல்லவா இவர்? பகவதி, தமஸா, என்னைப் பிடித்துக்கொள். (தமஸாவைக் கட்டிக்கொண்டு மூர்ச்சையடைகிறாள்.)

**தம:** (பிடித்துக்கொண்டு) குழந்தாய், பொறுத்துக் கொள்.

(திரையில்)

இந்தப் பஞ்சவடியைப் பார்த்ததும்.

8. (உள்ளிருக்கும் துன்பத் தீ கொழுந்து விட்டெரியுமுன் அதன் புகை போன்ற மோகம் முதலில் என்னை மூடுகிறது).

**ஆ.** எனதன்பே, ஜானகி!

**தம:** (தனக்குள்) இதைத்தான் பெரியார் சந்தேகித்தார்.

**சீதை:** (தேறி) ஆ! இதென்ன?

(மறுபடியும் திரைக்குள்)

ஆ! தேவி! தண்டகாரண்யத்தில் என்னுடன் வசித்த பிரிய சகி, விதேக ராஜ புத்திரி! (மூர்ச்சையடைகிறார்.)

**சீதை:** கஷ்டம்! கஷ்டம்! இந்தப் பாவியைக் கூப்பிட்டு விட்டுத் தம் செந்தாமரைக் கண்களை மூடி மூர்ச்சையாகி விட்டாரே! ஐயோ! சுவாசம் ஒடுங்கி வெறும் தரையில் இப்படிக் கிடக்கிறாரே! பகவதி தமஸா நீதான் காப்பாற்ற வேண்டும். என் நாதனுக்கு உயிரளிப்பாய். (அவள் காலில் விழுகிறாள்.)

**தம:** உத்தமி, நீயே உலகநாதனை உயிர் மூட்டுவாய்; நீ அன்புடன் உன் கையால் தொட்டால் அவர் இன்புறுவார்.

**சீதை:** நடக்கிறது நடக்கட்டும். நீங்கள் சொல்லுகிற படியே செய்கிறேன். (பரபரப்புடன் வெளியே செல்லுகிறாள்.)

(அதன்பிறகு பூமியில் கிடந்த ராமனைச் சீதை கண் ணீருடன் தொட, உடனே அவர் ஆனந்தத்தோடு எழுந்திருக்கிறார்.)

***ராமர்:*** *இது என்ன! சந்தனத் தளிர்களின் ரசம் கசிகின்றதா? சந்திரகிரணங்களின் சாரம் பொழிகின்றதா? பரிதபிக்கும் ஜீவனுக்குப் புத்துயிரளிக்கும் சஞ்சீவி மூலிகையின் சாற்றை ஊற்றினார்களா? மேலும்.*

9. *(நான் தினம் தவறாமல் முன்பு அனுபவித்த ஸ்பர்சம் இதுவே புதிய உயிரளித்து மோகத்தையும் உண்டாக்குகிறது. துயரத்தைத் தீர்த்து மூர்ச்சை போக்கியதோடு ஆனந்த வெள்ளத்தால் மறுபடியும் மயக்குகிறது.*

***சீதை:*** *(பயத்தோடு பின்வாங்கி)* இதுவே இப்பொழுது அதிகம்.

***ராமர்:*** *(உட்கார்ந்து) அன்பு நிரம்பிய சீதா தேவியால் அனுக்கிரகம் செய்யப்பட்டேனோ?*

***சீதை:*** கஷ்டம், கஷ்டம்! என்னை இப்பொழுது ஆரிய புத்திரர் தேடுவாரா?

***ராமர்:*** இருக்கட்டும், பார்க்கிறேன்.

***சீதை:*** பகவதி தமஸா, நாம் இப்பொழுது போய் விடுவோம். ஆக்ஞையின்றி நான் அவர்முன் தோன்றினால் அரசர் அதிகம் கோபிப்பார்.

***தம:*** குழந்தாய், பாகீரதியின் அருளால் வனதேவதை கூட உன்னைப் பார்க்கமுடியாது அல்லவா?

***சீதை:*** ஆமாம், இதை மறந்துவிட்டேன்.

***ராமர்:*** *ஆ! அன்பே ஜானகி!*

*சீதை:* (வருத்தம் தொண்டையை அடைக்க) நாதா. அந்த நடத்தைக்கும் இந்தச் சொல்லுக்கும் சிறிதும் பொருத்தமில்லை. *(கண்ணீரோடு) என் இருதயமும் கல்லாய் போய்விட்டதே!*

ஜன்மாந்தரத்திலும் என்னை உத்தேசித்துப் பிரியத்துடன் இவ் வார்த்தைகள் கூற, எனக்கு அவர்மீது இரக்கமில்லாமல் போய் விட்டது. அவருடைய மனத்தை நான் அறிவேன், என் உள்ளத் தையும் அவர் அறிவார்.

***ராமர்:*** *(நான்கு பக்கமும் பார்த்து, வருததத்துடன்)* ஆ! இங்கு ஒன்றுமில்லையே!

***சீதை:*** பகவதி தமஸா, காரணமின்றி என்னை அப்படித் தள்ளிவிட்டபோதிலும், இவரை இந் நிலைமையில் கண்டு என் மனப்போக்கு ஏதோ அறியக்கூடாதவாறு இருக்கிறது

***தம:*** அறிவேன், குழந்தாய், அறிவேன்.

*10. (ஆசையிழந்து ஒடிந்தும், கொடுமையால் கலங்கியும். நீண்ட பிரிவு திடீரென்று நீங்கியதால் மயங்கியும் இருக்கும் உன் உள்ளம், நேசத்தால் தெளிந்து இத்தருணம் அன்பால் கரைந்து உருகிவிட்டது.)*

***ராமர்:*** தேவி!

*11. (அன்பால் குளிர்ந்து, அருளின் திரள்போல் உன் ஸ்பர்சம் இன்னும் எனக்கு இன்பமூட்டுகிறது. ஆனால் நீ மட்டும் எங்கு இருக்கிறாயோ அறியேன்.)*

***சீதை:*** நாதனுடைய இந்த சொற்கள் அளவற்ற அன்பைக் காட்டுகின்றன. ஆனந்தமயமான அமிர்தமழையாக இருக்கின்றன. அநியாயமாகத் தள்ளப்பட்ட துன்பம் வாட்டுகின்ற போதிலும் இவைகளைக் கேட்டதும் என் பிறப்பும் சபலமாயிற் றென்று எண்ணுகிறேன்.

***ராமர்:*** என் காதலி இங்கே எப்படி இருப்பாள்? ஓயா மல் அவளைக் கற்பனையில் காணுவதால் ஏற்பட்ட என் மோகந்தான் இது.

*(திரைக்குள்)*

ஐயோ! பெரிய அநியாயம், அநியாயம்! சல்லகியின் துளிர்களைச் சீதை தன் கையால் பறித்து, ஆடும் துதிக்கையில் போட்டு வளர்த்த ஆண் யானைக்குட்டி!

**ராமர்:** (துன்பத்துடன்) அதற்கு என்ன?

(திரைக்குள்)

அது தன் இளம் காதலியோடு நீரில் விளையாடுகையில் வேறொரு மத்தகஜம் வந்து, அதனை எதிர்த்துத் தாக்குகிறது.

**சீதை:** யார் இதைத் தடுப்பார்?

**ராமர்:** பிடியோடு கூடிய என் காதலியின் வளர்ப்புப் பிள்ளையை எதிர்க்கும் துஷ்டன் எவன்?

(எழுந்திருக்கிறார்)

(வேகமுடன் நுழைந்து)

**வாச:** தேவர் ரகுநந்தனரா?

**சீதை:** பிரிய சகி வாசந்தி அல்லவா?

**வாச:** தேவருக்கும் ஜயம்.

**ராமர்:** (கவனித்து) தேவியின் பிரிய சகிவாசந்தி அல்லவா?

**வாச:** தேவ, சீக்கிரம் வாருங்கள். இதோ ஜடாயு சிகரத்தின் தெற்கே சீதா தீர்த்தத் துறையில் கோதாவரியில் இறங்கித் தேவியின் வளர்ப்புப் பிள்ளையைக் காப்பாற்றுங்கள்.

**சீதை:** தந்தை ஜடாயு, நீ இல்லாமல் இந்த ஜனஸ்தானம் சூன்யமாகிவிட்டது.

**ராமர்:** கஷ்டம்! இந்தப் பழைய ஞாபகங்கள் என் இதயத்தைப் பிளக்கின்றனவே!

**வாச:** இவ்வழி பாருங்கள், தேவ!

**சீதை:** பகவதி வனதேவதைகூட என்னைப் பார்க்க முடியாதென்பது சத்தியமாக விளங்குகிறது.

**தம:** குழந்தாய். மற்ற தேவதைகளைவிட, கங்காதேவியின் மகிமை அதிகமல்லவா? உனக்கு ஏன் சந்தேகம்?

**சீதை:** அதனால், நாமும் அவர்கள்பின் செல்லுவோம்.

(எல்லோரும் நடக்கிறார்கள்.)

**ராமர்:** (கை கூப்பி) பகவதி கோதாவரி, உனக்கு நமஸ்காரம்.

**வாச:** (சுட்டிக்காட்டி) தேவரே, ஜயித்துவிட்டுத் தன் மனைவியுடன் வரும் தேவியின் குமாரனைக் கண்டு களிப்பீர்.

**ராமர்:** ஜயத்துடன் சிரஞ்சீவியாக இருப்பாயாக!

**சீதை:** ஆகா! என் பிள்ளை எப்படி வளர்ந்துவிட்டான்!

**ராமர்:** ஆ! தேவி! நீ போற்றத் தகுந்தவள்.

12. (இளந்தாமரைத் தண்டுபோல் அழகிய தந்தம் வெளிவர, உன் காதில் இருந்த தளிரை இழுத்து விளையாடிய மகன் மதமொழுகும் வாரணத்தை வென்று இதோ நிற்கின்றான்; யௌவன வயதிற்குரிய மங்களமெல்லாம் கூடினான்.)

**சீதை:** உன் அழகியை விட்டுப் பிரியாமல் தீர்க்காயுசாக வாழக் கடவாய்.

**ராமர்:** சகி, வாசந்தி, பார்! தன் காதலியைத் திருப்தி செய்யும் சாதுர்யமெல்லாம் இது கற்றுவிட்டது.

13. (கமலத் தண்டை லீலையுடன் பிடுங்கி, உணவு ஊட்டி, தாமரை நீரைத் துதிக்கையால் அதன்பின் அளித்து,

தண்புனலைத் தலையில் வேடிக்கையாகத் தெளித்து, நேர்த்தண்டு நளினக்குடை நேசமுடன் தாங்குகிறது.)

***சீதை:*** பகவதி தமஸா, இது இப்படி வளர்ந்திருக்கிறதே. இந்தக் காலத்தில் அந்தக் குசலவர்கள் எப்படி வளர்ந்திருக்கிறார்களோ, தெரியவில்லையே?

**தம:** இதைப் போலவேதான் அவர்களும்.

***சீதை:*** எப்பொழுதும் என் நாதனின் விரகம் மட்டுமின்றி, புத்திரர்களையும் பிரிந்திருப்பது என் துரதிருஷ்டம்.

**தம:** விதியின் பலன் இது.

***சீதை:*** நான் அவர்களைப் பெற்றுப் பயன் என்ன? அங்குமிங்கும் இடம் விட்டு முத்துக்கள் முளைத்தது போன்ற பற்களைக் காட்டிக்கொண்டு, காரணமின்றிக் கலகலவென்று சிரித்துக்கொண்டு, மழலைச் சொல்லோடு, முன்னந்தலையில் சுருண்ட மயிரோடு கூடிய, அந்த இரண்டு கமல முகங்களையும் என் நாதன் ஒருமுறைகூட முத்தமிடவில்லையே.

**தம:** - ஈசனருளால் அதுவும் கைகூடும்.

***சீதை:*** - பகவதி தமஸா, குழந்தைகளின் ஞாபகத்தால் என் மார்பு பூரித்துப் பால் சுரக்கின்றது. அவர்களுடைய தந்தையும் அருகில் இருப்பதால் ஒரு நொடிக்கு நானும் இல்லாளாக மாறிவிட்டேன்.

**தம:** இதைக் கூறவும் வேண்டுமா? அன்பிற்கு இறுதி எல்லை குழந்தை அல்லவா? அது பெற்றோரைப் பிணைத்து வைக்கும் பெரிய பாசம் அல்லவா?

*14.* *(தாய்தந்தையரின் இதயத்தை அன்பினால் இறுகப் பிணைத்து, ஆனந்தத்தால் ஒன்றாக முடிபோடுபவர்கள் மக்கள்.)*

**வாச:** தேவர் இந்தப் பக்கமும் பார்க்கவேண்டும். நாள் தோறும் வண்ணத்தோகை வளர, உம் காதலி வளர்த்த ஆண் மயில் மணிமகுடச் சிகையோடு கதம்ப மரத்தில் தன் தோழி யோடு கூடிக் கூவுகின்றது.

**சீதை:** *(ஆனந்தக் கண்ணீருடன்)* இவன்தான் அவன். அவன்தான் இவன்.

**ராமர்:** களித்தாடு, குழந்தாய், களித்தாடு.

**சீதை:** அப்படியே செய்.

**ராமர்:**

*15. (நீ சுற்றிச் சுற்றி ஆட, உன்னை நோக்கிய கண்கள் ஊச லாடும் புருவங்களில் மண்டலமாகச் சுழல, தளிர் போன்ற கரங்களைத் தட்டி என் தேவி உன்னை நர்த்தனம் செய் வித்தாள். மகனே! அதனை அன்புடன் நினைக்கின்றேன்.)*

**ராமர்:** ஆச்சரியம்! அறிவில்லாப் பிராணிகளும் பழகிய வர்களை மதிக்கின்றன.

*16. (மிதமாகப் பூத்திருக்கும் இக்கதம்ப மரமும் என் பிரிய பத்தினியால் பரிவுடன் வளர்க்கப்பட்டது.)*

**சீதை:** *(கண்ணீருடன் நோக்கி)* ஆரிய புத்திரர் சரியாக அடையாளம் கண்டுகொண்டார்.

**ராமர்:** இந்த மயிலும் சீதையை மறக்கவில்லை. அவளைச் சேர்ந்தவனென்று என்னைக் கண்டு களிக்கிறதல்லவா?

**வாச:** இங்கே தேவர் ஆசனத்தில் அமரவேண்டும்
*(ராமர் உட்காருகிறார்.)*

**வாச:**

17. (இந்த வாழை வனத்தின் நடுவில் நீரும் உம் காதலியும் படுத்து உறங்கும் கட்டிலான கற்பாறையும் இதுவே. இங்கே வசித்து, சீதை கையால் பல நாள் புல் புசித்த புள்ளிமான்கள் இதை இன்னும் விடுவதேயில்லை.)

**ராமர்:** இதை என்னால் பார்க்கக்கூட முடியவில்லை. (அழுதுகொண்டு வேறிடம் உட்காருகிறார்.)

**சீதை:** சகி, வாசந்தி! இதைக் காண்பித்து ஆரியபுத்திர ருக்கும் எனக்கும் என்ன துன்பம் செய்துவிட்டாய்? கஷ்டம், கஷ்டம்! அதே ஆரியபுத்திரர்; அதே பஞ்சவடி வனம்; அதே பிரியசகி வாசந்தி. எங்கள் பரஸ்பர சல்லாபங்களுக்குச் சாட்சி களான அதே கோதாவரிக் காடுகளின் பிரதேசங்கள்; எங்களுக்குக் குழந்தைகள் போலிருந்த அதே மான்கள், மயில்கள், மரங்கள்; அதே நான்; ஆனால் அதிருஷ்டமில்லாத எனக்கு இவை கண் முன் நின்றும், அறவே அற்றுவிட்டனபோல் தோன்றுகின்றன! என் வாழ்க்கைப் புரட்சி இது.

**வாச:** சகி, சீதை! ராமபத்திரனுடைய அவஸ்தையை நீ பார்க்கவில்லையா?

18. (புதிய செங்கழுநீர் மலர்போல் பார்க்கப்பார்க்கப் பிரியம் வளர்ந்து பக்கத்தில் இருப்போருக்கும் என்றும் புதியன வாகத் தோன்றுபவன், துயரத்தால் தளர்ந்து மெலிந்து வெண்ணிறம் எங்கும் படர்ந்து அவனென்று அறிவதற் கரிதாகியும் கண்கொள்ளாக் காட்சியாவான்.)

**சீதை:** பார்க்கிறேன், சகி, பார்க்கிறேன்.

**தம:** பார்த்து மகிழ்வாய்.

**சீதை:** ஏ தெய்வமே! என்னை விட்டு இவரும், இவரை விட்டு நானும் இருப்போமென்று யாராவது கனவிலும் நினைத்த துண்டா? ஆதலால் சிறிது நேரம் மறுபிறப்பில் கிடைத்த

காட்சிபோல் கண்ணீருக்கிடையில் என் அன்பு நிறைந்த நாதனைப் பார்ப்பேன்.

(இப்படிப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள்.)

**தம:** (கண்ணீருடன் கட்டிக்கொண்டு)

19. (ஆனந்தக் கண்ணீர் அளவின்றிச் சொரிந்து, ஆசையால் விரிந்து நீண்ட உன் நயனங்கள், வெண்மை மிகுந்த பால்போன்ற பார்வைகளால் அன்பு மாரி பொழிந்து நாயகனை மூழ்குவிக்கின்றன.

**வாச:**

20: (தேனொழுகும் தருக்களே, பூவும் பழமும் தந்து பூஜியுங்கள். மலர்ந்த தாமரையின் இனிய வாசனையுடன் வீசுவாய். காட்டுக் காற்றே இனிய குரலுடைய புள்ளினங்களே. வாய்விட்டுப் பாடுங்கள். மன்னர் ராமர் மறுபடியும் இவ்வனம் வந்திருக்கிறார்.)

**ராமர்:** சகி, வாசந்தி, வந்து நீயும் இங்கே உட்கார்.

**வாச:** (கண்ணீருடன் உட்கார்ந்து) மகாராஜா, குமாரன் லஷ்மணன் சௌக்கியமா?

**ராமர்:** (கேட்காமல்)

21. (மைதிலி தன் செங்கமலக் கையால் தளிரும், தானியமும் தண்ணீரும் தந்துவளர்த்த மானையும், மரத்தையும், மயிலையும் நான் கண்டவுடன், கல்லையும் கரைக்கவல்ல திராவகம் போன்றதோர் என்றும் காணாத உணர்ச்சி என் உள்ளத்தில் உதிக்கிறது.)

**வாச:** மகராஜா, குமாரன் லஷ்மணன் சௌக்கியமா என்று நான் கேட்பது காதில் விழவில்லையா?

**ராமர்:** *(தனக்குள்)* எனக்கு அன்பில்லாத 'மகாராஜா' என்ற சொல். லஷ்மணனுக்கோ கண்ணீரால் தட்டுத் தடுமாறிய அன்புடன் கூடிய விசாரணை: இதனால், இவளுக்குச் சீதையைப் பற்றிய விருத்தாந்தம் தெரியும் போலிருக்கிறது. *(வெளிப்படையாக)* ஆம். லஷ்மணன் சௌக்கியம்.

**வாச:** *(அழுதுகொண்டு)* ஆ! தேவ! ஏன் இவ்வளவு கொடியவராகிவிட்டீர்?

**சீதை:** சகி, வாசந்தி, நீ ஏன் இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாய்? யாருமே ஆரிய புத்திரரிடம் பிரயமாகப் பேச வேண்டும். விசேஷமாக என் பிரிய சகிக்கு அது கடமை அல்லவா?

*(மோகமடைகிறாள்)*

**தம:** நல்ல இடத்தில் வார்த்தையை நிறுத்தி மோகமடைந்தாள்.

**ராமர் :** சகி , வருந்தாதே

**வாச :** *(தேறி)* தேவரால் எதற்காக இந்தக் காரியம் செய்யப்பட்டது?

**சீதை :** சகி வாசந்தி! போதும், நிறுத்து.

**ராமர்:** உலகத்தார் பொறுக்கவில்லை என்று.

**வாச:** எக்காரணத்தால்?

**ராமர்:** அவர்களுக்குத்தான் தெரியும்?

**தம:** காலங் கடந்த கண்டனம்.

**வாச:**

23. (உனக்குப் புகழ்மீதல்லவா ஆசை, கல்மனத்தோய்? ஆனால் இதைவிட வேறு அபகீர்த்தி ஏது? காட்டில் அந்த மான்விழியாளின் கதி என்ன தான் ஆயிற்று? ஐயனே, சொல்லுவாய்.)

***சீதை:*** உன் மனந்தான் கல், சகி வாசந்தி! இல்லாவிட்டால் ஆரிய புத்திரரின் எரியும் சோகத் தீயை அதிகமாக மூட்டுவாயா?

**தம:** சோகமும் நேசமும் சேர்ந்து இப்படி அவளைச் சொல்லச் சொல்லுகின்றன.

***ராமர்:*** சகி, அதில் நினைப்பதற்கு என்ன இடம் இருக்கிறது?

24. (மான்குட்டிபோல் மிரண்டு விழிப்பவளும், அசைந்து துடிக்கும் கர்ப்பத்தை ஓராண்டு தாங்கி மெல்ல நடப்பவளுமான ஜானகியின், நிலாவைப் போலும் இளங் கமலத்தண்டு போலுமுள்ள கொடி உடல் கொடிய காட்டு மிருகங்களுக்கு இரையாயிற்று.)

***சீதை:*** நாதா, இன்னும் இருக்கிறேன். உயிருடன் இருக்கிறேன்.

***ராமர்:*** ஆ! அன்பே, ஜானகி! எங்கே இருக்கிறாய்? (அழுகிறார்.)

**தம:** குழந்தாய், இது சரியே. துக்கப்பட்டே துக்கத்தைத் தீர்க்க முடியும்.

25. (குளத்தை மிஞ்சிய வெள்ளத்திற்கு வடிகால் வழி: தாங்கமுடியாத் துன்பத்திற்குப் புலம்பல் பரிகாரம். பலவிதக் கஷ்டங்களுக்கு மத்தியில் ஜீவிக்கும் ராமபத்திரனுக்கும் இது விசேஷமாகப் பொருந்தும்.)

26. *(அறம் தவறாதுமனம் செலுத்தி உலகனைத்தும் காக்க வேண்டும். கோடை வெயில் மலரை வாட்டுவதுபோல் காதலியின் பிரிவு உயிரை உலர்த்துகிறது. தானே அவளைத் துறந்தபின் பிறரிடம் புலம்பித் தேறவும் வழிஇல்லை. இன்றுதான் பெருமூச்சு விட்டுப் பரிதபிக்கும் பாக்கியம் பெற்றார்.)*

***ராமர்:*** *ஐயோ! மிகவும் கஷ்டம்!*

27. *(இதயத்தைத் துளைக்கும் துயரம், அதை இரண்டு துண்டாகப் பிளக்கவில்லை. உடலைத் தளர்த்தும் மோகம் உணர்வைப் போக்கவில்லை. உள்ளத்தைக் கொளுத்தும் தீ, சாம்பலாகச் செய்யவில்லை. என் மர்மத்தை வெட்டும் விதி உயிரை மாய்க்கவில்லை.)*

***சீதை:*** இது இப்படித்தான்

***ராமர்:*** ஓ, என் நாட்டார்களே!

28. *(என் தேவி வீட்டில் வசிக்க உங்களுக்கு இஷ்டமில்லை; புல்லெனப் பாவித்து அவளை வனத்தில் விட்டபோதும் நான் வருந்தவில்லை. பலநாள் பழகிய காட்சிகளைக் கண்டு பொறுக்காமல், இப்போது மனமுருகிக் கதறு கிறேன். அதனை மன்னித்தருள்வீர்.)*

***வச:*** *(தனக்குள்)* இவருடைய துன்பம் எல்லையைத் தாண்டுகிறது. *(வெளிப்படையாக)* தேவ, காரியமே கடந்து விட்டது. தைரியமே கொள்ளவேண்டும்.

***ராமர்:*** *சகி, தைரியத்திற்கு என்ன குறைவு?*

29. *(என் நாயகி புவியை நீத்துப் பன்னிரண்டாண்டுகள் ஆயின. அவள் பெயர் மறைந்தது. ஆயினும் ராமன் உயிருடன் இல்லையா?)*

**சீதை:** நாதனின் இந்த வசனங்கள் எனக்கு மயக்கத்தை உண்டாக்குகின்றனவே.

**தம:** ஆமாம், குழந்தாய், அப்படியே.

*30. (கொடிய விஷம் கலந்து உன்மேல் அமிர்த மழை பொழிந்தது போல், மிகுந்த சோகத்தோடு அன்பு ததும்பும் இம்மொழிகள் உனக்கு மகிழ்ச்சி தரமாட்டா)*

**ராமர்:** *ஆ! வாசந்தி!*

*31. (எரியும் கொள்ளியால் மார்பில் குத்தி பதுபோல், கொடிய விஷப் பாம்பு ஆழமாகக் கடித்தது போல், இதயத்தில் புகுந்து மர்மத்தைத் துளைக்கும் இத்தாங்காத் துயரத்தையும் நான் பொறுக்கவில்லையா?)*

**சீதை:** இவ்விதம் நான் நாதனுக்கு மறுபடியும் துக்கத்தை உண்டாக்கும் மந்த பாக்கியமுள்ளவளாகிவிட்டேன்.

**ராமர்:** மனத்தை அடக்கி நிலை நிறுத்தும் சக்தி பெற்றிருந்தும், முன் பழக்கமுள்ள அந்தந்தப் பொருளைப் பார்த்து, என் மனத்தில் துயரம் அடங்காமல் பெருகிவிட்டது.

*32. (பொங்கியெழும் துயரத்தைத் தடுத்து அடக்குவதற்கு, மணல் அணையை உடைக்கும் பெரியவெள்ளம்போல், ஓர் உணர்ச்சிவெள்ளம் என் உள்ளத்தை உடைக்கிறது.)*

**சீதை:** நாதனின் தாங்கமுடியாத இந்தக் கொடிய துயரத்தைக் கண்டு என் மனம் தன் சொந்தத் துன்பத்தையும் மறந்து குழப்பமடைகின்றது.

**வாச:** (தனக்குள்) தேவர் மிகவும் கஷ்டப்படுகிறார். ஆதலால் அவரை வேறிடம் திருப்புகிறேன். (வெளிப்படையாக) இங்கு வந்து வெகுநாளாகி விட்டதால், இந்த ஜனஸ்தானத்தைப் பார்த்துக் கௌரவிக்க வேண்டும்.

**ராமர்:** அப்படியே, (எழுந்து சுற்றுகிறார்.)

*சீதை:* சகி, இவருக்கு விநோதமாகச் செய்யும் உபாயம் அவர் வருத்தத்தைான் வளர்க்கும்.

**வாச:** (தீனமாக)

33. (இதோ கொடி வீட்டில் அவளை எதிர்ப்பார்த்து நீர் காத்திருக்க, அவள் கோதாவரி மணலில் அன்னங்களோடு நெடுநேரம் விளையாடிவிட்டுத் திரும்புகையில் உமது சோர்ந்த முகங் கண்டு நடுநடுங்கித் தூரத்திலேயே தாமரை மொட்டுப்போல் கைகூப்பி வந்தனை செய்தாள்.)

**சீதை:** உன் மனம் கல், அம்மா வாசந்தி! இதயத்தின் மர்மங்களைத் துளைக்கும் இந்த விவரங்களால் ஓயாமல் என்னையும் ஆரிய புத்திரரையும் துன்புறுத்துகிறாயே.

**ராமர்:** கருணையில்லாத ஜானகியே, நீ இங்கும் அங்கும் காணப்படுகிறாய். ஆயினும் உனக்கு இரக்கமில்லையா?

34. (ஐயோ தேவி! என் இதயம் உடைகிறது; தேகம் தளர்கிறது; உலகம் சூன்யமாகிறது. உள்ளம் பற்றி எரிகிறது; சூழிருளில் வழியின்றி என் ஆத்மா மூழ்குகின்றது; முழுதும் மோகம் மூடுகின்றது. பாவியேன், என்ன செய்வேன்?)

(மூர்ச்சையடைகிறார்.)

**சீதை:** ஐயோ, கஷ்டம்! ஆரிய புத்திரர் மீண்டும் மூர்ச்சையடைந்தாரே.

**வாச:** தேவ, வருந்தாதீர்கள். பொறுத்துக் கொள்ளுங்கள்.

**சீதை:** நாதா, இந்த அபாக்கியவதியை நினைத்து எல்லா ஜீவன்களின் நன்மைக்கும் ஆதாரமான தாங்கள் அடிக்கடி உயிருக்கு அபாயம் வருமாறு வருந்தும் கதி கிடைத்திருக்கிறது. நானும் அழிந்தேன். (மூர்ச்சையடைகிறாள்.)

**தம:** குழந்தாய், பொறுத்துக்கொள். திரும்பவும் நீ தொடுவதுதான் ராமபத்திரனை மூர்ச்சை தெளிவிக்கும் உபாயம்.

**வாச:** இன்னும் நினைவு வரவில்லையே? ஆ! பிரியசகி. சீதை, எங்கிருக்கிறாய்? உன் பிராணநாதனைக் காப்பாற்று.

*(சீதை பரபரப்புடன் வந்து நெற்றியிலும் மார்பிலும் தொடுகிறாள்.)*

**வாச:** நல்ல வேளையாக ராமபத்திரனுக்கு நினைவு வந்துவிட்டது.

**ராமர்:**

*35.* *(உள்ளும் புறமும் உடலின் அணுக்களெல்லாம் அமிர்தக் குழம்பால் பூசியது போல, திடீரெனத் தோன்றி உயிரளித்தது. அதே ஸ்பர்சம் மீண்டும் ஆனந்தத்தால் வேறுவித மயக்கம் செய்கிறது.)*

*(சுகத்தால் கண்ணை மூடிக்கொண்டு)*

*சகி, வாசந்தி, உனக்கு அதிருஷ்டம்.*

**வாச:** தேவ, அதென்ன?

**ராமர்:** *சகி, வேறென்ன? ஜானகி திரும்பவும் கிடைத்தாள்.*

**வாச:** மன்னவா, ராமபத்திரா, அவள் எங்கே?

**ராமர்:** *(ஸ்பர்ச சுகத்தைக் காட்டி)* பார், இவள் என் முன்னேதானே நிற்கிறாள்!

**வாச:** மன்னவ, மர்மங்களைப் பிளக்கும் இந்தப் புலம்பலால் சகியை இழந்து வருந்தும் இப்பாவியின் துக்கத் தீயை ஏன் மூட்டுகிறாய்?

**சீதை:** நான் பின்செல்ல விரும்புகிறேன். ஆனால் வெகுநாள் கழித்து மீண்டும் கிடைத்த ஆரிய புத்திரரின் சீதள ஸ்பர்சத்தால் என் துயரம் சிறிது நீங்கிற்று. என் கையும் வியர்த்துத் துடிப்பதோடு, வச்சிரப்பசை போட்டு ஒட்டியதுபோல் என் வசமில்லாமல் போய்விட்டது.

**ராமர்:** சகி, புலம்பலேது?

36. *(கங்கணத்தோடு முன்பு திருமணத்தில் பிடித்து, அதன் அமிர்தம் போன்ற சீதள ஸ்பர்சங்களைப் பலநாள் பழகிய நான் அந்தக் கரத்தை அறியேனோ?)*

**சீதை:** ஆரிய பத்திரா, அன்றிருந்தவரே நீங்கள் இன்றும்.

**ராமர்:** பனிக்கட்டிபோல் குளிர்ந்து, தளிர்போல் மிருதுவான அதே கையை இதோ பிடித்தேனல்லவா?

*(பிடிக்கிறார்.)*

**சீதை:** அடடா! நாதனைத் தொட்டு மயங்கிப் பெருந்தவறு செய்துவிட்டேன்.

**ராமர்:** சகி, வாஸந்தி, ஆனந்தத்தால் பரவசமாகி என் இந்திரியங்கள் சக்தியற்றிருக்கின்றன. ஆதலால் நீ என்னைப் பிடித்துக்கொள்.

**வாச:** கஷ்டம்! பைத்தியந்தான்!

*(சீதை பரபரப்புடன் கையை இழுத்துக் கொள்ளுகிறாள்.)*

**ராமர்:** ஆகா! மோசம் போனேன்!

37. *(அசைவற்று வியர்த்துத் துடித்த அவள் கை அதே நிலையிலிருந்த என் கையிலிருந்து நழுவியது.)*

**சீதை:** கஷ்டம்! விழித்தும், மயங்கியும், சுழன்றும் நிலையற்றிருக்கும் கண்களையுடைய இவர் இன்னும் சரியான புத்திக்கு வரவில்லை.

***தம:*** *(நேசத்தோடும் புன்சிரிப்போடும் அவளைப் பார்த்து)*

38. *(காற்றுடன் புது மழை பொழிந்ததால் துளிர்த்த கதம்ப மரக் கிளைபோல், நீயும் நாதனைத் தொட்ட சுகத்தால் வியர்த்து மயிர்க்கூச்சலுடன் நடுங்குகின்றாய்.)*

***சீதை:*** *(தனக்குள்) சீ! என் மனத்தை அடக்கிக் கொள்ள முடியாதனனால் பகவதி தமஸா பரிகாசம் செய்கிறாள். நிராகரிக்கப்பட்ட எனக்கு இவ்வளவு பிரேமை இருப்பதைக் கண்டு என்ன நினைப்பாள் இவள்?*

***ராமர்:*** *(நான்கு பக்கமும் பார்த்து) ஆ! எவ்வாறு இல்லாமல் போய்விட்டாள்? உனக்குச் சிறிதும் தயை இல்லை, வைதேகி!*

***சீதை:*** *உண்மையில் எனக்குக் கருணை இல்லைதான். இல்லாவிடில் நீங்கள் கஷ்டப்படும்போது நான் இருப்பேனா?*

***ராமர்:*** *தேவி, நீ எங்கிருக்கிறாய்? என்மேல் தயைசெய். இவ்விதம் என்னை விட்டுவிடுவது சரியல்ல.*

***சீதை:*** *ஆரிய புத்திரா, இது விபரீதமாக அல்லவோ இருக்கிறது?*

***வாச:*** *மன்னவ பொறுத்தருள்வீர். மிதமிஞ்சிய இந்தப் புலம்பலை உமது ஒப்பற்ற தைரியத்தால் அடக்கிக்கொள்ளும். இப்பொழுது என் சகி எங்கே இருக்கிறாள்?*

***ராமர்:*** *இங்கில்லை என்பது நிச்சயம். இருந்தால், வாசந்திக்கும் தென்படாமல் இருப்பாளா? கனவாக இருக்கலா மென்றாலோ? நான் தூங்கவில்லை. ராமனுக்குத் தூக்கம் ஏது? ஓயாமல் என் கற்பனையில் உதித்த மாயா தேவியே அடிக்கடி என்னை ஏமாற்றுகிறாள் என்பது தெளிவு.*

**சீதை:** ஈவிரக்கமில்லாத என்னால் நாதன் ஏமாற்றப் பட்டார்.

**வாச:** தேவ, இதோ பாருங்கள்.

39. *(ஜடாயுவால் நொறுங்கிய ராவணனின் இரும்பு ரதம் இதோ! அதன் பேய்முகக் கழுதைகளின் எலும்புக் கூடுகள் இதோ! இங்கே ஜடாயுவின் சிறகுகளை வாளால் வெட்டித் தசமுகன் வானத்தில் மின்னும் மேகம்போல் துடிக்கும் சீதையுடன் சென்றான்.)*

**சீதை:** *(பயத்துடன்)* நாதா! ராவணன் தந்தை ஜடாயுவைக் கொல்லுகிறான்; என்னைத் தூக்கிச் செல்லு கிறான். காப்பாற்றும், காப்பாற்றும்!

**ராமர்:** *(வேகத்துடன் எழுந்து)* ஏ, பாவி! பிதாவைக் கொன்று சீதையை அபகரித்தவனே! நீ எங்கிருக்கிறாய்?

**வாச:** தேவ, ராட்சஸ குலத்தை அழித்தவனே! இனியும் உன் கோபத்திற்குக் காரணம் உண்டா?

**சீதை:** ஆச்சரியம்! நான் கூட பிரமித்துவிட்டேன்.

**ராமர்:** இப்பொழுதோ வேறுவித அனர்த்தம் ஏற்பட் டிருக்கிறது.

40. *(மயக்கும் விழியாளைப் பிரிந்திருந்த முந்திய உபாயத் திற்கோ ஒரு முடிவு இருந்தது. ஓயாத உபாயங்கள் செய்து மனத்தைக் களிப்பிக்க வழி இருந்தது. உலகமதிசயிக்க வீரச் செயல்களால் விரோதிகளை வெல்லும் காரியம் இருந்தது. தீர்க்க வழியின்றி எல்லையற்றிருக்கும் இந்தப் பிரிவை நான் சகிப்பது எவ்விதம்?)*

**சீதை:** முடிவில்லை என்ற சொல் என்னைச் சுட்டு விட்டதே.

**ராமர்:** ஆ! கஷ்டம்!

41. *(சுக்கிரீவனின் சிநேகத்தாலும் எனக்கு இங்கே பய னில்லை; வானரர்களின் வீர்யமும் பிரயோசனமில்லை; ஜாம்பவானின் மதியும் அனுமனின் சக்தியும் இங்கே செல்லா. இதற்கு ஒரு பாலம் கட்ட நளனாலும் முடியாது. லஷ்மணன் சரத்திற்கும் எட்டாத இடத்தில் எங்கே போய் ஒளிந்தாய், என் காதலியே?)*

**சீதை:** பழைய பிரிவுக்குப் பலன் கிடைத்தது.

**ராமர்:** சகி, வாசந்தி, என்னைப் பார்ப்பதால் நண்பர் களுக்குத் துன்பமே உண்டாகிறது. உன்னை எத்தனை காலம் அழவைப்பேன்? ஆதலால் போவதற்கு எனக்கு விடைகொடு.

**சீதை:** (ஆவேசத்துடன் தமஸாவைக் கட்டிக் கொண்டு) பகவதி, தமஸா! ஆரிய புத்திரர் போய் விடுகிறாரே (மயக்க மடைகிறாள்.)

**தம:** குழந்தாய், வருந்தாதே. நாமும் குசலவர்களின் ஆயுள் வளர்ச்சிக்காக மங்கள காரியங்கள் செய்யப் பாகீரதியிடம் போகவேண்டாமா?

**சீதை:** பகவதி, என்மேல் கிருபை செய். இனிமேல் கிடைத்தற்கரிய புருஷரை ஒரு சணம் பார்க்கிறேன்.

**ராமர்:** அசுவமேத யாகத்திற்கு எனக்கு இல்லாள் இருக் கிறாள்.

**சீதை:** (நடுக்கத்துடன்) நாதா, அவள் யார்?

**ராமர்:** தங்கப் பிரதிமை சீதை.

**சீதை:** (பெருமூச்சுடன்) ஆரிய புத்திரா, இப்பொழுது தான் தங்கள் உண்மைச் சுபாவம் வெளிப்படுகிறது. நாதன் என்னைத் துறந்ததால் எனக்கு நேர்ந்த அவமானம் அவராலேயே தீர்க்கப்பட்டது.

***ராமர்:*** அந்தப் பிரதிமையையாவது கண்ணீர் நிரம்பிய கண்களால் கண்டு களிப்பேன்.

***சீதை:*** இவ்வாறு ஆரிய புத்திரரால் மதிக்கப்பட்டவள் அல்லவோ அதிருஷ்டசாலி? அவரைத் தேற்றுவதால், அவள் உலகத்திற்கும் பேருபகாரம் செய்தவளாகிறாள்.

***தம:*** (புன்சிரிப்புடன் கண்ணீர் விட்டுக் கட்டிக் கொள்கிறாள்.) உன்னை நீயே புகழ்ந்துகொள்கிறாயே.

***சீதை:*** (வெட்கத்துடன் கீழே குனிந்து, தனக்குள் ) பகவதி பரிகாசம் செய்கிறாள்.

***வாச:*** எங்களுக்கு இது பெரும் பாக்கியம். தங்கள் காரியத்திற்கு இடையூறு இல்லாமல் போய் விடுங்கள்.

***சீதை:*** இப்பொழுது வாசந்தியே எனக்குச் சத்துருவாகி விட்டாள்.

***தம:*** குழந்தாய், வா, நாமும் போவோம்.

***சீதை:*** (கஷ்டத்துடன்) அப்படியே செய்வோம்.

***தம:*** போவதெப்படி?

42. *(உன் கண்களோ ஆசையால் நீண்டு கணவனிடம் பதிந்து மிகுந்த துன்பந் தரும் முயற்சியாலும் திரும்ப மறுக்கின்றன)*

***சீதை:*** அபூர்வமான ஜன்மாந்தர புண்ணியத்தால் என் கண்களுக்குக் காட்சியளித்த ஆரிய புத்திரரின் சரண கமலங்களுக்கு அநேக நமஸ்காரம்.

***தம:*** குழந்தாய், வருந்தாதே.

**சீதை:** (சிறிதுதேறி) மேகங்கள் மூடும்பொழுது பூர்ண சந்திரன் எவ்வளவு நேரந்தான் காணப்படும்?

**தம:** ஆகா! வாழ்க்கையின் விசித்திரம் -

43. ( அன்பின் பிரிவொன்றே பல காரணங்களால் வெவ்வேறு உணர்ச்சியாகப் பரிணமிக்கிறது; அலையும், சுழலும், நுரையுமாகத் தோன்றினும் அவையனைத்தும் நீரின் சொரூபங்களே யன்றோ?)

**ராமர்:** ஓ விமான ராஜனே, இங்கே வா. எல்லாரும் எழுந்திருக்கிறார்கள்.

**தமஸா, வாசந்தி இருவரும்:-**

44. (பூதேவியும், பாகீரதியும், சிஷ்யர்கள் சூழ்ந்த நம்குலபதி ஆதி கவி வால்மீகி ரிஷியும் அருந்ததியுடன் வஸிஷ்டமா முனிவரும் உமக்கு மங்களம் விரும்பி மனமார வாழ்த்து வார்களாக)

மூன்றாம் அங்கம் முற்றிற்று.

# நான்காவது அங்கம்

## 1

*(இரண்டு பிரம்மசாரிகள் வருகிறார்கள்)*

*முதல் பிரம்மசாரி:* சௌதகி, இன்று பல அதிதிகள் வந்திருப்பதால் அவர்களை உபசரித்தற் பொருட்டு இந்த வால்மீகி ஆசிரமம் மிகவும் பரபரப்போடு ரமணீயமாகவும் விளங்குகிறது.

1. *(நெய்யில் வெந்த அன்னத்தின் நறுமணத்தோடு இலந்தைப் பழம் கலந்த அரிசிச் சோற்றின் இனிய கஞ்சியை அன்று பிரசவித்த தன் காதலி அருந்தியபின்பு, குறைவின்றிக் கலைமானும் குடிக்கிறது.)*

***சௌதகி:*** நமக்கு இன்று விடுமுறை கிடைப்பதற்குக் காரணமாக வந்திருக்கும் பலவித நரைத்தாடிகளுக்கும் நல்வரவு கூறுவோம்.

***மு.பி:*** *(சிரித்து)* பெரியோர்களிடம் உனக்கு உள்ள மரியாதை அபூர்வமானது என்றே சொல்லவேண்டும்.

***சௌ:*** ஏ தாண்டாயணா, பெண்களின் ஒரு பெரிய கூட்டத்தோடு புதிய பெரியார் ஒருவர் விருந்தாளியாக வந்திருக்கிறாரே, அவர் யார்?

***தாண்டாயணன்:*** போதுமடா, உன் பரிகாசம்! ரிச்யசிருங்கரின் ஆசிரமத்திலிருந்து, அருந்ததியுடன் தசரத மகாராஜாவின் பத்தினிகளுடனும் வந்திருக்கும் வசிஷ்டர் அல்லவா அவர்? ஏன் இப்படி உளறுகிறாய்?

***சௌ:*** ஓஹோ! வசிஷ்டரா அவர்?

***தாண்:*** வேறென்ன?

**சௌ:** நான் ஏதோ புலியோ, ஓநாயோ என்று நினைத்தேன்.

**தாண்:** இதென்ன பேச்சு?

**சௌ:** அதுவந்ததோ இல்லையோ, பாவம், உடனே நம் பழுப்பு நிறக் கன்று கல்யாணியை விழுங்கிவிட்டது.

**தாண்:** மாம்சத்தோடு மதுபர்க்கம் கொடுக்கவேண்டும் என்ற வேதவிதியை அனுசரித்து, வேதமறிந்த விருந்தாளிக்கு ஒரு பசுங்கன்றையோ, காளை மாட்டையோ, வெள்ளாட்டையோ, கிருஸ்ஹஸ்தர்கள் பலி கொடுக்கிறார்கள். அதுதான் தர்மமென்று தர்ம சூத்திரங்கள் செய்தவர்கள் கூறுகிறார்கள்.

**சௌ:** அடே அகப்பட்டுக் கொண்டாய்!

**தாண்:** அது எப்படி?

**சௌ:** வசிஷ்டர் முதலானவர்கள் வந்தபொழுது கன்றைக் கொன்றார்கள். ஆனால், இன்றுதான் வந்த ராஜரிஷி ஜனகருக்கு வால்மீகி பகவான் தயிரையும் தேனையுமே கொண்டு மதுபர்க்கம் அளித்தார்; ஒன்றை விட்டுவிட்டார்.

**தாண்:** மாம்சத்தை விடாதவர்களுக்கு நான் கூறிய நியமம். ஜனகரோ புலாலைத் துறந்தவராயிற்றே.

**சௌ:** அதற்கு என்ன காரணம்?

**தாண்:** சீதா தேவியின் துரதிருஷ்டத்தைக் கேட்டது முதல், ஜனகர் வானப்பிரஸ்தராகி, சந்திரத் தீவில் தபோ வனத்தில் சில வருஷங்களாகத் தவஞ்செய்து வருகிறார்.

**சௌ:** அப்படியானால் இங்கே எதற்காக வந்திருக் கிறார்?

**தாண்:** வெகுநாளைய மித்திரர் பகவான் வால்மீகியைப் பார்ப்பதற்கு.

**சௌ:** தம் சம்பந்திகளை அவர் சந்தித்தாரா? இல்லையா?

**தாண்:** சற்று நேரத்திற்கு முன்புதான் வசிஷ்டர் கௌசல்யைக்கு, "நீயே போய் விதேக மன்னனைப் பார்" என்று அருந்ததி மூலம் செய்தி அனுப்புகிறார்.

**சௌ:** இந்தக் கிழவர்கள் பரஸ்பரம் கூடும்பொழுது பிரம்சாரிகளான நாமும் கூடி விளையாடி இந்த விடுமுறையைக் கொண்டாடுவோம். *(சுற்றுகிறார்கள்.)*

**தாண்:** இதோ, அந்தப் பிரம்ம ஞானியும் பழைய ராஜரிஷியுமான ஜனகர், வால்மீகி வஸிஷ்டர்களை நமஸ்கரித்து விட்டு ஆசிரமத்திற்கு வெளியிலுள்ள மரத்தினடியில் இருக்கிறார்.

2. *(மூப்பெய்திய மரத்திற்குள் பரவிய நெருப்புப்போல் சீதையின் சோகம் இவர் உள்ளத்தில் ஓயாமல் எரிகிறது.)*

*(இருவரும் போகிறார்கள்.)*

**காட்சி முடிந்தது.**

2

(பிறகு ஜனகர் நுழைகிறார்)

ஜனகர்:

3. *(என் மகளுக்கு நேர்ந்த கொடிய விபத்தால், தீவிர விஷம் தீண்டியதுபோல் என் இதயத்தைப் புண்ணாக்கி வருத்தும் துக்கம், பல வருஷங்களுக்குப்பின்பும் புதியது போல், ஓயாமல் என் மர்மங்களை ரம்பத்தால் அறுக்கிறது.)*

கஷ்டம்! முதுமையிலும், தீராத் துயரத்தாலும் தீவிரத் தவத்தாலும் தளர்ந்தபோதிலும், என் துரோகி தேகம் கீழே விழ

மறுக்கிறது. 'தற்கொலை செய்துகொள்வோர் இருள் சூழ்ந்து சூரியனில்லாத நரகங்களுக்குப் போவார்கள்' என்று ரிஷிகள் நம்புகின்றனர். பல வருஷங்கள் கடந்தும், என் துன்பம் புதிது புதிதாகத் தோன்றி ஒவ்வொரு நொடியும் என்னைப் பெரிய வேதனைக்குள்ளாக்குகின்றது. சிறிதும் குறைவதில்லை. என் அம்மா! தேவ யாகத்தில் பிறந்த சீதை! உனக்கு ஏற்பட்ட இந்த விதியை நினைந்து வெட்கத்தால் வாய்விட்டுப் புலம்பக்கூட முடியவில்லையே! ஆ! மகளே!

4. *(முறையின்றி அழுதும், சிரித்தும், சிற்சில பல்மொட்டு முளைத்தும், தட்டுத்தடுமாறிக் கொஞ்சியும் மழலை பேசும் குழந்தாய், உன் கமலமுகம் நினைக்கின்றேன்.)*

பகவதி பூதேவி, உன் மனம் மிகவும் கடினமாக இருக்கவேண்டும்.

5. *(நீயும், தீயும், பாகீரதியும், தேவி அருந்ததியும், மாமுனிவர்களும், ரகுகுல முதல்வனான தினமணியும், கலாவாணி பெற்ற வித்தைபோல் நீ பெற்ற தெய்வ மகளின் மகிமையை அறிந்தும், அவள் அழிந்து நசித்திட எவ்வாறு பொறுத்தீர்கள்?*

*(திரைக்குள்)*

பகவதி, மகாதேவி, இருவரும் இவ்வழியே வாருங்கள்.

***ஜன:*** *(பார்த்து) அடா! கஞ்சுகி வழிகாட்ட பகவதி அருந்ததி வருகிறார். (எழுந்து) வேறு யாரை மகாதேவி என்று அழைத்தான்? (கவனித்துப் பார்த்து) ஆ! மகாராஜர் தசரதருடைய பட்டமகரிஷி, என் பிரிய சகி, கௌசல்யை அல்லவா? அவள்தான் இவள் என்று யார் நம்புவார்கள்?*

6. *(தசரதரது மாளிகையில் லஷ்மிபோல் இருந்தாள். ஏன்? லஷ்மி என்றே சொல்லுவேன். விதிவசத்தால் முற்றிலும்*

தன்மை மாறித் துக்கச் சொரூபமானாள். இதுவும் ஈசன் செயல்!)

விதியால் வேறொரு விபரீதமும் செய்யப்பட்டிருக்கிறது.

7. என் கண்களுக்கு ஆனந்த மூர்த்தியான இவர் காட்சி யளிப்பது புண்ணில் உப்பிட்டதாகிறது.

(அருந்ததி, கௌசல்யை, கஞ்சுகி நுழைகிறார்கள்.)

**அருந்ததி:** 'நீயே சென்று விதேக மன்னனைப் பார்க்க வேண்டும்' என்று குரு கட்டளை இட்டிருப்பதை நான் சொல்ல வில்லையா? இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். ஏன் இப்படி ஒவ்வோர் அடியிலும் அதிகமாகத் தயங்குகிறாய்?

**கஞ்சுகி:** தேவி, தங்களைத் தாங்களே தைரியப்படுத்திக் கொண்டு செல்லுங்கள். பகவான் வசிஷ்டரின் கட்டளை என்று வற்புறுத்துகிறேன்.

**கௌசல்யா:** இந்தச் சமயத்தில் மிதிலாதிபதியை நான் பார்க்கவேண்டுமென்பது எல்லாத் துயரங்களுக்கும் புத்துயிர் அளிப்பதுபோல் இருக்கிறது. ஆதலால் சுழலும் என் இருதயத்தை நிலைநிறுத்த முடியாமல் தவிக்கிறேன்.

**அரு:** அதைப்பற்றி என்ன சந்தேகம்?

8. (இனியோரை இழந்த துக்கம் ஆறுபோல் பெருகினாலும், அன்பினரைக் கண்டு அடங்காமல் ஆயிரம் மடங்கு வளருகிறது)

**கௌ:** என் குழந்தை மருமகள் இப்படி ஆக, ராஜ ரிஷிக்கு என் முகத்தை நான் எவ்வாறு காட்டுவேன்?

**அரு:**

9. (இதோ உங்கள் பெரியோர் போற்றும் சம்பந்தி; ஜனகர் களின் குலத்தில் உதித்த உத்தமர்; முனிவர் யாக்ஞவல்கியர்

இவருக்கு வேதாந்த சித்தாந்தங்கள் அனைத்தையும் உபதேசித்தார்.)

**கௌ:** மகாராஜாவுக்கு இன்னுயிர்த் தோழர்; என் மருமகளின் பிதா: ராஜரிஷி. கஷ்டம்! துன்பம் ஏதுமின்றி, பூர்ணானந்தமாய் இருந்த பழைய நாட்கள் ஞாபகம் வருகின்றன. தெய்வமே! அதெல்லாம் அடியோடு போய்விட்டதே!

**ஜன:** (முன்வந்து) பகவதி அருந்ததி, ஏர்க்கொடியான். வைதேகன், வந்தனம் செய்கிறான்.

10. (பரம குருக்களின் குருவாகிப் புண்ணியக் களஞ்சியமான தங்கள் பதியும் தங்களை அடைந்து புனிதரானார் அன்றோ? ஜகமெல்லாம் மங்களந் தரும் தங்களை உஷா தேவியென்று தலைகுனிந்து வணங்குகிறேன்.)

**அரு:** பரம்பொருள் உனக்குப் பிரகாசிக்கட்டும். இருளுக்கு அப்பாலிருந்து எல்லாவற்றையும் நடத்தும் ஈசுவரன் உன்னைத் தூய்மைப் படுத்தட்டும்.

**ஜன:** ஐயா, கஞ்சுகி, அரசர் தாயார் சௌக்கியமா?

**கஞ்:** (தனக்குள்) இதைவிடக் கொடிய கண்டனம் வேறு இருக்கமுடியாது. (வெளிப்படையாக) ராஜரிஷியே, அந்த கோபத்தினால் நீண்ட காலமாக ராமசந்திரனுடைய சந்திர முகத்தைப் பார்க்க மறுத்து, மிகவும் துன்பப்படும் தேவியைத் தாங்கள் பின்னும் வருத்தலாகாது. ராமபுத்திரனுக்கும் ஏதோ பெரிய துரதிருஷ்டத்தால் இப்படிச் செய்ய நேர்ந்தது. அக்கினிச் சோதனையில் அவநம்பிக்கை கொண்ட அற்பர்களால் ஏற்பட்ட அபவாதம் நாடெங்கும் பரவக்கண்டு, இந்தக் கொடிய காரியம் தேவரால் செய்யப்பட்டது.

**ஜன:** (ரோஷத்தோடு) நம் குழந்தையைப் பரிசோதிக்க அந்த அக்கினி யார்? இவ்வாறு பேசுவதனால் ஏற்கனவே ராமபத்திரனால் அவமானம் செய்யப்பட்டது போதாதென்று மறுபடியும் அவமதிக்கப்படுகிறோம்.

**அரு:** *(பெருமூச்சு விட்டு)* இது உண்மையே. சீதையைப் பற்றிப் பேசும்பொழுது அக்கினியைக் கூறுவது அவமானப் படுத்துவதாகும். சீதை என்றாலே போதும்! ஆ! குழந்தாய்!

11. *('நீ எனக்குக் குழந்தை; நான் உனக்குக் குருபத்தினி' என்னும் விவகாரம் ஒருபுறம் இருக்கட்டும்; உன் தூய குணத்தின் உயர்ந்த தன்மையால் உன்பால் என் நேசம் மேலும் உறுதிப்பட்டது. பெண்ணென்றும் பாலிகை யென்றும் பாராமல், உலகெல்லாம் உன்னைப் போற்ற வேண்டும். பிறர் பூஜிப்பதற்குக் காரணம் குணமன்றோ? இளமையும் பெண்மையும் இதற்குத் தடையாகுமோ?)*

**கௌ:** என் வேதனைகள் மறுபடியும் வளர்கின்றன. *(மூர்ச்சை யடைகிறாள்.)*

**ஜன:** ஆ! கஷ்டம்! இது என்ன விபரீதம்?

**அரு:** ராஜரிஷியே, வேறென்ன?

12. *(அந்த மன்னன், அந்த மருமகள், அந்த ஆனந்தம், அந்த நாட்கள் - உன்னைக் கண்டு அவை அனைத்தும் இவள் மனத்தில் தோன்றின. மகத்தான விபத்தை நினைந்து உன் சகி மோகமடைந்தாள். சீமாட்டிகளின் சித்தம் மலரைப் போல் மெல்லியதன்றோ?)*

**ஜன:** இதென்ன விந்தை? நானும் கருணையில்லாக் கொடியவனாகிவிட்டேன். இல்லாவிட்டால் என் மித்திர னுடைய பிரிய பத்தினியை நீண்ட காலத்திற்குப் பிறகு பார்த்தும் அன்புடன் வரவேற்காமலிருப்பேனா?)

13. *(சீரிய சம்பந்தி: உயிர்த் தோழன்; என் இதயம்; ஆனந்த மூர்த்தி; என் வாழ்க்கையின் இஷ்டபலன்; உடலும் உயிரும் அதற்கும் மேலான இன்பப் பொருளுமான தசரத மன்னன்; அவன் ஆகாத பொருளில்லை.)*

கஷ்டம்! இவளே அந்தக் கௌசல்யை.

14. (இவளுக்கும் இவள் பதிக்கும் ரகசியத்தில் சம்பவி க்கும் பெரிய மனஸ்தாபங்கள் அனைத்தையும், இரு வரும் என்னை நம்பிக் கூறுவதற்கு நான் பாத்திரனாக இருந் தேன். பரஸ்பரம் கோபமூட்டவோ, சமாதானம் செய்ய வோ, யாவும் என் ஆதீனத்தில் இருந்தன. ஆனால், அ பற்றை யெல்லாம் நினைத்து என்ன பயன்? அவை உள் ளத்தை உருக்கி ஆத்திரத்தையே மூட்டுவனவன்றோ?)

**அரு:** ஆ! கஷ்டம்! நெடுநேரமாக மூச்ச டைத்துக் கிடக்கிறாளே.

**ஜன:** ஆ! பிரிய சகி! (தன் கமண்டலத்திலிரு ந்து ஜலம் தெளிக்கிறார்.)

**கஞ்:**

15. (மனமொத்த மித்திரன்போல் ஆரம்பத்தில் தூயநன்மை செய்துவிட்டு, அதன் பின் காரணமின்றியே ம றிய கொடிய விதியால் வேதனையின் கூர்மை மிகவும் அ கமாயிற்று.)

**கௌ:** (மூர்ச்சை தெளிந்து) ஆ! குழந்தா ப் ஜானகி! எங்கு இருக்கிறாய்? புது மணக் கோலத்தின் அழ கு சொலிக்கப் புன்சிரிப்புடன் பிரகாசித்த உன் சுந்தர முககமலம் என் ஞாபகத்திற்கு வருகிறது. என் மகளே! நில வையொத்த உன் அழகிய அங்கங்களுடன் மறுபடியும் என் மடியில் வந்து நீ உட்காருவாய். எப்போதும் மகராஜா சொல்வது வழக்கம்: 'இந்த ஜனகன் மகள் ரகு குலத்திற்கு ஏற்ற மருமகள்! ஆனால் நமக்கோ மகளே ஆவாள்' என்று.

**கஞ்:** தேவி கூறும் விதமே.

16. (அரசர் தாம் பெற்ற ஐந்து மக்களுக்குள் சுபாகுவைக் கொன்ற மைந்தனை விரும்பினார். தாம் ஏற்ற மருமகளிர் நால்வருள்ளும் சாந்தையைப்போல் சீதையை நேசித்தார்.)

**ஜன:** ஆ! என் அன்புள்ள தோழ! எல்லா விதத்திலும் என் மனத்தைக் கவர்ந்தாய். உன்னை எவ்விதம் மறப்பேன்?

17. (பெண்ணைப் பெற்றோர் பிள்ளையின் உறவினரைப் பூஜிப்பது உண்டு. நீயோ நேர்விரோதமாகஎன்னை ஆதரித்து உபசரித்தாய். காலனும்உன்னைக் கொண்டான். நம் உறவின் வேரும் நசித்தது. பாவத்தால் பிழைத்திருக்கும் எனக்குப் பூலோகமே கொடிய நரகமாயிற்று.)

**கௌ:** குழந்தாய் ஜானகி, நான் என்ன செய்வேன்? வச்சிரப் பசையால் பிணைத்திருப்பது போல் என் துரோகி ஜீவன் தேகத்தைவிட்டு விலக மறுக்கிறது.

**அரு:** வருந்தாதே. ராஜபுத்திரி. கண்ணீரையும் அடக்கிக் கொள். அந்த விஷயத்தை மறந்து விட்டாயா? ரிச்யசிருங்க ஆசிரமத்தில் உங்கள் குலபதி, 'விதிப்படி நடந்தது. ஆனால் முடிவில் நன்மையாகவே முடியும்' என்று சொன்னதை நினைப்பாய்.

**கௌ:** ஆசையெல்லாம் இழந்த எனக்கு இதனால் என்ன பயன்?

**அரு:** ராஜபத்தினி, அப்படியானால் குரு பொய்யுரை கூறினார் என்று எண்ணுகிறாயா? நல்ல க்ஷத்திரிய குலத்தில் பிறந்த நீ அப்படி நினைக்கலாகாது. சொன்னபடியே நடக்கும்.

18. மெய்ச்சோதி அறிந்த அந்தணர் கூறும் மொழிகளில் ஐயம் கொள்வது சரியல்ல. அவர்கள் சொல்லில் ஸ்ரீதேவி வசிக்கிறாள். அவர்கள் எப்பொழுதும் பொய்யுரை பேசார்.

(திரைக்குள் கலகலச் சப்தம். எல்லோரும் கேட்கிறார்கள்.)

ஜன: ஓ! பெரியோர்களின் வருகையைக் குறித்து விடுமுறையானதால், குதூகலத்தோடு விளையாடும் மாணவர்களின் கோலாகலம் இது.

**கௌ:** பாலகர்களுக்குச் சுகம் எளிதில் கிடைக்கிறது. (பார்த்து) ஆகா! இவர்களுக்கு மத்தியில், ராமபத்திரனுடைய காந்தியும் கட்டும் அமைந்து, சுந்தரமான அவயவங்களுடன் என் கண்களைக் குளிர்விக்கும் இந்தக் குமாரன் எவன்.

**அரு:** (மறைவான ஆனந்தக் கண்ணீர் விட்டுத் தனக் குள்) என் காதுக்கு அமிர்தமாகப் பாகீரதி கூறிய ரகசியம் இதுதான் போலிருக்கிறது. ஆனால் சிரஞ்சீவிகளான குச லவர்களுள் இவன் எவனென்று தெரியவில்லை?)

(வெளிப்படையாக)

19. (நீலத்தாமரை நிறத்தோடும், முன்னந்தலைப் பின்ன லோடும் தன் காந்தியால் மாணவர் கூட்டத்துக்கு ஆபரண மாகி, மீண்டும் என் ரகுநாதன் குழந்தையாக வந்தது போல், கண்களுக்கு அமிர்தமயமாகக் காணப்படும் இந்தப் பாலகன் யாவன்?)

**கஞ்:** இவன் நிச்சயமாக க்ஷத்திரியப் பிரம்மசாரியாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

**ஜன:** ஆமாம், அப்படியே.

20. (பின்னால் கட்டிய இரு தூணிகளுக்கு வெளியே சரங்களின் சிறகுகள் சிகையைத் தொடுகின்றன; இவன் மார்பில் லேசாக விபூதியணிந்து, மேலே மான்தோல் உத்தரீயத் துடன் இடுப்பில் மஞ்சள் வஸ்திரம் உடுத்து, அதன் மேல் அரைஞாண் பூண்டிருக்கிறான்; ருத்திராட்சப் பூணுடன் ஒரு கையில் வில் ஏந்தி, மறுகரத்தில் அரசத் தண்டம் தாங்குகின்றான்.)

பகவதி அருந்ததி, இந்தப் பையன் எங்கிருந்து வந்திருக் கிறான் என்று ஊகிக்கிறீர்கள்?

**அரு:** நாமும் இப்பொழுதுதானே இங்கு வந்தோம்?

***ஜன:*** *ஐயா கஞ்சுகி, எனக்கு இதனை அறியவும் ஆவலாக இருக்கிறது. நீங்கள் வால்மீகி முனிவரிடம், போய் இதை அறிந்து வாருங்கள். 'இங்கே வந்திருக்கும் இந்தப் பெரியோர்கள் உன்னைப் பார்க்க விரும்புகிறார்கள்' என்று இந்தப் பையனிடம் சொல்லுங்கள்.*

***கஞ்:*** *அரசர் ஆணைப்படியே. (போகிறார்.)*

***கௌ:*** *இவன் சொற்படி அவன் வருவான் என்று நினைக்கிறீர்களா?*

***ஜன:*** *தோற்றத்திற்குத் தகுந்த குணம் இராதா?*

***கௌ:*** *(பார்த்து) கஞ்சுகி சொல்லக் கேட்ட வினயத் தோடு வருகிறான் பாலகன்.*

***ஜன:*** *(நெடுநேரம்நோக்கி) ஆகா! இதென்ன ஆச்சரியம்!*

*21. (பெரியோரின் வினயமும் குழந்தையின் தன்மையும் இவனிடம் இருப்பதை அறிஞர் அறிவர். பிறருக்குப் புலப்படாத மயங்கியிருக்கும் என் மனத்தையும் இவன் சக்தி கவர்கின்றது. காந்தத்தின் சிறு துண்டும் இரும்பை இழுக்கின்றது அல்லவா?)*

***லவன்:*** *(நுழைந்து) பெரியோராயினும் குலம், பெயர், கோத்திரம் தெரியாதவர்களை நான் அறிமுகமின்றி எவ்வாறு நமஸ்கரிப்பேன்? (சிந்தித்து) இவ்வாறு செய்வது நியாயமென்று குருக்கள் உபதேசிக்கிறார்கள். (வினயத்துடன், அருகில் வந்து) இதோ லவன் தங்களைத் தலை வணங்குகிறான்.*

***அரு. ஜன:*** *சர்வ மங்களங்களுடன் சிரஞ்சீவியாக இருப்பாய்.*

***கௌ:*** *குழந்தாய், சிரஞ்சீவியாக இருப்பாய்.*

**அரு:** வா, குழந்தாய்! (லவனை மடியில் வைத்துக் கொண்டு, தனக்குள்) என் மடி நிறைந்தது மட்டுமல்ல, வெகு நாளைய மனோரதமும் பூர்த்தியாயிற்று.

**கௌ:** குழந்தாய். இங்கு வா. (மடியில் வைத்துக் கொண்டு) ஆகா! புதிதாக மலர்ந்த நீலத்தாமரைகள் கோத்த மாலைபோன்ற தேகச் சாயலில் மட்டுமல்ல; தாமரை யிதழைத் தின்று ஆழ்ந்த மிருதுவான தொனியுடைய கலஹம்ஸத்தைப் போன்ற குரலிலும் இவன் ராமபத்திரனை ஒத்திருக்கிறான். இவனுடைய தேகத்தின் ஸ்பரிசமும் பழுத்த கமலத்தின் உள் பாகம்போல் மிருதுவாக, அவனைப் போலவே இருக்கிறது. குழந்தாய். உன் முகத்தைக் கொஞ்சம் பார்க்கிறேன். (முகத்தைத் தூக்கிக் கண்ணீருடன் கண்டு) ராஜ ரிஷியே. இவன் முகத்தை உற்றுப் பார்த்தால் நாட்டுப்பெண்ணின் சந்திர முகத்தை ஒத்திருப்பதைக் கவனிக்கவில்லையா?

**ஜன:** பார்க்கிறேன், சதி, பார்க்கிறேன்.

**கௌ:** ஆகா! என் மனம் பைத்தியம்பிடித்ததுபோல் இவ்வாறு புலம்புகிறது.

**ஜன:**

22. (சீதை ராமன் இருவரின் தோற்றமும் காந்தியும் இந்தச் சிறுவன் முகத்தில் பிரதிபலித்திருக்கின்றன. அதே குரல், அதே வினயம், அதே கம்பீர ஸ்வபாவம். தெய்வமே! பித்தம்பிடித்தமனம் எங்கெங்கோ தாவுகிறது.)

**கௌ:** குழந்தாய், உனக்குத் தாயார் இருக்கின்றாளா? தந்தையைத் தெரியுமா?

**லவ:** இல்லை, இல்லை.

**கௌ:** நீ யாரைச் சேர்ந்தவன்?

**லவ:** பகவான் வால்மீகியை.

**கௌ:** உனக்குத் தெரிந்ததைச் சொல்லப்பா.

**லவ:** எனக்கு இவ்வளவுதான் தெரியும்.

(திரைக்குள்)

ஏ சிப்பாய்களே! குமாரன் சந்திரகேது கட்டளையிடுகிறான்: ஒருவரும் ஆசிரமப் பிரதேசத்திற்குள் ஆக்கிரமிக்கக் கூடாது.

**அருந்ததி, ஜனகர்:** அசுவமேதக் குதிரையைத் தொடர்ந்து சந்திரகேது வந்திருக்கிறான். இவனைப் பார்க்கும் பாக்கியம் இன்று நமக்குக் கிடைத்திருக்கிறது.

**கௌ:** 'லக்ஷ்மணனின் குமாரன் கட்டளையிடுகிறான்' என்ற சொற்கள் என் காதுக்கு அமிர்த வர்ஷம்போல் இருக்கின்றன.

**லவ:** ஐயா, சந்திரகேது யார்?

**ஜன:** தசரத குமாரர்கள் ராம லக்ஷ்மணர்களைத் தெரியுமா?

**லவ:** அவர்கள்தாம் ராமாயண கதாநாயகர்கள்.

**ஜன:** அதனால் என்ன?

**லவ:** அதனால், அவர்களை எனக்குத் தெரியாமல் என்ன?

**ஜன:** அந்த லக்ஷ்மணனின் மகன் சந்திரகேது!

**லவ:** ஊர்மிளையின் குமாரன், மிதிலாதிபதி ராஜரிஷியின் பேரனாக இருக்கவேண்டும்.

**அரு:** (சிரித்து) சிறுவனின் சரித்திரத் தேர்ச்சி நன்கு புலப்பட்டது.

**ஜன:** (ஆலோசித்து) கதை உனக்கு இவ்வளவு நன்றாகத் தெரியுமானால், தசரத குமாரர்களில் யார் யாருக்கு எத்தனை குழந்தைகள், அவர்கள் பெயர்கள் என்ன, எல்லாவற்றையும் சொல், பார்ப்போம்.

**லவ:** கதையின் இந்தப் பாகத்தை நாங்களும் மற்றும் யாரும் இன்னும் கேட்கவில்லை.

**ஜன:** கவியால் அது பாடப்படவில்லையா?

**லவ:** பாடப்பட்டது. ஆனால் வெளியாகவில்லை. அதில் மிகவும் ரஸமான ஒரு பாகம் அபிநயத்தோடு பாடக் கூடியதாக இயற்றப்பட்டிருக்கிறது. வால்மீகி பகவான் அதைத் தம் கையால் எழுதி, அபிநய சாஸ்திர ஆசிரியர் பகவான் பரதரிடம் அனுப்பியிருக்கிறார்.

**ஜன:** எதற்காக?

**லவ:** தேவ மாதர்களைக் கொண்டு அதை அபிநயம் செய்விக்கவேண்டுமென்று.

**ஜன:** இதைக் கேட்டு எங்களுக்கு மிகவும் குதூகலமாக இருக்கிறது.

**லவ:** பகவான் வால்மீகிக்கு இதில் மிகக் குதூகலம், ஆதலால் தம் சிஷ்யர்கள் மூலமாகவே அந்நூலைப் பரதாசிரமத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தச் சிஷ்யர்களுக்கு யாதொரு தீங்கும் வராமலிருப்பதற்காக என் சகோதரன் வில்லேந்தி அவர்கள் பின்சென்றிருக்கிறான்.

**கௌ:** குழந்தாய், உனக்குச் சகோதரன் இருக்கிறானா?

**லவ:** ஆமாம், குசன் இருக்கின்றான்.

**கௌ:** உனக்குத் தமையனா?

**லவ:** ஆமாம், பிரஸவக் கிரமப்படி அவன்தான் மூத்தவன்.

**ஜன:** சிரஞ்சிவியான நீங்கள் இரட்டைக் குழந்தைகளா?

**லவ:** ஆம்.

**ஜன:** சிறுவனே ராமகதை எதுவரையில் எழுதப் பட்டிருக்கிறது?

**லவ:** பொய் அபவாதத்தில் வருந்திய அரசரால் வெளியே அனுப்பப்பட்டு, பிரஸவ வேதனையோடு கூடிய சீதையை லக்ஷ்மணன் வனத்தில் தனியாக விட்டுவிட்டு ஊர் திரும்பிய வரையில்.

**கௌ:** ஆ, குழந்தாய்! அழகிய சந்திரமுகத்தானே! தனியாக விடப்பட்ட உன் தேக மலருக்குக் கொடிய விதி யின் கூத்தால் என்ன சம்பவித்ததோ?

**ஜன:** ஆ! மகளே!

23. (அவமானத்துடன் கோரவனம் சென்று, தாங்காத பிரஸவ வேதனையையும் பெற்று, காட்டு மிருகங்கள் நாலா பக்கமும் சூழ, நடுங்கிச் சரணமென்று என்னைப் பன்முறை நினைத்திருப்பாய்.)

**லவ:** (அருந்ததியிடம்) தேவி, இவ்விருவரும் யாவர்?

**அரு:** இவள் கௌஸல்யை; இவர் ஜனகர்.

**லவ:** (மரியாதை, வருத்தம் குதூகலத்துடன் பார்க் கிறான்.)

**ஜன:** நகரத்தாரின் கருணையற்ற தீய குணத்தை என்ன வென்று சொல்வது? அரசன் ராமனுடைய அவசரக் காரியத்தை யும் என்னவென்று கூறுவது?

24. *(என்மேல் இடிபோல் வீழ்ந்த இந்தக் கோரவிபத்தைப் பலநாள் சிந்தித்து மனம் நொந்தது போதும். பொங்கும் என் கோபத்துக்கு வில்லாலோ வாக்காலோ வழிதேடிப் பழிவாங்கும் காலம் கிட்டிவிட்டது.)*

**கௌ:** *(பயத்தால் நடுங்கி)* பகவதி. நீதான் காப்பாற்ற வேண்டும். கோபித்திருக்கும் ராஜரிஷியைச் சாந்தப்படுத்துவாய்.

**லவ:** *மானமுள்ளோர் அவமானமடைந்தால் அதற்கு இதுவே பிராயச்சித்தமாகும்.*

**அரு:** *அரசனே, ராமன் உன் மகன் அல்லவா? ஏழைப் பிரஜைகளையும் நீ ரக்ஷிக்க வேண்டும்.*

**ஜன:**

25. *(என் சினத்திற்கு இப்பொழுது சிறிதும் இடமில்லை. ராமனோ என் சொந்த மகன்போலாவான்; நகரத்தாரோ பெரும்பாலும் வேதியரும் பாலரும், கிழவரும், பெண் களுமே யாவர்.)*

*(நுழைந்து)*

ஆவேசத்துடன் பிரம்மசாரிகள்: குமார, லவா, குதிரை குதிரை என்று ஒரு பிராணி நாடுகளில் கேட்கப்படுகிறதே. அது இன்றைக்கு எங்களால் நேரில் காணப்பட்டது.

**லவ:** *அசுவமென்று மிருக சாஸ்திரத்திலும் யுத்த வர்ணனைகளிலும் படிக்கிறோம். அது எப்படி இருக்கிறதென்று சொல்லுங்கள்.*

**மாணவர்கள்:** கேட்பாய்.

26. *(பின்னாலுள்ள வாலை இடைவிடாமல் ஆட்டுகிறது. கழுத்து நீண்டிருக்கிறது. குளம்புகள் நான்கு. புல்லைத் தின்று, மாங்காயளவு கட்டியாகச் சாணம் போடுகிறது. வர்ணனை வீண்; விரைந்து சொல்லும் அதை நாமும் பின்தொடர்வோம்.)*

*(பக்கத்தில் வந்து லவனின் துணியையும் கையையும் பிடித்து இழுக்கிறார்கள்.)*

**லவ:** (குதூகலத்துடன், ஆனால் மரியாதையைக் கவனித்து) பெரியோர்களே, நீங்கள் பாருங்கள். இவர்கள் என்னை இழுத்துச் செல்கின்றனர்.

**அருந்ததி, ஜனகர்:** உன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்.

**கௌ:** பகவதி, இவனைப் பார்க்காமல் உயிர் தரித் திருக்கமுடியாது போலிருக்கிறது. நாமும் வேறிடம் சென்று போகிற பையனைப் பார்க்கலாம்.

**அரு:** விளையாட்டுப்பையன் வேகமாக வெகுதூரம் சென்றுவிட்டான். அவனை நாம் எப்படிப் பார்க்கமுடியும்?

**கஞ்:** (நுழைந்து) சரியான சந்தர்ப்பத்தில் அது தங்க ளுக்குத் தெரிவிக்கப் படுமென்று வால்மீகி பகவான் கூறுகிறார்.

**ஜன:** ஏதோ பெரிய விஷயம்போலிருக்கிறது பகவதி அருந்ததி, தேவி கௌசல்யா, கஞ்சுகி அனைவரும் நேரில் போய் முனிவரைக் காண்போம்.

*(கிழவர்கள் போகிறார்கள்)*

*(நுழைந்து)*

**மாணவர்கள்:** இந்த ஆச்சரியத்தைக் குமாரன் பார்க்கட்டும்.

**லவ:** பார்த்தேன், அறிந்தேன், இது அசுவமேத யாகக் குதிரை என்பதில் சந்தேகமில்லை.

**மாண:** எப்படித் தெரிகிறது?

**லவ:** முட்டாள்களே! அந்தக் காண்டத்தை நீங்கள் படிக்கவில்லையா? நூற்றுக்கணக்கான படைவீரர்கள் கவசம்,

தண்டம், வில் இவற்றை ஏந்தி அசுவத்தை ரக்ஷிப்பதைக் காணவில்லையா? இந்தச் சேனை முழுதும் அம்மாதிரி இருக்கிறது. நம்பாவிட்டால் போய்க் கேளுங்கள்.

**மாண:** ஓ சிப்பாய்களே! எதற்காக இந்தக் குதிரையைச் சுற்றிக்கொண்டு அலைகிறீர்கள்?

**லவ:** (ஆசையுடன், தனக்குள்) மற்ற க்ஷத்திரியர்களையெல்லாம் புறக்கணித்து, எல்லாத் தேசங்களையும் வென்ற கீர்த்தி தரும் அசுவமேத யாகமல்லவா இது?

(திரைக்குள்)

27. (ஏழுலகுக்கும் தனி வீரனாகி, தமுகனைக் கொன்ற மன்னரின் வெற்றிக்கொடியும் விஜய முரசுமே ஆகும் இந்தக் குதிரை.)

**லவ:** (கர்வத்தோடு) இம்மொழிகள் எனக்கு ஆத்திரமூட்டுகின்றன.

**மாண:** குமாரன் என்ன சொல்லுகிறான்? அவன் மிகவும் புத்திசாலி.

**லவ:** ஏ சிப்பாய்களே! உலகத்தில் க்ஷத்திரியரே இல்லையா? ஏன் இப்படிக் கோஷம் செய்கிறீர்கள்?

(திரைக்குள்)

அடே, மகாராஜாவுக்கு எதிரில் க்ஷத்திரியன் எவன்?

**லவ:** அடே துஷ்டர்களே!

28. (இருப்பவர்கள் இருந்தே தீருவார்கள். இந்தப் பூச்சாண்டி எதற்கு? உங்களோடு பேசிப் பயனில்லை. அந்தக் கொடியை நானே அபகரிப்பேன்.

மாணவர்களே, சுற்றிலும் சூழ்ந்து கல்லால் அடித்து இந்தக் குதிரையை ஓட்டிச் செல்லுங்கள். நம் மான்கள் மத்தியில் இந்த ஏழை அசுவமும் மேயட்டும்.

(நுழைந்து, கோபம் அகங்காரத்துடன்)

**புருஷன்:** அடே முட்டாள்! என்ன சொன்னாய்? இந்தக் கருணையில்லாச் சிப்பாய்கள் கூரிய ஆயுதங்கள் தரித்திருக் கிறார்கள். நீ பாலனாய் இருந்தபோதிலும் உன் முரட்டுச் சொற் களைச் சகியார்கள். ராஜகுமாரர் சந்திரகேதுவும் எதிரிகளைக் கொல்லும் பராக்கிரமசாலி இந்த அபூர்வ வனத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவர் வருவதற்குள் ஓடி மரங்களுக்குள் மறைந்துபோய்விடுங்கள்.

**மாண:** நமக்கு இந்தக் குதிரையால் பயனில்லை. பளபளவென்று ஆயுதம் தாங்கிய சிப்பாய்களோ உன்னை மிரட்டுகிறார்கள். ஆசிரமம் தூரத்தில் இருக்கிறது. ஆதலால் வா, மான் மாதிரித் துள்ளி ஒரே பாய்ச்சலாக ஓடிப்போவோம்.

**லவ:** (சிரித்து) பளபளவென்ற ஆயுதங்களா! (வில்லை எடுக்கிறான்.)

29. (நாணென்ற நாவுடன் வில் முனைப் பல்லுடன் கேட்டவர் நடுங்கும் பயங்கரத் தொனியுடன் உலகத்தை விழுங்க, வாய் விரித்துச் சிரிக்கும் யமன்போல் இன்று நான் வளைக் கும் வில்லைக் காண்பீர்.)

**நான்காவது அங்கம் முற்றிற்று.**

# ஐந்தாவது அங்கம்

*(திரைக்குள்)*

ஓ சிப்பாய்களே, நமக்கு உதவி கிடைத்துவிட்டது.

1. *(சுமந்திரர் விரைந்து ஓட்ட, ஜாதிக் குதிரைகள் வேகமாகத் தாவி ஓட, கோவிதாரக் கொடி ஆட்டத்தால் அசைய, நம் போர்ச் சத்தம் கேட்டு, சந்திரகேது வருகிறார்.)*

*(சுமந்திரர் சாரதியாக, மிகவும் குதூகலத்தோடு வில் லேந்திய சந்திரகேது வருகிறார்.)*

**சந்திரகேது:** ஆரிய சுமந்திரரே, பாருங்கள், பாருங்கள்.

2. *(சுந்தரமுகத்தில் கோபத்தீ சொலிக்க, வில்லின் முனைகள் ஓயாமல் தொனிக்க, தன் தலையிலுள்ள ஐந்து பின்னல் களும் ஆட நாம் அறியாத ஒரு வீர வாலிபனான இவன், படைகள்மீது சரமாரி பொழிகிறான்.)*

ஆச்சரியம், வெகு ஆச்சரியம்!

3. *(இந்த முனிகுமாரன் தன்னந் தனியனாய், உலகத்துக்குத் தெரியாத ஒரு ரகுகுலக் கொழுந்துபோல், பெரிய டங்காரத் துடன் யானைத் தலையைப் பிளக்கும் கூரிய சரங்களால் சைனியம் அனைத்தையும் கலைப்பதைக் கண்டு குதூகல மடைகிறேன்.)*

**சுமந்திரர்:** சிரஞ்சீவியே,

4. *(சுராசுரர்களை மிஞ்சிய சக்தியோடு, அதே தோற்றமுடைய பாலனைப் பார்த்து குசிகர் யாகத்தில் விரோதிகளை வெல்ல வில்லேந்திய ரகுநந்தனை நினைக்கிறேன்.)*

**ச.கேது:** இவன் ஒருவனுக்காக இவ்வளவு பெரிய ஏற்பாடு செய்ய நேர்ந்ததைக் கண்டு நான் வெட்கமடைகிறேன்.

5. *(தங்க மணிகள் ஓசை செய்யும் ரதங்களும், நீர் சொரியும் மேகம்போல் மதமொழுகும் யானைகளும், பெரிய கைகளில் பயங்கர ஆயுதங்கள் தாங்கிய சைனியங்களும் தனியனான இப்பாலகனைச் சுற்றி நிற்கின்றன.)*

**சும:** நம்மவர்கள் இவற்றை யெல்லாம் வைத்திருந்து என்ன? அவனிடம் அவை இல்லாமலிருந்தால் என்ன?

**ச:கேது:** ஆரியரே, துரிதமாகச் செல்லுங்கள். நம் சைனி யத்தை இவன் மிகவும் கலக்க ஆரம்பித்துவிட்டான்.

6. *(காட்டு யானைகளின் காதுகளைத் துளைத்து, போர் முரசோடு பெருகும் நாணின் ஓசையோடு, யமன் உண்டு உமிழ்ந்தாற்போல், போர்க்களமெங்கும் அம்பால் அறுத்து வீழ்த்திய தலைகள் துள்ளுகின்றன.)*

**சும:** (தமக்குள்) இந்தப் பையனோடு சந்திரகேதுவை துவந்துவ யுத்தம் செய்ய எப்படி அனுமதிப்பேன்? (ஆலோசித்து) ஆனால் நான் இக்ஷ்வாகு குலத்தில் நெடுநாள் பழகியவன். யுத்த பூமியில் வேறுவழி என்ன?

**ச.கேது:** (ஆச்சரியம், வெட்கத்துடன்) இது என்ன விந்தை! என் சைனியங்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் திரும்பி வருகின் றனவே.

**சும:** (ரத வேகத்தைக் குறைத்து) சிரஞ்சீவி குமாரா, அந்த வீரன் உன் குரல் கேட்கும் தூரத்தில் இருக்கிறான்.

**சந்:** (மறந்தவனாக) ஆரியரே, நம்மை அழைக்க வந்த வர்கள், இவன் பெயர் என்னவென்று சொன்னார்கள்?

**சும:** லவன் என்று.

**ச. கேது:**

7. (ஏ லவனே, வீரனே! சிப்பாய்களுடன் உனக்கு என்ன? என்னுடன் ஒரு கை பார்; சோதியோடு சோதி கலந்து தணியட்டும்.)

**சும:** குமாரா, அதோ பார்!

8. (யானையைக் கொல்லும் சிங்கக்குட்டி மேக கர்ஜனையைக் கேட்டுத் திரும்புவதுபோல், உன் குரலைக்கேட்ட வீரன், சைனியத்தோடு கடும்போர் புரிவதை நிறுத்தி, நம்மிடம் வருகிறான்.)

(பராக்கிரம வேஷத்தோடு லவன் வருகிறான்.)

**லவ:** நல்லது, ராஜகுமாரா, நல்லது. உண்மையில் இக்ஷ்வாகு குலத்தில் தோன்றியவன். ஆதலால் நான் உன்னையே நாடி வந்துவிட்டேன்.

(திரையில் கோலாகலம்)

**லவ:** (தைரியமாகத் திரும்பிப் பார்த்து) ஆ! சற்று முன்பு தோல்வியுற்ற சேனாதிபதிகள் மறுபடியும் திரும்பிப் போருக்காக என்னை வளைத்துக்கொண்டிருக்கிறார்கள். சீ முட்டாள்களே!

9. (மலையில் மோதிக் கொதித்தெழுந்த பிரளயத்தீப்போல் பொங்கும் என் கோபம். புயல் காற்றடிக்க அலை மோதும் கடல் போன்ற சைனியத்தின் ஆரவாரத்தை அடக்கும்.)

(வேகத்தோடு சுற்றுகிறான்.)

**ச.கேது:** அடே குமாரா,

10. (ஒப்பற்ற உயர் குணத்தால் நீ எனக்கு அன்பனானாய். ஆகலின் உன் தோழனான என்னுடையவை யாவும் உன்னைச் சேர்ந்தனவே அன்றோ? இவ்வாறு உன் சொந்த ஜனங்களைக் கொல்லலாமோ? உன் பெருமைக்கு உரை கல்லாக நான் இங்கே இல்லையோ?)

**லவ:** (சந்தோஷத்தோடு விரைவாகத் திரும்பி) இந்த

மகானுபாவனான சூரிய குலக் குமாரனுடைய வீர வசனம் எவ்வளவு தெளிவாகவும் பிரதாபமுள்ளதாகவும் இருக்கின்றது! இவர்களால் இனி என்ன? இவனையே கவனிக்கிறேன்.

*(மறுபடியும் திரைக்குள் கோலாகலம்)*

**லவ:** (கோபத்தோடும், வருத்தத்தோடும்) இந்தத் துஷ்டர்கள் என் வீர விவாதத்தைக் கலைத்துத் தொந்தரவு செய்கிறார்கள்.

*(அந்தப் பக்கம் போகிறான்.)*

**ச.கேது:** ஆரியரே, இந்தக் காட்சி அவசியம் காணத் தகுந்தது.

11. (கர்வமும் குதூகலமுங்கொண்டு என்னை நோக்கிய வில்லேந்திய, இவ் வீரனைப் படைகள் பின்தொடரும் போது, எதிர்க் காற்றுகள் அடிக்க, இந்திரவில் தாங்கிய நீல மேகத்தைப் போன்ற அழகு இவனிடம் ஜ்வலிக்கிறது.)

**சும:** இவனை ஆற அமரப் பார்ப்பதற்குக் குமாரனுக்குத்தான் ஆற்றல் இருக்கிறது. நானோ ஆச்சரியத்தால் பிரமித்தவனாக இருக்கிறேன்!

**ச.கேது:** ஓ சிற்றரசர்களே!

12. (கணக்கற்ற கஜ துரக ரதங்களைக்கொண்டு ஒரு காலாளோடு, கவசம் பூண்ட பலர் ஒன்றுகூடி மான்தோல் போர்த்த பையனோடு வயதில் முதிர்ந்த நீங்கள், இளமையால் இனிய சிறுவனோடு, இவ்வாறு போர்த்தொடுப்பது உங்களுக்கும் எனக்கும் அவமானமே.)

**லவ:** (மனம் நொந்து) என் மேல் இவன் இவ்வளவு அனுதாபப்படுகிறான் அல்லவா? கால தாமதத்தைத் தடுப்பதற்காக ஜிரும்பகாஸ்திரத்தால் இந்தச் சைனியங்களை மயக்குகிறேன்.

**சும:** திடீரென்று சைனிய கோஷம் நின்று விட்டதே, ஏன்?

**லவ:** இப்பொழுது இவன் பெருமையைப் பார்க்கிறேன்.

**சும:** (பரபரப்புடன்) குழந்தாய், இந்தச் சிறுவனால் ஜிரும்பகாஸ்திரம் விடுக்கப்பட்டதென்று நினைக்கின்றேன்.

**ச.கேது:** இதில் என்ன சந்தேகம்?

13. *(மின்னலும் இருளும் பயங்கரமாகக் கலந்து கண்களைப் பறித்துப் பொருள்களை மறைக்கின்றன. என் சைனியம் அனைத்தும் சித்திரம்போல் அசைவற்றிருக்கிறது. இது ஜிரும்பாகாஸ்திரத்தின் மகிமையே என்பதில் ஐயமுண்டோ?) ஆச்சரியம், ஆச்சரியம்!*

14. *(பாதாளத்தின் வயிற்றிலிருக்கும் திரண்ட இருளோடும், காய்ச்சின பித்தளை ஒளியோடும், இந்த ஜிரும்பகாஸ்திரங்கள், பிரளய காலத்துப் புயல் அடிப்பதால் நடுநடுங்கும் விந்திய சிகரங்களை மின்னும் மேகங்கள் மூடுவதுபோல, வானை மறைந்திருக்கின்றன.)*

**சும:** இவனுக்கு எங்கிருந்து ஜிரும்பகாஸ்திரங்கள் கிடைத்திருக்கும்?

**ச.கேது:** வால்மீகி முனிவரிடமிருந்து கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன்.

**சும:** குழந்தாய், அஸ்திரங்கள் இவ்வாறு கொடுக்கப் படுவதில்லை. விசேஷமாக ஜிரும்பகாஸ்திரங்களுக்கு இந்த முறை தகாது. ஏனெனில்,

15. *(பகவான் கிருசாசுவர் இவற்றை விசுவாமித்திர மகரிஷிக்கு அளித்தார். பின்பு இவை குசிகரால் ராமபத்திரனுக்கு அளிக்கப்பட்டு அவனிடமே இன்னும் இருப்பவை.)*

**ச.கேது:** சத்துவகுணம் நிறைந்து, எல்லா மந்திரங்களையும் அறிந்த மற்றவர்களுக்கும் இவை கிடைக்கக்கூடும்.

**சும:** குமாரா, ஜாக்கிரதை, வீரன் எதிரில் வந்துவிட்டான்.

**குமாரர்கள்:** *(ஒருவரை யொருவர் பார்த்து)*

16. *(ஆகா! இந்தக் குமாரன் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறான். எதிர்பாராத சல்லாபமோ, குணங்களின் அதிசயமோ, முற்பிறப்புக்களில் ஏற்பட்ட பழைய காலப் பரிசயமோ, விதிவசத்தால் நாம் அறியாத உண்மையான உறவுதானோ, ஏனோ இவனைக் கண்டவுடன் என் உள்ளம் கொள்ளை போயிற்று.)*

**சும:** ஒருவருக்கு மற்றொருவரிடம் திடீரென்று அன்பு ஏற்படுத்துவதுதான் வாழ்க்கையின் உயர்ந்த ரசமாகும். இதை உலகில், 'கண்டதும் பிரேமை' என்று கூறுவர். இதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. இதன் போக்கை எவரும் நிர்ணயிப்பதும் சாத்தியமில்லை.

17. *(எந்தக் காரணமுமின்றி, எவ்விதத் தடையுமின்றி, அன்பின் நூலொன்று இதயங்களைப் பிணைக்கிறது.)*

**குமாரர்கள்:** *(ஒருவரையொருவர் பார்த்து)*

18. *(பட்டுத் துகிலெனப்பிரகாசிக்கும் இந்த உடலிலே என் அம்புகளை எவ்விதம் எய்வேன்? இந்த உடலின் அருகிற் சென்று இதை ஆலிங்கனம் செய்துகொள்ள விரும்பி, கதம்பம் துளிர்த்ததுபோல், எனக்கு மயிர்க்கூச்செறிகிறது.)*

**ச.கேது:**

19. *(எதிர்த்து நிற்கும் வீரனோடு போர் புரிய மறுக்கலாமா? இவனை ஒத்த எதிரி இல்லையேல் ஆயுதம் தாங்கி என்ன பயன்? போர்முனையினின்றும் நான் புறங்காட்டித் திரும்பினால், இவன்தான் என்னகூறுவான்? வீரர்களின் கொள்கை கொடியது. அன்பிற்கு அதில் இடமில்லையே)*

**சும:** *(லவனைப் பார்த்துத் தமக்குள் கண்ணீருடன்)* இருதயமே, ஏன் வேறு விதமாகக் கற்பனை செய்கிறாய்?

20. *(மனோரதத்தின் விதையை ஆதியில் விதி அழித்து விட்டது. கொடியைக் கிள்ளியபிறகு மலரை எதிர்ப் பார்க்கலாமா?*

**ச.கேது:** ஆரியரே நானும் ரதத்திலிருந்து இறங்கு கிறேன்.

**சும:** எதற்காக?

**ச.கேது:** இந்த வீர குமாரனுக்கு மரியாதை செய்வதற்காக. க்ஷத்திரிய தர்மத்திற்கும் அதுதான் பொருந்தும். 'ரதத்திலிருந்து காலாளோடு சண்டை செய்யலாகாது' என்று சாஸ்திரம் தெரிந்த வர்கள் கூறுகிறார்கள்.

**சும:** *(தமக்குள்)* ஆ! இந்த கஷ்ட தசையில் மாட்டிக் கொண்டேனே.

21. *(அறத்தை அனுசரிப்பதை என்போன்றோர் எப்படித் தடுப்பது? மிகவும் ஆபத்தான காரியத்தை அனுமதிப்பது எப்படி?)*

**ச. கேது:** தாங்கள் என் தந்தைக்கு நெருங்கிய தோழர். தர்மத்தைப்பற்றிச் சந்தேகம் ஏற்பட்டால் அவரும் தங்களையே கேட்பது வழக்கம். ஆதலால் இதில் தங்கள் அபிப்பிராயம் சொல்வதற்குத் தயக்கம் ஏன்?

**சும:** சிரஞ்சீவியாக இருப்பாய், நீ சொல்வதுதான் தர்மம்.

22. *(இதுவே போர்முறை. சநாதன தர்மமும் இதுவே. ரகுகுலச் சின்னங்களின் வீரச் சம்பிராதயமும் இதுவே.)*

**ச.கேது:** தங்கள் வசனம் ஒப்பற்றது.

23. *(இதிகாச புராணங்களையும், அறவழிகளையும், ரகுகுல வழக்கங்களையும் தாங்கள் ஒருவரே அறிவீர்கள்.)*

24. *(இந்திரஜித்தை வென்ற உன் பிதா பிறந்து சிறிது காலமே ஆயிற்றென்றாலும், அவனுக்கும் ஓர் உயர் மகன் தோன்றி வீரதர்மம் காக்கின்றான். ஈசனருளால் தசரதன் குலம் என்றும் நிலைபெற்றது.)*

**ச.கேது:** *(கஷ்டத்துடன்)*

25. *(ரகுகுல முதல்வனுக்குத் தக்க வாரிசு இல்லையேல் இப்பெருங்குலத்துக்கு நல்ல நிலை ஏது?' என்ற இந்தக் கொடிய துன்பம் தாங்காமல் என் மற்ற மூன்று தந்தையரும் தவிக்கின்றனர்.)*

**சும:** ஆ: சந்திரகேதுவின் மொழிகள் என் மர்மங்களைத் துளைக்கின்றனவே.

**லவ:** இது என்ன விந்தை! என் உணர்ச்சி குழம்புகின்றதே.

26. *(மதியைக் கண்டு மலரும் நீலத் தாமரைபோல் என் கண்கள் இவனைப்பார்த்து மகிழ்கின்றன. வீர முழக்கம் செய்து கடும் போரை விரும்பும் வில்லேந்திய இந்தக் கையோ கொடுமையை நாடுகிறது.)*

**ச.கேது:** *(கீழே இறங்கி)* ஆரியரே, சூரிய குலத்துச் சந்திரகேது நமஸ்கரிக்கிறான்.

**சும:**

27. *(வராகமாக அவதரித்த நித்தியன் உனக்குத் தூய்மையும், சோதியும், வெற்றியும் தந்தருள்வான்.)*

மேலும்,

28. (உன் குலத்துக்கு ஆதிமுதல்வனான சூரியனும், குருக் களின் குருவான வஸிஷ்ட முனிவரும், இந்திரன், விஷ்ணு, அக்கினி, வாயு , கருடன் முதலியோரும், ராம லக்ஷ்மணர் களின் வெற்றி நாணோசை மந்திரமும் உனக்கு ஆசியும் ஆற்றலும் அளித்து, ஜயமும் தந்திடுக.)

**லவ:** குமாரா, ரதத்தில் இருப்பதுதான் உனக்கு அழகு. எனக்கு அதிக உபசாரம் செய்யவேண்டாம்.

**ச. கேது:** அப்படியானால், மகாநுபாவனான நீயும் வேறொரு ரதத்தில் ஏறிக்கொள்.

**லவ:** ஐயா, இந்தக் குமாரனை மறுபடியும் ரதத்தில் ஏற்றிக்கொள்ளுங்கள்.

**சும:** நீயும் சந்திரகேதுவின் சொற்படிச் செய்வாய்.

**லவ:** ஒவ்வொருவரும் தத்தம் ஆயுதங்களை உபயோ கிக்கத் தயங்கவேண்டாம். நான் வனவாசியானதால் ரதப் போக்கு களில் எனக்குப் பழக்கமில்லை.

**சும:** கர்வம், மரியாதை இரண்டையும் அநுசரித்து நடக்க நீ நன்கு தேர்ந்திருக்கிறாய். இவ்விதம் உன்னை மன்னன் ராமச்சந்திரன் கண்டால் அவன் இதயம் அன்பு சொரியும்.

**லவ:** ஐயா, அந்த ராஜரிஷி மிகவும் நல்லவரென்று சொல்லப்படுகிறது.

(கூச்சத்துடன்)

29. (நானும் யாகத்தைத் தடுக்கும் தன்மையன் அல்லேன். அம்மன்னருடைய குணங்களை மதியாதார் எவரும் இல்லை. ஆனால் அவருடைய குதிரையைக் காப்போர் வீரர்களை யெல்லாம் அவமதித்துக் கூறிய கடுமொழிகள் என் கோபத்தீயை மூட்டின.)

**ச.கேது:** *(புன்சிரிப்புடன்)* என் பெரிய தந்தையின் பெருமையை உன்னால் பொறுக்கமுடியவில்லையா?

**லவ:** பொறுக்க முடியும், முடியாமலிருக்கட்டும், நான் ஒரு கேள்வி கேட்கிறேன்: அரசர் ராமர் மிகவும் வினயமுள்ளவர் என்று சொல்லுகிறார்கள். அவர் தாமும் கர்வம் கொள்ளமாட்டார். அவர் பிரஜைகளும் அகங்காரமுள்ளவர்களாக இருக்க மாட்டார் கள். அவருடைய மனிதர்கள் இந்த அரக்க மொழிகளை ஏன் கூறவேண்டும்.?

30. *(மதமும் இறுமாப்புள்ள சொற்களை அரக்க மொழிகள் என்பர் முனிவர். ''அவை உலகிலுள்ள வைரங்களுக் கெல்லாம் வேர்; மனிதர்களின் தீமைக்கெல்லாம் அவையே ஆதாரம்''*

*என்று அவற்றைப் பெரியோர் நிந்திக்கின்றனர். அதற்கு மாறான பேச்சையும் புகழ்கின்றனர்.)*

31. *(பணிவோடு கூடிய மெய்யுரை, விரும்பியதை அளிக்கும்; சீதேவியைச் சேர்க்கும்; புகழினைப் பெருக்கும்; தீமையைத் தொலைக்கும்; நலமனைத்தும் நல்கும்; அதுவே காம தேனு'' என்று அதைப் போற்றுவர் புலவர்.)*

**சும:** வால்மீகியின் சீடனான இந்தக் குமாரன் தூய சுபாவமுள்ளவன். முனிவரால் போதிக்கப்பட்டு அதற்கேற்ற வாறு ஒழுங்காகப் பேசுகிறான்.

**லவ:** மேலும், சந்திரகேது, 'என் தந்தையின் பெருமை யைப் பொறுக்கவில்லையா?' என்று நீ என்னை வினவினாய். நான் உன்னைக் கேட்கிறேன்: க்ஷத்திரிய குணங்கள் யாவும் ஒரே மனிதனிடம் கூடிவிட்டனவா?

**சும:** இக்ஷ்வாகு குல மன்னனை நீ அறியாய். இல்லை யேல் இப்படிப் பேசமாட்டாய். அதிகப் பிரசங்கத்தை நிறுத்து.

*32.* *(சிப்பாய்களைக் கலைத்து உன் வீரியத்தைக் காட்டி விட்டாய். பரசுராமனை வென்றவனைப் பழிப்பது உனக்குத் தகாது.)*

**லவ:** *(சிரித்து)* ஐயா, 'ஜாமதக்கினியாரை அடக்கினார்' என்பது என்ன பெருமை?

*33.* *(வாக்கில் வல்லமையுள்ளோர் அந்தணர்; புஜபராக்கிரமமோ க்ஷத்திரியர் இயல்பு வேதமோதிய ஜாமதக்கினிய முனிவரை வென்றதில் மன்னருக்கு மாண்பு ஏது?)*

**ச. கேது:** *(ஆவேசத்துடன்)* ஆரிய சுமந்திரரே, இந்த வாக்குவாதம் போதும்.

*34.* *(இவன் புதியதோர் அவதாரமாக இருக்கவேண்டும். இவனுக்குப் பரசுராமனும் வீரனில்லை. ஏழுலகங்களும் அபயம் அளிக்கும் ரகுநாதனுடைய செயலையும் இவன் மதிக்கவில்லை.)*

**லவ:** ரகுபதியின் சரித்திரமும் மகிமையும் எவனுக்குத் தான் தெரியா? ஆனால் அவற்றைப் பற்றியும் சொல்ல வேண்டியது சிறிது இருக்கிறது. ஆனால் கூடாது.

*35.* *(பெரியோரின் சரிதத்தைப் பரிசோதிக்கலாகாது. பெண்ணான தாடகையைக் கொன்றும், அவர் குறைவற்ற கீர்த்தியையுடைவர். கரனோடு புரிந்த போரில் மூன்றடிப் பின் சென்றாலும், வாலியைக் கொன்ற விதத்தை உலகம் அறிந்தபோதிலும், அவர் மகானே அல்லவா?)*

**ச. கேது:** என் தந்தையைப் பழித்து மரியாதையைக் கடந்து விட்டாய். ஏன் மிதமிஞ்சிப் பேசுகிறாய்?

**லவ:** அடா! என்மேல் புருவத்தை நெறிக்கிறாயா?

**சுமு:** இவர்களுடைய கோபம் பொங்கிவிட்டது.

36. (குரோதத்தால் உடல் துடிக்க, மயிர்முடி கலைந்து ஆட, இயல்பில் சிவந்த கண்கள் பின்னும் அதிகம் சிவக்க, புருவங்கள் வளைந்து அசைய, காந்தி வீசும் இவர்களுடைய முகங்கள், வண்டு சூழ்ந்த தாமரையையும், மறுவோடு கூடிய மதியையும் ஒத்திருக்கின்றன.)

**குமாரர்கள்:** போர்க்களத்திற்குப் போவோம்.

(எல்லோரும் போகிறார்கள்.)

**ஐந்தாவது அங்கம் முடிந்தது.**

# ஆறாவது அங்கம்

## 1

*(ஆகாய விமானத்தில் வீற்றிருக்கும் வித்தியாதர தம்பதிகள்)*

**வித்தியாதரன்:** ஆச்சரியம்! இவ்விரண்டு ரகுகுல குமாரர்களும் காரணமின்றியே கலகம் செய்து, வீராவேசம் கொண்டு கோர யுத்தம் செய்வதைக் கண்டு, தேவாசுரர்கள் அனைவரும் பிரமித்துக் கலங்குகின்றனர். காதலி, அதோ பார்.

1. *(சலங்கைச் சப்தம்போல் வில்லின் மணிகள் ஒலிக்க, வேகமாக நாண்களை இழுத்து விடும் அம்புகள் தொனிக்க, தலைமயிர் காற்றில் பறக்க, ஓயாமல் சரங்களை எய்து, இவர்கள் புரியும் விசித்திரப் போரால் உலகம் நடுங்குகிறது.)*

2. *(இவ்விரு வீரர்களின் நன்மையை நாடி, தேவ துந்துபி, மேக முழக்கம்போல் கம்பீரமாக முழங்குகிறது.)*

ஆதலால், இவ்வாறு யுத்தம் செய்யும் இரண்டு சூரர்கள் மீதும் இடைவிடாது கல்பதருவின் தேனொழுகும் மொட்டுக்களோடு, மலர்ந்த தங்கத் தாமரைப்பூக்களின் இதழ்களையும் சேர்த்து மலர் மழை பொழிவோம்.

**வித்தியாதரி:** இது என்ன திடீரென்று மின்னல் போன்ற பொறிகளால் வானம் முழுதும் பிரகாசிக்கிறதே?

**வி.தரன்:** ஒருவேளை இவ்வாறு இருக்காலாமோ?

3. *(சூரிய மண்டலத்தைத் துவஷ்டிரர் சுற்றுவதுபோல் முக்கண்ணுடைய நெற்றிக் கண் சுழலுகிறதோ?)*

ஆம்! அறிந்தேன். கோபங்கொண்ட சந்திரகேதுவால்

ஆக்கினேயாஸ்திரம் தொடுக்கப்பட்டுள்ளது. அதன் தீப்பொறி களே இவை. ஆதலின் இப்பொழுது,

4. *(கொடிகளும் சாமரங்களும் தீயால் பொசுங்கி ஆடும் பட்டுத் துகில்களின் ஓரங்களில் மஞ்சள்கரைபோல் அக்கினி சிகை ஜ்வலிக்க, விமானக் கூட்டங்கள் விரைந்து விலகுகின்றன.)*

ஆச்சரியம்! அக்கினி பகவான் மிகவும் பெருகி, தீப் பொறிகள் இடியின் தொனியோடு நாலா பக்கமும் வெடித்துச் சிதற, பெரிய ஜ்வாலைகளுடன் பயங்கரமாகப் பரவுகின்றான். எங்கும் உஷ்ணம் தாங்கமுடியவில்லை. ஆதலால் என் காதலியை என் அங்கங்களால் மூடி வெகுதூரம் விலக்கிவிடுவேன்.

*(இப்படியே செய்கிறான்.)*

**வி.தரி:** நல்ல வேளையாக என்னைத் தாக்கத் தொடங்கிய உஷ்ணம் என் நாதனுடைய தேகத்தால் தடுக்கப்பட்டது. அதன் ஸ்பர்சம் நல்முத்தைப்போல் குளிர்ந்து, மெதுவாகவும் சுகமாகவும் இருக்கிறது. அந்த ஆனந்தத்தால் மயங்கி என் கண்கள் சுழலு கின்றன.

5. *(கருமமொன்றும் புரியாமலேயே சுகம் தந்து துயரத்தைப் போக்கும் அன்பினரைப் பெற்றவளே உண்மைச் செல்வம் பெற்றவள்.)*

**வி.தரி:** இதென்ன? மதம் பிடித்தாடும் மயில்களின் கழுத்துப்போன்ற மேகங்கள், பாயும் மின்னல்களுடன் வானத்தை மறைந்துவிட்டனவே.

**வி.தரன்:** விந்தை! குமாரன் லவன் தொடுத்த வரு ணாஸ்திரத்தின் மகிமை இது. இடைவிடாது சொரியும் மழையால் ஆக்கியனேயாஸ்திரம் அடங்கிப் போயிற்று.

**வி.தரி:** மகிழ்ந்தேன். இதனால் மகிழ்ந்தேன்.

**வி.தரன்:** விந்தையே விந்தை! ஆகா! எதுவும் மித மிஞ்சினால் தீமையே. இதோ மேகங்கள் ஒரு பெரிய பிரளய காலப் புயற்காற்றால் அடிக்கப்பட்டுச் சிதறிக் கர்ஜிக்கின்றன. இருள் சூழ்ந்து பயங்கரமான உலகை விழுங்கப் பாய்ந்து அலறி வரும் இவை யமன் வாயைப் போல் தோற்றுகின்றன. யுகாந்திரத்தில் யோக நித்திரை செய்யும் நாராயணனின் வயிற்றில் யாவும் அடங்கிக் கிடக்கும் ஜீவராசிகள்போல் பிராணிகள் யாவும் நடுங்கித் திடுக்கிடுகின்றன. நல்ல காரியம் செய்தாய், சந்திரகேது சரியான சமயத்தில் வாயவ்யாஸ்திரத்தைப் பிரயோகித்தாய். ஏனெனில்,

6. *(பிரம்மத்தை மறைக்கும் மோகத்தை மெய்ஞானம்போல், அடர்ந்த மேகங்கள் அனைத்தையும் காற்றுக் கலைத்து விட்டது.)*

**வி.தரி:** நாத, இதோ அதிவேகமாக வரும் ஒருவர், நழுவும் உத்தரீயத்துடன், தூரத்திலிருந்தே இனிய வசனத்தால் போரைத் தடுத்தவண்ணம் இரு குமாரர்களுக்கு நடுவில் தம் உத்தம விமானத்தை இறக்குகிறார்.

**வி.தரன்:** *(பார்த்து)* சம்பூக வதத்திலிருந்து திரும்பும் ரகுபதியே இவர்.

7. *(பெரியோன் உரைத்த சாந்த மொழிகள் கேட்டு மதித்து, அவற்றின்படியே, இருவரும் போரை நிறுத்தினர். லவன் சாந்தமானான். சந்திரகேதுவும் அடிபணிந்தான். மன்னனும் மகனை அடைந்து இன்பமெய்துக.)* வா நாமும் போவோம், *(போகிறார்கள்.)*

காட்சி முடிந்தது.

*(ராமர், லவன், சந்திரகேது மூவரும் நுழைகிறார்கள்.)*

**ராமர்:** *(புஷ்பகத்திலிருந்து இறங்கி)*

8. *(தினமணிவம்ச சந்திரனே, சந்திரகேது, வேகமாக வந்து என்னை இறுகத் தழுவுவாய். பனிக்கட்டிபோல் குளிர்ந்த உன் தேகம் பட்டால் என் மனவேதனை சிறிது சாந்த மாகும்.)*

*(அவனைத் தூக்கிக் கட்டிக்கொண்டு)* திவ்யாஸ்திரங்கள் பூண்டவனே, நீ சௌக்கியமா?

**ச.கேது:** அற்புத வீரமும் அழகும் ஒன்று கூடிய இந்த லவனை அடைந்ததே என் பெரிய பாக்கியம். ஆதலால் இந்தப் பெரிய வீரனையும் என்னைப் போலவோ, அதற்கும் மேலாகவோ தந்தையார் மதிக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்கிறேன்.

**ராமர்:** *(லவனைப் பார்த்து)* உன் அதிருஷ்டம். இவனது தோற்றம் மிகவும் கம்பீரமாகவும், இனிமையாகவும், அழகாகவும் இருக்கிறது.

9. *(உலகெலாம் காக்க உருவெடுத்த வில் வித்தையோ, வேதத்தை ரக்ஷிக்கத் தேகம் தரித்த வீரதர் மந்தானோ, சக்தி சமுதாயமோ, குணங்களின் குவியலோ அல்லது புவியின் புண்ணியம் திரண்டு வந்ததோ எனத் தோற்றுகிறான் இவன்.)*

**லவ:** *(தனக்குள்)* ஆகா! கம்பீரமான இம் மகா புருஷரின் தரிசனமே என்னைப் புனிதமாக்குகிறது.

10. *(இவர் அன்பிற்கும் ஆதரவுக்கும் பக்திக்கும் இருப்பிடம்; உத்தமமான தர்மம் உருக்கொண்டு அவதரித்த மூர்த்தி.)*

ஆச்சரியம்!

11. *(விரோதம் மறைந்து மிகுந்து ஆனந்தம் பிறந்தது; என் கர்வம் குறைந்தது, வினயம் வளர்ந்தது. இவரைக் கண்ட கணமே என்னையும் அறியாமல் பரவசமானேன். புண்ணிய ஸ்தலங்களைப்போல் பெரியோர் மகிமையும் பெரிதே.)*

**ராமர்:** இவன் திடீரென்று என் துன்பத்தைத் தணித்து என் உள்ளத்தில் நேசத்தையும் உண்டு பண்ணுவதற்குக் காரணம் என்ன? ஆனால், அன்புக்கு ஒரு காரணம் வேண்டுமென்பது தவறன்றோ?

12. *(உள்ளிருக்கும் ஒரு சக்தி பொருள்களைப் பிணைக்கிறது. அன்பிற்கு எவ்வித வெளிக் காரணமும் வேண்டாம். கதிரவன் உதிக்கக் கமலம் மலரவில்லையா? சந்திர காந்தமும் இந்துகிரணத்தால் உருகவில்லையா?)*

**லவ:** *சந்திரகேது, இவர் யார்?*

***ச.கேது:*** பிரிய மித்திரா, இவரே என் தந்தையார்.

**லவ:** 'எனது எல்லாம் உனது' என்று நீயே சொன்னாய். ஆதலால், இவர் எனக்கும் தந்தையே ஆவர். ஆயினும், ராமாயண கதாநாயகர்களான உன் தந்தையர் நால்வர் இருக்கின்றனரே, அவர்களுக்கும் இவர் யாரென்பதைத் தனித்துக் கூறுவாய்.

***ச.கேது:*** இவர்தாம் முதல் என்று அறிந்துகொள்.

**லவ:** (மன மலர்ச்சியுடன் தனக்குள்) இவரே நகுநாதரா? இன்று எனக்கு நன்னாள் பிறந்தது. இவரையும் கண்டேன். (வினயத்தோடும், ஆவலோடும்) தந்தையாரே, வால்மீகி பகவானுடைய சிஷ்யன் லவன் வந்தனம் செய்கிறான்.

**ராமர்:** சிரஞ்சீவியாக இருப்பாய். என்னிடம் வா. (நேசத்துடன் ஆலிங்கனம் செய்து) மகனே, மிதமிஞ்சிய வினயம் வேண்டாம். என்னைப் பன்முறை இறுகத் தழுவிக்கொள்.

13. *(பழுத்த தாமரையின் மெல்லிய உள்ளிதழ்போல், அழகோடு மிருதுவுமான இந்தக் குமாரனின் ஸ்பரிசம் சந்திர கிரணத்தையும் சந்தனத்தையும்போல், என் உடலைக் குளிர்வித்து உள்ளத்தையும் பூரிக்கச் செய்கிறது.)*

**லவ:** *(தனக்குள்)* என் மேல் காரணமின்றி இவருக்கு இவ்வித நேசம் ஏற்பட்டிருக்கிறது. நானோ பிடிவாதத்தால் இவரை எதிர்த்து, ஆயுதப் பிரயோகங்கூடச் செய்துவிட்டேன். *(வெளிப்படையாக)* தந்தையார் அடியேனுடைய சிறுபிள்ளைத் தனத்தை மன்னித்தருள வேண்டும்.

**ராமர்:** ஏன், சிறுவனால் என்ன குற்றம் செய்யப்பட்டது?

**ச.கேது:** குதிரையைப் பின்தொடர்ந்து சிப்பாய்கள் தங்கள் பிரதாபத்தைப் போற்றக் கேட்டு, இவன் தன் வீரத்தைக் காண்பித்தான்.

**ராமர்:** இது க்ஷத்திரியனுக்கு அழகு அல்லவா?

*14.* *(வீரன் மற்றொரு வீரனின் பிரதாபத்தைச் சகிக்கமாட்டான். இது அவன் இயற்கை; இதை அவன் வேண்டுமென்று செய்வதில்லை. தினகரன் தன் கிரணங்களை உலகெங்கும் வீசுகையில், காந்தக் கற்கள் தனியாகத் தீயைக் கக்கு வானேன்?)*

**ச.கேது:** இந்த மகாவீரனிடம் பொறுமை இல்லாமை கூடச் சோபிக்கின்றது. இந்த நண்பனால் தொடுக்கப்பட்ட ஜிரும்பகாஸ்திரங்களால் மயங்கிக் கிடக்கும் நம் சைனியங்களைப் பாருங்கள்.

**ராமர்:** *(பார்த்து)* மகனே, லவா, இந்த அஸ்திரத்தைத் திருப்புவாய், சந்திரகேது, நீயும் அசைவற்றுக் கிடக்கும் இந்தச் சைனியத்தைத் தோற்றுவாய்.

**லவ:** தந்தை ஆணைப்படியே.

*(மந்திரம் ஜபிக்கிறான்.)*

**ச.கேது:** கட்டளைப்படியே.

*(பேசுகிறான்.)*

**ராமர்:** பாலனே, இந்த அஸ்திரங்களைப் பிரயோகம் செய்வதற்கும் சம்ஹாரம் செய்வதற்கும் தனி ரகசியங்கள் இருப்பதாகவும் அவைகள் பரம்பரையாகவே கிடைப்பதாகவும் சொல்லப்படுகிறது.

*15. (பிரமன் முதலிய பரம குருக்கள் ஜகத்தின் நன்மையை நாடிப் பல்லாண்டு தவம் புரிந்து, தங்கள் தவமே சோதி வடிவமான இந்த அஸ்திரங்களைக் கண்டனர்).*

அவ்வாறே இந்த அஸ்திர ரகசியத்தைப் பகவான் கிருசாசுவர் பல்லாயிர வருஷகாலம் தமக்குப் பணிவிடை செய்த கௌசிகருக்கு உபதேசித்தார். அந்த மகான் இவற்றை எனக்கு அளித்தார் என்பது பரம்பரை. இவை குமரனுக்கு எவ்விதம் கிடைத்தன என்பதை அறிய விரும்புகிறேன்.

**லவ:** எங்கள் இருவருக்கும் இந்த அஸ்திரங்கள் தாமாகவே கிடைத்தன.

**ராமர்:** (ஆலோசித்து) ஏன் சாத்தியமில்லை? இது பெரிய புண்ணிய பலத்தின் மகிமையாக இருக்கவேண்டும். இருவர் என்று ஏன் கூறினாய்?

**லவ:** நாங்கள் இரு சகோதரர்கள்; இரட்டையர்கள்.

**ராமர்:** அப்படியானால், இரண்டாவது சகோதரன் எங்கே?

(திரைக்குள்)

*தாண்டாயண, தாண்டாயண!*

*16. (என் தோழ! சிரஞ்சீவி லவனுக்கும், சக்கரவர்த்தியின் சேனைக்கும் போர் நிகழ்கிறது என்று கூறினாய் அல்லவா? இன்று 'சக்கரவர்த்தி' என்ற சொல் அழிந்துபோகும். க்ஷத்திரியர்களின் அஸ்திரங்களின் தீயும் அணைய வேண்டும்.)*

**ராமர்:**

17. (புதிய நீலமேகத்தின் ஆழ்ந்த கர்ஜனையைக் கேட்டு, ஒரு நொடியில் மொட்டுக்களை மூடிக்கொள்ளும் கதம்ப மரத்தைப்போல் இந்திர நீலமணி யொத்த மேனியுள்ள இவன் குரலைக்கேட்டு என்உடலில் மயிர்க்கூச்செறிகிறது.)

**லவ:** இவன்தான் என் தமையன், ஆர்யன் குசன்; பரதாசிரமத்திலிருந்து திரும்பி வந்திருக்கிறான்.

**ராமர்:** *(ஆவலோடு)* மகனே, அவனை இங்கே கூப்பிடு.

**லவ:** அப்படியே. *(சுற்றுகிறான்.)*

*(குசன் நுழைகிறான்.)*

**குச:** *(உற்சாகத்தோடு வில்லை நாணெற்றிக் கொண்டு.)*

18. (சுடர்சரம் ஜ்வலிக்கும் என் வில், இன்று ஆதிமனு முதற்கொண்டு இந்திரனுக்கு அபயமளித்தும் தீயோரைத் தண்டித்தும் தூய வீரத்தை வளர்க்கும் கதிரவன் குல மன்னரோடு போர்புரியும் பேறு பெற்றது, அது செய்த பாக்கியமே.

*(படாடோபத்துடன் நடக்கிறான்.)*

**ராமர்:** இந்த க்ஷத்திரிய குமாரனிடம் வீரியம் எல்லை கடந்திருக்கிறது.

19. (மூவுலகையும் புறக்கணிக்கும் அரிம நாக்கு; பூமியைப் பணியச்செய்யும் கம்பீர நடை; குமரனேறும் குன்று போன்ற தோற்றம். இவன் வீரத்தின் உருவோ அல்லது மானத்தின் மூர்த்தியோ?)

**லவ:** *(நுழைந்து)* அண்ணாவுக்கு ஜயம்.

**குச:** சிரஞ்சீவியாக இருப்பாய். 'யுத்தம், யுத்தம்' என்று இது என்ன பேச்சு?

**லவ:** அது ஒன்றும் பிரமாதமில்லை. அண்ணா அவர்கள் இந்தக் கர்வத்தை விட்டு வினயத்தோடு வரவேண்டும்.

**குச:** எதற்காக?

**லவ:** இங்கே ரகுபதி நிற்கிறார். இவர் நம்மிடம் அன்பு கொண்டு, உன்னை அருகில் அழைக்கிறார்.

**குச:** (தர்க்கத்துடன்) ராமாயண கதாநாயகர் அல்லவா இவர்? வேதங்களை ரக்ஷிக்கும் லோகநாதர் அல்லவா?

**லவ:** அதற்கு என்ன சந்தேகம்?

**குச:** பெரும் புண்ணியத்தால் தரிசனம் கிடைக்கக் கூடிய மகாத்மா இவர். ஆயினும் நாம் இவரை எப்படி அணுகு வதென்று எனக்கு விளங்கவில்லை.

**லவ:** நம் பிதாவின் அருகில் செல்வதுபோல்.

**குச:** அது எப்படி முடியும்?

**லவ:** ஊர்மிளையின் மகன் சந்திரகேது என்னும் வீரன் என் தோழனானான். அந்தச் சம்பந்தத்தால் இந்த ராஜரிஷி நமக்குத் தர்மபிதா ஆனார்.

**குச:** இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு க்ஷத்திரியரிடங்கூட நாம் வணங்குவது நியாயமே ஆகும்.

(இருவரும் சுற்றுகிறார்கள்.)

**லவ:** இதோ பார், அண்ணா! உலகம் போற்றும் உத்தம சரித்திர புருஷர் இவர் என்பதை இவருடைய தோற்றமும் காம்பீர்யமுமே நமக்குக் கூறுகின்றன.

**குச:** (கவனித்து)

*20.* *(இவர் உருவமே கவருகிறது; தோற்றமே தூய்மைப்படுத்து கிறது; பாத்திரம் அறிந்தே கவியும் ராமாயணக் கவிதை பாடினார்.)*

(நுழைந்து) தந்தையே, வால்மீகி முனியின் சிஷ்யன் குசன் வந்தனம் செய்கிறான்.

*21.* *(அமிர்த நீர் நிறைந்த மேகத்தை ஒத்த உன்தேகத்தை ஆலிங்கனம் செய்ய ஆசை கொண்டேன்.)*

*(கட்டிக்கொண்டு, தமக்குள்)* என் குமாரனாக இருப் பானோ இவன்? *(இதுவும் சுலோகத்தின் பாகம்)* என் அங்கங் களிலிருந்து வழிந்த அன்பால் அமைந்தவனோ? என் உயிரே வேறு உருவெடுத்து வந்து நிற்கின்றதோ?

*22.* *(என் உள்ளத்தில் பொங்கும் ஆனந்தத்தால் செய்யப் பட்டவனோ இவன்? இவனது ஆலிங்கனம் எனக்கு அமிர்தவர்ஷமாகின்றது.)*

**லவ:** தந்தையே, தலையில் சூரியன் படுகிறான், ஆதலின், இந்த சாலமரத்தின் நிழலில் சிறிதுநேரம் உட்காருங்கள்.

**ராமர்:** உன் இஷ்டப்படியே.

*(சுற்றி எல்லோரும் உட்காருகின்றனர்.)*

**ராமர்:** *(தமக்குள்)*

*23.* *(வினயத்துடன் கூடிய நடையுடை பாவனைகளில், லவ குசர்களிடம் ராஜ லக்ஷணங்கள் காணப்படுகின்றன.)*

*24.* *(மாசற்ற மணியில் ஒளி வீசுவதுபோலவும், மலர்ந்த கமலத்தில் தேன் ஒழுகுவது போலவும், ஒவ்வோர் அங்கமும் அழகுடன் அமைந்து இவர்கள் காந்தியுடன் பெரிதும் சொலிக்கின்றனர். ரகுகுல குமாரர்களின் சாயலை யும் இவர்களிடம் காண்கிறேன்.)*

25. *(வயதான புறாவின் கழுத்தை ஒத்த வர்ணம்; கொழுத்த காளையின் பலத்தைஒத்த புஜங்கள்; இளஞ் சிங்கத்தைப் போன்ற அச்சமற்ற பார்வை; மங்கள முரசின் இனிய தொனிபோன்ற குரல்.)*

*(உற்றுப் பார்த்து)* ஆகா! என் சாயல் மட்டுமல்ல;

26. *(உற்றுப்பார்த்தால், இவர்களின் உடலில் ஜானகியின் சின்னங்களையும் ஆங்காங்கே காணலாம். புதுமலர்க் கமலம்போன்ற என் காதலியின் முகம் மறுபடியும் என் கண்முன் நிற்பது போலிருக்கிறது.)*

27. *(முத்துப்போன்ற அழகிய பற்களுடன் இவர்களின் உதடுகளும் காதின் அமைப்பும் அவ்வண்ணமே உள்ளன; கண்களில் செந்நிறமும் நீலநிறமும் கலந்திருந்த போதிலும், அவைகளில் வீசும் கவர்ச்சியுள்ள காந்தி அவள் கண்களின் ஒளியையே ஒத்திருக்கிறது.)*

*(சிந்தித்து)* வால்மீகி ஆசிரமமுள்ள இதே வனத்தில் தேவி விடப்பட்டாள். இவர்களின் தோற்றமும், வயதும், குணங்களும் இவ்வண்ணம் இருக்கின்றன. அஸ்திரங்கள் இவர்களிடம் தாமாகவே வந்து சேர்ந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. சித்திரக் காட்சியின்போது நான் கொடுத்த உத்தரவால் இவைகள் தோன்றியிருக்கலாம். பரம்பரையின்றி இந்த அஸ்திரங்கள் கிடைக்க மாட்டா என்று முன்னோர்களும் கூறியிருக்கின்றனர். குழப்பமடைந்த என் மனம் திடீரென்று அதிகச் சந்தோஷத்தையும் துக்கத்தையும் அடைந்திருப்பதிலிருந்தே நம்பிக்கை உண்டாகிறது. இரட்டையர் களென்பதும் என் எண்ணத்தை உறுதிப்படுத்துகிறது. தேவி கர்ப்பம் தரித்தபொழுது இரட்டைக் குழந்தைகள் பிறக்குமென்று எதிர்ப்பார்த்தேன். *(கண்ணீருடன்)*

28. *(எங்கள் காதல் மிதமிஞ்சி, முன்னொருநாள் நாங்கள் இருவரும் அன்னியோன்யமாய் இருந்தகாலை, நாணத்துடன் மகிழ்ந்திருக்க மைதிலியின் கர்ப்பத்தின் இருமையை முதலில் நான் அறிந்தேன். அதன்பின்பு பல நாள் கழித்து அவள் உணர்ந்தாள்.)*

(அழுதுகொண்டு) ஏதாவது ஒரு விதத்தில் இவர்களைக் கேட்கலாமா?

**லவ:** தந்தையே, இது என்ன?

29. *(மலர்ந்த கமலத்தின் காந்தியைப் பனி மூடியது போல், உலகத்தை உய்விக்கும் தங்கள் வதனத்தைக் கண்ணீர் மறைக்கிறது.)*

**குச:** ஆ, தம்பி!

30. *(சீதா தேவியைத் துறந்து ரகுபதி துயரப்பட்டாரா? இல்லாளை இழந்ததால் அவருக்கு இவ்வுலகு காடா யிற்றன்றோ? அவர்களின் அன்புக்கு அளவில்லை; பிரிவுக்கு முடிவில்லை. ராமாயணக் கதை கேளாதவன் போல் ஏன் வினவுகிறாய்?)*

**ராமர்:** (தமக்குள்) இவர்கள் சம்பந்தமில்லாதவர்கள் போல் பேசுகிறார்கள். இவர்களைக் கேட்டு என்ன பயன்? மூட இருதயமே! காரணமின்றி உன்னிடம் இந்த வாஞ்சை திடீரென்று பிறப்பானேன்? இம்மாதிரி என் மனக்கிலேசத்தை வெளிப் படுத்தி, இந்தப் பாலகர்களின் அனுதாபத்திற்குப் பாத்திரனாகி விட்டேன். இருக்கட்டும். இதை அடக்கி மறைத்துக் கொள்ளு கிறேன்.

(வெளிப்படையாக) சூரிய குலத்தைப் பற்றிய வால்மீகி யின் கவிதாப் பிரவாகத்தைப் புகழ்ந்து, எல்லோரும், 'ராமாயணம்' 'ராமாயணம்' என்று சொல்லுகிறார்கள். அதில் சிறிது கேட்க வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறது.

**குச:** முற்றும் அது எங்களால் மனப்பாடம் செய்யப் பட்டிருக்கிறது. பால காண்டத்தின் கடைசி அத்தியாயத்தில் பின்வரும் இரண்டு சுலோகங்கள் என் ஞாபகத்திற்கு வருகின்றன.

**ராமர்:** சொல்லுவாய், குழந்தாய்.

**குச:**

31. *(பெரியோன் ராமனுக்கு இயற்கையாகலே இல்லாள் சீதைபால் அன்பு பிறந்தது. அதனைத் தன் உயர் குணத்தால் அவளும் ஓயாமல் ஓங்க வளர்த்து வந்தாள்.)*

32. *(அவ்வாறே ராமனும் ஜனகன் மகளுக்குத் தன் உயிரினும் உயர்ந்தவனானான். இருவருக்குள்ளும் பெருகி வளர்ந்த பேரன்பை அவர்களின் இதயங்கள் அறிந்தன.)*

**ராமர்:** கஷ்டம்! இது என் மர்மங்களைப் பெரிதும் போதிக்கின்றது. ஆ! தேவி! இவ்விதமே அப்பொழுது இருந்தது, இந்த உலகத்து நிகழ்ச்சிகள் யாவும் காரணமின்றியே விபரீதமாகி, மனிதனை ஏமாற்றித் துன்புறுத்தும் தன்மையுடையன.

33. *(ஒப்பற்ற காதலுடன் கூடிய அந்தப் பேரானந்தம் எங்கே! அளவற்ற அன்பு எங்கே! சுகதுக்கங்களில் சமமான, சலியாத, ஒற்றுமைதான் எங்கே! ஆயினும், இந்தப் பாவி யின் உயிர் போகாமல் பரிதவிக்கிறது.)*

*ஆ! கஷ்டம்!*

34. *(என் இனியாளின் ஆயிரக்கணக்கான குணங்கள் ஓங்கி வளர்ந்த காலத்தை மீண்டும் நினைவூட்டுகின்றன.)*

35. *(அந்தச் சமயத்தில்தான் மான்விழியாளின் மார்பினில் தனங்கள் தினந்தோறும் இளமையால் பூரித்து வந்தன. வயதும் வாஞ்சையும் விருப்பமும் ஒன்று சேர்ந்து, உடலில் மெதுவாகவும் மனத்தில் மிதமிஞ்சியும் காதல் வளர்ந்தது.)*

**லவ:** மந்தாகினி நதி தீரத்தில் சித்திரகூட வனத்தில் விளையாடும்பொழுது சீதா தேவியைக் குறித்து ரகுபதி கூறிய சுலோகம் இது:

36. *(உன் பொருட்டே நிர்மாணிக்கப்பட்டதுபோல், இதோ பாறையால் அமைந்த இந்தப் பலகையைப் பார். இதனைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் கேசரி மலர் உதிர்ந்து கொட்டியிருப்பதையும் பார்).*

*ராமர்:* *(வெட்கம், புன்சிரிப்பு, சிநேகம், தயையுடன்)* குழந்தைகள் சாதாரணமாகவே அறியாதவர்கள். அதிலும் வனத்தில் வசிப்பவர்களோ விசேஷ வெகுளிகள். ஆ, தேவி! அக்காலத்தில் நம் அன்னியோன்ய ஆனந்தங்களுக்குச் சாக்ஷியாக இருந்த அவ்விடத்தின் ஞாபகம் உனக்கு இருக்கிறதா? கஷ்டம், ஐயோ, கஷ்டம்!

37. *(களைப்பால் வியர்த்த உன் சந்திரமுகத்தில் மந்தாகினியின் மந்தமாருதம் மெதுவாக வீச, கூந்தல் கலைந்தசைய, நெற்றியில் குங்குமமின்றி, காதில் குண்டலமின்றி சொலிக்கும் உன் சுந்தர வதனத்தை.)*

*(அசைவற்று நின்று, பரிதாபகரமாக)*

*(நினைந்து நினைந்து அதை மீண்டும் என் மனத்தில் சிருஷ்டித்து, நான் பிரிவிலும் ஒரு சிறிது ஆறுதலைப் பெறாம லில்லை. ஆனால் கற்பனை குன்றும்பொழுது, உலகம் வனாந் தரமாகி, உமிக்கணப்பில் இட்டு ஊதுவதுபோல், என் இதயம் எரிகிறது.*

*(திரைக்குள்)*

39. *(வசிஷ்டரும் வால்மீகியும், தசரதன் தேவிமார்களும், அருந்ததியும், ஜவகரும், குமாரரின் கலகம் கேட்டு, மனம் துடித்துத் தளர்ந்த தேகங்கள் களைக்க, நெடுந்தூரம் ஆசிரமத் திலிருந்து நடந்துவருகின்றனர்.)*

40. *(உயர்ந்த உறவால் பேருவகை கொண்டு, என் தந்தை யோடும் வசிஷ்டர் முதலானவர்களோடும் கூடி, என் விவாக காலத்தில் இவர் களித்ததைக் கண்ணாரக் கண்ட நான், இப்போது இவருடைய மித்திரர் உயிர் துறந்து, மகளும் இக்கதி அடைந்தபின், மீண்டும் இவரைப் பார்க்கும்போது, என் நெஞ்சம் சுக்கு நூறாக வெடித்திருக்க வேண்டுமல்லவா? ஆனால், ராமனால் சகிக்க முடி யாததும் ஒன்று உண்டோ?)*

*(திரையில்)*

*ஆ! ஆ! கஷ்டம், கஷ்டம்!*

41. *(உருவழிந்து, பெருமை மட்டும் மிஞ்சிய ராமனைத் திடீரெனக் கண்ட தாய்மார்கள், அறிவிழந்து மயங்க, ஜனங்கள் ராமனை அறிமுகப்படுத்த அவர்கள் துன்பம் தாங்காமல் மூர்ச்சையடைந்தார்கள்.)*

**ராம:** ஆ தந்தையே! தாய்மார்களே! ஜனக பிதாவே!

42. *(ஜனக வம்சத்துக்கும் ரகு வம்சத்துக்கும் மங்கள நூலாக விளங்கிய சீதையிடம் இரக்கங்கொள்ளாத ராமனிடம் உங்கள் கருணை வீண்.)*

ஆனால் இவர்களுக்கு அடிபணிகிறேன்.

*(எழுந்திருக்கிறார்)*

**குசலவர்:** இப்படி வாருங்கள்.

*(கண்ணீருடன் சுற்றிப் போகிறார்கள்.)*

**''குமாரனைக் காணுதல்'' என்ற ஆறாம் அங்கம் முற்றிற்று.**

## ஏழாவது அங்கம்

*(லக்ஷ்மணர் நுழைகிறார்.)*

***லக்ஷ்மணர்:*** *ஆகா! இன்று பகவான் வால்மீகி, பிராம் மணர் க்ஷத்திரியர் முதலிய எல்லா ஜனங்களையும் நம்மையும் அழைத்து, தேவர் அசுரர் முதலியோரையும், தாவர ஜங்கமப் பொருள்கள் உட்பட எல்லா ஜீவராசிகளையும் இங்கே தம் சக்தியினால் திரட்டியிருக்கிறார். அண்ணாவால் ஆக்ஞை இடப்பட்டிருக்கிறேன்: ''தம்பீ லக்ஷ்மணா, பகவான் வால்மீகி தாம் செய்திருக்கும் பாடல்களை அப்ஸரஸ்திரீகள் கீதத்துடன் அபிநயிக்கப்போகிறார்கள் என்றும் நாம் அனைவரும் வர வேண்டும் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆதலால், கங்காதீரத்தில் நாடக ஸ்தலத்திற்குப் போய் அங்கே வருவோரை அமரச் செய்வாய்'' என்று. எல்லா ஜீவராசிகளும் அவரவர் களுக்குத் தகுந்தவாறு உட்காரவைத்து ஏற்பாடு செய்துவிட்டேன்.*

*1. (அரசுதொழில் புரிந்தாலும், துறவி வாழ்க்கை நடத்தும் ஆரியர், வால்மீகி முனிவரை மதித்து இதோ வருகிறார்.)*

*(ராமர் நுழைகிறார்.)*

***ராமர்:*** *லக்ஷ்மணா, நாடகம் பார்க்க வந்தவர்கள் அனை வரும் அமர்ந்து விட்டார்களா?*

***லக்ஷ்:*** *ஆமாம்:*

***ராமர்:*** *இந்தக் குமாரர்கள் குசலவர்களும், குமாரன் சந்திரகேதுவுக்குச் சமமான ஆசனங்களில் அமர்ந்திருக்குமாறு செய்வாய்.*

***லக்ஷ்:*** *அவர்களிடம் தங்களுக்குள்ள அன்பை அறிந்து அவ்வாறே செய்துவிட்டேன். இதோ தங்களுக்குத் தனி விரிப்புப் போட்டிருக்கிறது. உட்காருங்கள்.*

***ராமர்:*** *(உட்காருகிறார்.)*

**லக்ஷ்:** யார் அங்கே? நாடகம் தொடங்கலாம்.

**சூத்திரதாரன்:** (நுழைந்து) சபையோர்களே. மெய்ஞானி வால்மீகி முனிவர் எல்லா ஜீவராசிகளுக்கும் தெரிவிக்கிறார்; ''நமது ஞானக்கண்ணால் கண்டுதூய்மையும் ஆச்சரியமும் நிரம்பிய ஒரு கவிதை செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கவிதையைக் கௌரவப்படுத்தி அனைவரும் கேட்கவேண்டும்'' என்று.

**ராமர்:** இதன் கருத்து இதுவே: மகரிஷிகள் தர்மத்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றனர். அமிர்தம் போன்ற அவர்களுடைய மாசற்ற அறிவில் எள்ளளவும் குற்றம் இராது இதில் சிறிதும் சந்தேகம் கொள்ளவும் கூடாது.

*(திரைக்குள்)*

ஆ, ஆரிய புத்திரா! ஆ, தம்பீ லக்ஷ்மணா! தனியாகச் சரணின்றி வனத்தில் விடுபட்டு, பிரசவ வேதனையால் பீடிக்கப்பட்டு, ஆசையனைத்தும் இழந்த இப்பாவியேனைக் கொடிய காட்டுமிருகங்கள் விழுங்க விரும்புகின்றன. அபாக்யவதியான நான் இதோ பாகீரதியில் விழுகிறேன்.

**லக்ஷ்:** (தனக்குள்) எதிர்பாராத ஒரு கஷ்டம் இது.

**சூ.தாரன்:**

2. (பூதேவியின் மகள் மன்னரால் துறக்கப்பட்டவளாய், தான் ஈன்ற குழந்தைகளுடன் கங்கை நதியில் குதிக்கிறாள்.)

*(போகிறாள்.)*

**ராமர்:** (ஆவேசத்துடன்) தேவி, தேவி, ஒரு நொடி நில்.

**லக்ஷ்:** அண்ணா, நாடகம் இது!

**ராமர்:** ஆ தேவி! தண்டகாரண்ய வாசத்தை விரும்பும் சகி, உனக்கு ராமனால் இந்தக் கொடிய விபத்து நேரிட்டது.

***லக்ஷ்:*** அண்ணா, நாடகத்தைப் பார்ப்போம்.

***ராமர்:*** இதோ கருங்கல்லாகி விட்டேன்.

*(கங்கையும் பூமியும் ஒவ்வொரு குழந்தையைத் தாங்க, இருவராலும் அணைக்கப்பட்டுச் சீதை வருகிறாள்.)*

***ராமர்:*** தம்பீ லக்ஷ்மணா, என்றும் அறியாத அளவற்ற இருள் என்னைக் கவ்வுகிறது. என்னைப் பிடித்துக்கொள்.

**தேவிகள்:**

3. *(வருந்தாதே வைதேகி! உனக்கு ஒரு குறையும் இல்லை. ரகுகுலத்தைத் தாங்கும் இரு குமாரர்கள் நீரில் பிறந் துள்ளனர்.)*

***சீதை:*** *(சிறிது ஆறுதலடைந்து)* ஈசனருளால் இரண்டு குமாரர்கள் பிறந்தனரா? ஆ நாதா!

*(மூர்ச்சை யடைகிறாள்.)*

***லக்ஷ்:*** *(காலில் விழுந்து)* அண்ணா, கடவுள் கிருபையால் நாம் பிழைத்தோம். நம் குலத்திற்கு நன்முனை தோன்றிவிட்டது. *(பார்த்து)* ஆ! அண்ணா கலங்கிக் கண்ணீருகுத்துப் பிரக்ஞை யற்றவர் போலிருக்கிறாரே *(விசிறுகிறார்.)*

***பூமி:*** குழந்தாய், வருந்தாதே.

***சீதை:*** *(தேறி)* பகவதி, உன்னைத் தெரியவில்லையே. கூட இவள் யார்?

***பூமி:*** இவள் உன் மாமனார் குலத்தின் தேவதை பாகீரதி.

***சீதை:*** பகவதி, உனக்கு வந்தனம்.

***பாகீரதி:*** உன் சீலத்துக்கேற்ற சம்பத்தை அடைவாய்.

***லக்ஷ்:*** நாம் அனுக்கிரகிக்கப்பட்டோம்.

***பாகீரதி:*** இவள் உன் அன்னை பூதேவி.

***சீதை:*** அம்மா! இந்நிலையில் உன்னால் பார்க்கப் பட்டேன்.

***பூமி:*** வா, குழந்தாய்! வா, மகளே!

*(சீதையைத் தழுவி பூமி மூர்ச்சையடைகிறாள்.)*

***லக்ஷ்:*** (சந்தோஷத்துடன்) தேவியார் அதிருஷ்ட வசமாகக் கங்கையினாலும் பூதேவியினாலும் காக்கப்பட்டார்.

***ராமர்:*** (பார்த்து) இது மிகவும் துக்கமாக இருக்கிறது.

***பாகீ:*** பூதேவியும் துயரமடைந்தாள். பெற்றோருக்கு மக்களிடம் உள்ள அன்புக்கு அளவுண்டோ? ஆனால் சம்சாரத்தை நடத்தும்பொருட்டுப் பிராணிகளையெல்லாம் ஒன்றாகப் பிணைத்து, அவற்றின் மனத்தை மயக்கி இணைக்கும் கயிறு இந்த அன்பே அன்றோ? அனைத்தையும் தாங்கும் பூதேவியே, வைதேகியே, வருந்தாதீர்கள்: மனம் தேறுங்கள்.

***பூமி:*** (தேறி) தேவி, இந்தச் சீதையைப் பெற்று நான் வருந்தாமல் எப்படி இருப்பேன்?

4. (அரக்கர் நடுவில் நீண்டகாலம் இவள் வருத்தப்பட்டதைச் சகித்தேன். மறுபடியும் இப்படித் துறக்கப்பட்ட இவளைக் கண்டு எவ்வாறு பொறுப்பேன்?)

***பாகி:*** பழங்கரும பலனாக விதி வழி திறக்கும்பொழுது வாசற்கதவை மூடித் தெய்வத்தைத் தடுக்கக்கூடுமோ?

***பூமி:*** பகவதி, பாகீரதி, நீ உண்மை கூறினாய். ஆனால், இது ராமபத்திரனுக்குத் தகுமோ?

5. (இளமையில் பிடித்த கரத்தையும் கவனிக்கவில்லை. என்னையும், ஜனகரையும், தீயையும், உயர் சீலத்தையும்

தன் குலப்பெருக்கையும் எதனையும் அவன் மதிக்க வில்லை.)

**சீதை:** ஆ! என் நாதனை ஞாபகமூட்டிவிட்டாய்.

**பூமி:** ஆ! உன் நாதன் எவன்?

**சீதை:** (வெட்கத்துடன் கண்ணீர் விட்டு) அம்மா சொல்வதுதான் சரி.

**ராமர்:** தாயே, பூதேவி, என்னை நன்கு வர்ணித்தாய் .

**பாகீ:** பகவதி பூதேவி, இவ்வுலகத்திற்கெல்லாம் நீ சரீரமல்லவா? அறியாததவள் போல் ஏன் உன் மருமகன் பேரில் கோபிக்கிறாய்?

6. (கொடிய அபவாதம் ஊரெல்லாம் பரவிவிட்டது. இலங்கையில் நடந்த சோதனையை யார் நம்புவார்? பிரஜைகளின் நல்லெண்ணமே ரகு குலத்தின் பொக்கிஷம். இந்தத் தர்மசங்கடத்தில் உன் மருமகன்தான் என்ன செய்வான்.)

**லக்ஷ்:** தேவதைகளுக்குப் பிராணிகளின் உள்ளத்திலுள்ள உணர்ச்சிகளெல்லாம் தடையின்றித் தெரியும்போலும்.

**பாகீ:** இவ்வாறு இருக்கும் அவனை மன்னிக்கும் பொருட்டு இதோ உனக்குக் கைகூப்பினேன்.

**ராமர்:** தாயே, பகீரதன் குலத்தில் உனக்கு இருக்கும் அன்புக்கு அளவில்லை.

**பூமி:** தேவி, உன்னிடம் எனக்கு எப்பொழுதும் பிரியம் அல்லவா? ஆயினும் தாங்காத துக்கத்திற்கு ஆளான என் மகளின் நேசத்தால் இப்படி உரைத்தேன். ராமபத்திரனுக்குச் சீதையிட முள்ள அன்பையும் நான் அறியாமலில்லை.

7. (விதிவசத்தால் என் மகளைத் துறந்து, துயரத்தீ உள்ளத்தை ஓயாமல் எரிக்க, ஒப்பற்ற மனோதிடத்தாலும் பிரஜைகளின் புண்ணியத்தாலும் அவன் உயிர் தாங்கி வருகிறான்.)

**ராமர்:** பெற்றோருக்கு மக்களிடம் என்றும் கருணை குறைவதில்லை.

**சீதை:** (அழுது, கைகூப்பி) அம்மா, உன் உடலில் எனக்கு இடம் கொடுத்து மறைத்துக்கொள்வாய்.

**ராமர்:** இவள் வேறென்ன சொல்வாள்?

**பாகீ:** அப்படிச் சொல்லாதே. பல்லாயிரம் வருஷங்கள் நீ சிறப்புடன் வாழ்வாய்.

**பூமி:** மகளே, உன் இரு குமாரர்களையும் போஷிக்க வேண்டாமா?

**சீதை:** நான் அநாதை. இவர்களால் எனக்கு என்ன ஆகவேண்டும்?

**ராமர்:** இதயமே! நீ கல்லே ஆவாய்.

**பாகீ:** உன் புருஷன் உயிருடனிருக்கையில் நீ எப்படி அநாதையாவாய்?

**சீதை:** அதிருஷ்டமில்லாத எனக்கு இனி நாதன் எங்கே?

**தேவிகள்:**

8. (உலகை உய்விப்பவள் நீ. வீணில் உன்னை நீயே இகழாதே. எங்கள் இருவரின் சேர்க்கையால் உன் தூய்மை மேலும் அதிகரித்தது.

**லக்ஷ்:** அண்ணா, கேளுங்கள்.

**ராமர்:** இந்த ஜனங்கள் கேட்கவேண்டும்.

*(திரைக்குள் கலகலச் சப்தம்)*

**ராமர்:** ஏதோ அதிசயம் நடக்கிறது

**சீதை:** வானம் ஏன் ஜொலிக்கிறது?

**தேவிகள்:** அறிந்தோம்.

(கிருசாசுவர், கௌசிகர், ராமர் ஆகியவர்கள் பரம் பரையாகப் பெற்ற ஜிரும்பகாஸ்திரங்கள் இதோ தோன்று கின்றன.)

(திரைக்குள்)

10. (தேவி, வைதேகி, வந்தனம், உன் குமாரர்களை அடைந் தோம். சித்திரக் காட்சியில் ராமன் கூறியதைக் கடைப் பிடித்தோம்.)

**சீதை:** அந்த அஸ்திர தேவதைகளே இவர்கள். ஆ, நாதா! உன் கிருபை இன்றும் என்னிடம் பிரகாசிக்கின்றது.

**லக்ஷ்:** இந்த அஸ்திரங்களெல்லாம் உன் பிள்ளைகளை அடையும் என்று அண்ணா கூறவில்லையா?

**தேவிகள்:**

11. (திவ்ய அஸ்திரங்களுக்கு அநேக நமஸ்காரம். உங்கள் அருளால் நாங்கள் தன்யர்களானோம். குமாரர்கள்

வேண்டுங்கால் வந்து சேருவீர். உங்கள் அனைவருக்கும் என்றும் நன்மை உண்டாகுக.)

*ராமர்:*

12. (ஆனந்தமும் அதிசயமும் சோகத்தோடு கூடி, என் மனத்தைக் கலக்கிப் புதிய உணர்ச்சி யொன்றைப் பிறப் பிக்கின்றன.)

**தேவிகள்:** மகிழ்வாய், மகளே, மகிழ்வாய்! உன்மக்கள் இருவரும் இராமனுக்குச் சமமாக ஆனார்கள்.

**சீதை:** பெரியோர்களே, இவ்விருவருக்கும் உசிதமான க்ஷத்திரிய ஸம்ஸ்காரங்களைச் செய்வது யார்?

*ராமர்:*

13. (வஸிஷ்ட முனிவரை என்றும் குருவாகப் பெற்று இக்ஷ்வாகு குலத்தில் மேன்மை தாங்கிய ராணியான சீதை தன் குமாரர்களுக்கு உபதேசம் செய்வோரைத் தேடுகின்றாள். இதுவும் ஓர் விந்தையே!)

**பாகீ:** மகளே, இந்தக் கவலை உனக்கு ஏன்? பால் மணம் மாறியதும் இவர்களை வால்மீகி பகவானிடம் அர்ப்பணம் செய்கிறேன். அவர் இவர்களுக்கு க்ஷத்திரிய ஸம்ஸ்காரங்களை யெல்லாம் செய்துவைப்பார்.

14. (வசிஷ்டரையும், ஆங்கீரசரையும் போலவே, வால்மீகி யும் ஜனகர்களுக்கும் ரகுக்களுக்கும் குலகுரு ஆவார்.)

**ராமர்:** பகவதியால் நன்றாக ஆலோசித்துச் சொல்லப் பட்டது.

**லக்ஷ்:** அண்ணா, இந்த அடையாளங்களிலிருந்து அந்தக் குமாரர்கள் இந்தக் குசலவர்களே என்பது நிச்சயம்.

*15.* *(இவர்கள் பிறப்பினால் திவ்யாஸ்திரங்களைப் பெற்றனர்; வால்மீகி முனிவருக்குச் சிஷ்யர்களாயினர்; உன்னைப் போன்ற வீரத்தோற்றத்தினர். வயதும் இவர்களுக்குப் பன்னிரண்டு ஆயிற்று.)*

**ராமர்:** தம்பீ, இவ்வித எண்ணங்களே என் மனத்தைக் குழப்புகின்றன.

**பூமி:** குழந்தாய், வா, பாதாள உலகத்தைப் புனிதம் செய்.

**ராமர்:** என் அன்பே, வேறு உலகம் சென்றுவிட்டாயா?

**சீதை:** என்னையும் உன் அங்கங்களுக்குள் மறைத்துக் கொள். என் தாயே! இந்த உலக வாழ்க்கையின் விபரீதத்தை இனி என்னால் சகிக்க முடியாது.

**ராமர்:** இதற்குப் பதில் இவள் என்ன சொல்லுவாளோ?

**பூமி:** நான் சொல்வதைக் கேள். பால் குடிக்கும் பருவம் வரையில் இந்த பாலகர்களைப் போஷித்து வா. பிறகு உன் இஷ்டம்போல் செய்யலாம்.

**பாகீ:** அப்படியே செய்.

*(தேவிகளும் சீதையும் போகிறார்கள்.)*

**ராமர்:** வைதேகி மறைந்தே போனாளா? ஆ, தேவி! தண்டகாரண்ய வாசத்தை விரும்பும் சகி, நீ வேறு உலகத்துக்குச் சென்றுவிட்டாய்! *(மூர்ச்சையாகிறார்.)*

**லக்ஷ்:** வால்மீகி பகவானே, நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். உங்கள் காவியத்தின் பலன் இது.

*(திரைக்குள்)*

வாத்தியங்களை விலக்குங்கள். ஸ்தாவர ஜங்கம ஜீவராசி களே, வால்மீகி மகரிஷியால் கட்டளையிட்டு இப்பொழுது தூய்மையான ஓர் ஆச்சரியம் தோன்றுவதைக் காண்பீர்கள்.

**லக்ஷ்:** *(பார்த்து)*

*16.* *(கங்கை வெள்ளம் கடைந்ததுபோல் சுழலுகிறது. வான மெங்கும் தேவர்களும் முனிவர்களும் கூடியுள்ளனர். விந்தையே விந்தை! பாகீரதி பூதேவி ஆகிய இருவ ரோடும் சீதையும் ஜலத்திலிருந்து வெளியே வருகிறாள்.)*

*(மறுபடியும் திரையிலிருந்து)*

*17.* *(உலகம் போற்றும் அருந்ததியே, கங்கையும் பூமியுமான நாங்கள் கற்பரசியான சீதையை உன்கையில் அர்ப்பணம் செய்கிறோம்.)*

**லக்ஷ்:** ஆஹா! ஆச்சரியம்! ஆச்சரியம்! அண்ணா, அதோ பாருங்கள், *(பார்த்து)* கஷ்டம்! இன்னமும் அண்ணா வுக்கு நினைவு வரவில்லையே.

*(பிறகு அருந்ததியும் சீதையும் வருகிறார்கள்.)*

**அரு:**

*18.* *(விரைவாய், வைதேகி! நாணத்தைச் சிறிது நீத்து, அன்புடன் கரத்தால் தொட்டு, என் மகனைத் தேற்றுவா )*

**சீதை:** *(பரபரப்புடன் தொட்டு)* வருந்த வேண்ட நாதா! வருந்தவேண்டாம்.

**ராமர்:** *(மூர்ச்சை தெளிந்து, ஆனந்தத்துடன்) ஆ! இது என்ன! (பார்த்து, ஆச்சரியத்துடன்) தேவி அல்லவா? (வெட்கத் துடன்) ஆ! அன்னை அருந்ததி, ரிச்யசிருங்கர், சாந்தா, நம் குருமார்கள், எல்லோரும் சந்தோஷத்துடன் கூடியிருக்கிறார்கள்.*

**அரு:** மகனே, இவள் பகிரத வம்சத்தின் கிருக தேவதை யான மாசற்ற கங்காதேவி.

*(திரைக்குள்)*

சக்கரவர்த்தி ராமச்சந்திரனே, சித்திரக் காட்சியைக் கண்ட தருணத்தில், என்னை நோக்கி, ''அன்னை அருந்ததிபோல் உன் மருமகளின் நன்மையைக் கருதுவாய்'' என்று நீ சொன்ன வசனத்தை நினைத்துக்கொள். அந்தக் கடனை இன்று நான் தீர்த்தேன்.

**அரு:** இவளே உன் மாமியார் பூதேவி.

*(மறுபடியும் திரைக்குள்)*

நீ என் மகளைத் துறக்கும் பொழுது, ''பகவதி பூதேவி, உன் உத்தம புத்திரியைப் பாதுகாப்பாய்' என்று கூறினாய் அல்லவா? என் எஜமானன் என்றும், மகள் என்றும் கருதி அந்தக் கடனை ஏற்று இன்று நான் அதைத் தீர்த்துவிட்டேன்.

**ராமர்:** நான் செய்த பெரிய பிழையை நீங்கள் இருவரும் எவ்வாறு மன்னித்தீர்கள்? உங்களுக்கு வந்தனம் செய்கிறேன்.

**அரு:** ஓ நாட்டு மக்களே. இந்த ஜானகி கங்காதேவி யாலும் பூதேவியாலும் போற்றப்பட்டு என்னிடம் அர்ப்பிக்கப் பட்டாள். முன்பு அக்கினி பகவானாலும் பரிசோதிக்கப்பட்டுத் தேவர்களாலும்ரிஷிகளாலும் புகழப்பட்டவள் இவள். சூரிய குலத்தாரின் மருமகள்; தேவ யாகத்தில் தோன்றியவள். ஆதலால், நீங்கள் அனைவரும் இவளை ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் அபிப்பிராயம் என்ன?

**லக்ஷ்:** அண்ணா! பகவதி அருந்ததியால் இவ்வாறு வற்புறுத்தப்பட்ட மகாஜனங்களும், எல்லா ஜீவராசிகளும் தேவியை நமஸ்காரம் செய்கிறார்கள். லோகபாலர்களும் சப்த ரிஷிகளும் மலர்மழை பொழிகின்றனர்

**அரு:** மன்னர் மன்னவ, ராமசந்திரா,

19. *(உன் இனிய இல்லாளை அறத்தில் உத்தமியை, நீ விரும்பி வரவேற்று, விதிப்படி வேள்வியில் புனிதத் தங்கப் பிரதிமையின் மூலப்பொருளான இவளையே அமர்த்தி இன்புறுவாயாக.)*

**சீதை:** *(தனக்குள்)* சீதையின் துன்பத்தைப் போக்க அவள் நாதனுக்கு நன்கு தெரியும்.

**ராமர்:** பகவதியின் ஆணைப்படியே.

**லஷ்:** என் மனோரதம் பூர்த்தியாயிற்று.

**சீதை:** நானும் புத்துயிர் பெற்றேன்.

**லஷ்:** தேவி, வெட்கமில்லாத லக்ஷ்மணன் அடிபணிகிறான்.

**சீதை:** நீ இப்படியே சிரஞ்சீவியாக இருப்பாயாக.

**அரு:** வால்மீகி பகவானே, சீதையின் கர்ப்பத்தில் தோன்றிய ராமசந்திரர்களின் இரு குமாரர்களான குசலவர்களையும் அவனிடம் ஒப்புவித்து விடுங்கள். *(போகிறாள்.)*

**ராம லக்ஷ்மணர்கள்:** நாம் நினைத்தவாறே ஆயிற்று.

**சீதை:** *(கண்ணீருடன்)* என் குமாரர்கள் எங்கே? *(வால்மீகியும், குசலவர்களும் வருகிறார்கள்.)*

**வால்மீகி:** குழந்தைகளே, குசலவர்களே, ரகுபதியான இவரே உங்கள் பிதா. இதோ நிற்கும் லக்ஷ்மணன் உங்கள் சிறிய தகப்பனார். இந்தச் சீதையே உங்கள் தாய். இந்த ராஜரிஷி உங்கள் தாத்தா, ஜனகர்.

**சீதை:** (துக்கத்துடனும், சந்தோஷத்துடனும்) என் தந்தையுமா?

**குசலவர்கள்:** தந்தையே! அம்மா! தாத்தா!

**ராம லக்ஷ்மணர்கள்:** (ஆனந்தத்துடன் ஆலிங்கனம் செய்துகொண்டு) பெரிய புண்ணியம் செய்ததனால் உங்களைப் பெற்றோம்.

**சீதை:** குழந்தாய் குசா, இங்கே வா. வத்ஸ லவா, என்னிடம் வா. மறுபிறப்புப் பெற்ற உங்கள் அன்னையை நன்றாகக் கட்டிக்கொள்ளுங்கள்.

**குசலவர்கள்:** (அப்படியே செய்து) நாங்கள் அதிருஷ்ட சாலிகள்.

**சீதை:** பகவானே, அடியேன் வணங்குகிறேன்.

**வால்மீகி:** மகளே, இப்படியே நெடுங்காலம் இருக்கக் கடவாய்.

**சீதை:** ஆச்சரியம்! என் தந்தை, குலகுரு, தம் கணவருடன் ஆரியை சாந்தை, லக்ஷ்மணன், என்நாதன், குசலவர்கள் - இவர்கள் யாவரையும் ஒரே சமயத்தில் பார்த்து ஆனந்தத்தால் பூரிக்கிறேன்.

(திரைக்குள் கலகலச் சப்தம்)

**வால்மீகி:** (எழுந்து பார்த்து) லவணாசுரனைக் கொன்றுவிட்டு மதுராதிபதி சத்துருக்னன் வந்துவிட்டான்.

**லவ்:** நன்மைகள் யாவும் ஒன்று கூடியே வரும்.

***ராமர்:*** இவற்றை யெல்லாம் அனுபவித்துக்கொண்டே இருந்தும் எனக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. இன்பத்தின் சுபாவம் இதுபோலும்!

**வால்மீகி:** ராமபத்திரா, உனக்கு நான் வேறு என்ன பிரியமான காரியம் செய்யவேண்டும்? கூறுவாய்.

***ராமர்:*** இதைவிட வேறு பிரியமான காரியமும் உண்டோ? ஆயினும் இதையும் பகவான் அருளவேண்டும்;

*20.* (தீமைகளைத் தொலைத்து உலகமெல்லாம் நன்மைகளைப் பெருக்கும் அன்னை கங்கைபோல் இன்பத்தைத் தரவல்லதும், நுண்ணிய மதியும் இனிய மொழியும் பொலியப் பெற்றதுமான உயர் கவியின் இந்நாடகத்தை அபிநயத்தோடு நன்கு இயற்றி நல்லோர் இன்புறுக.)

*(எல்லோரும் போகிறார்கள்.)*

**''கூடுதல்'' என்ற ஏழாம் அங்கம் முற்றிற்று.**

**மகாகவி பவபூதி இயற்றிய 'உத்தர ராம சரிதம்' என்ற நாடகம் முற்றிற்று.**

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை |
|---|---|
| கபிலர் | 70.00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20.00 |
| நாட்டிய நன்னூல் | 25.00 |
| சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் | 65.00 |
| கதிர்வேற்பிள்ளை-தமிழ் சொல்லகராதி, மூன்று பாகங்கள் | 600.00 |
| எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி-3 | 30.00 |
| காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் ஓர் ஆய்வு | 60.00 |
| திருக்குற்றாலநாத சுவாமி கோவில் வரலாறும் பண்பாடும் | 60.00 |
| திராவிட மொழியின் மூவிடப் பெயர் | 40.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 1 | 50.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 2 | 40.00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75.00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65.00 |
| தமிழக மேடைநாடகப்பெண்கலைஞர்கள்குறிப்பேடு | 25.00 |
| **A Grammar of Contemporary Literary Tamil** | 80.00 |
| **Cilappatikaram** | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | 125.00 |
| **Tani Pacura Togai** | 30.00 |
| **Dedication** | 25.00 |
| **Temple Chimes** | 20.00 |
| **Nala Venba** | 45.00 |
| **Tamil Heroic Poems** | 40.00 |
| **Six Long Poems from Sangam Tamil** | 30.00 |
| **Kurinci-p-pattu-Muttollayiram** | 40.00 |
| **Kuruntokai** | 110.00 |
| **Landscape and Poetry** | 50.00 |
| **Tamil Culture and Civilization** | 60.00 |
| **Tolkappiyam and Astadhyayi** | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50.00 |
| தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் பகுதி 1 | 50.00 |
| தடி வீரசுவாமிகதை வுன்னியராயன்கதை | 55.00 |
| சடத்தலம் | 40.00 |
| காத்தவராய நாடகம் | 30.00 |
| மதங்க சூளாமணி | 40.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |

---

உத்தர ராம சரிதம் விலை ரூ. 30/-